# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 26 திங்கட்கிழமை (10.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 045


# 40 போராளிகளுடன் சரணடைந்த புலிகளின் மன்னார் தளபதி எங்கே?

## கண்டுபிடித்துத் தருமாறு அவரது மனைவி கண்ணீர் மல்க ஆணைக்குழு முன் சாட்சியம்



மன்னார், ஜன. 10

**"மன்னார் மாவட்டத்தில் புலிகளின் சிறப்புத் தளபதியாக இருந்த எனது கணவர், 40 முக்கிய போராளிகளுடன் 18.05.2009 அன்று முல்லைத்தீவில் பங்குத் தந்தை வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் முன்னிலையில் இராணுவத்தினரிடம் சரணடைந்தார். இதுவரை அவர் பற்றி தகவல் எதுவும் இல்லை. எனது கணவர் இப்போது எங்கே இருக்கிறார் என்று தகவல் தாருங்கள்."**

இவ்வாறு இளம் தாயான ஆர்.வெரோனியா கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் கோரிக்கை விடுத்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் மடு உதவி அரச அதிபர் பணிமனையில் சாட்சியங்களைப் பதிவுசெய்தது. சுமார் 300 பேர் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கத் திரண்டிருந்தனர். இருந்தும் 20 பேருக்கு மட்டுமே சாட்சியமளிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இங்கு இருவர் இரகசிய சாட்சியமளித்தனர்.

உறவுகளை இழந்தவர்கள்,

(28 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆயுதக்கப்பலுக்கு அரசின் தகவல்களை பரிமாறியதாம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு

### கசிய விடுகிறது விக்கிலீக்ஸ்

கொழும்பு, ஜன. 10

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதக் கப்பல் தொடர்பான அரசின் தகவல்களை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தக்க சமயத்தில், புலிகளிடம் பரிமாறிக் கொண்டது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சுமத்தியுள்ள போதிலும், அந்தக் குற்றச்சாட்டை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட ட்ரைக்கோவ் டெலிப்சன் மறுத்துள்ளார் என்று விக்கிலீக்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அதிருப்தி வெளியிட்டிருந்தார் என்றும் அந்த இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விக்கிலீக்ஸ் மேலும் தெரிவித்தவை வருமாறு -

தமிழீழ விடுதலைப் புலிகளின் வடக்கு, கிழக்குக் கடற்பரப்பில் ஆயுதக் கப்பல் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட தகவல்களை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, புலிக

(28 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர சபைகளின் கால எல்லை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பு

கொழும்பு, ஜன. 10

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் போது மாநகர சபைகளுக்கு தேர்தலை நடத்தாது அவற்றின் கால எல்லையை இன்னும் ஒரு வருடத்துக்கு நீடிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியவை வருமாறு:-

மார்ச் மாதம் இலங்கையில் உள்ள பிரதேச மற்றும் நகர சபைகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட உள்ளன. ஆனால், மாநகர சபைகள் இன்னும் ஒரு வருடத்துக்கு செயற்படும்.

(28 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - தூத்துக்குடி இடையே அடுத்த மாதத்தில் கப்பல் சேவை

### வருட இறுதிக்குள் இராமேஸ்வரம்-தலைமன்னார் சேவை

கொழும்பு, ஜன. 10

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல்சேவை அடுத்த மாதம் ஆரம்பமாகும் என்று இலங்கையின் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் ரோகித அபேகுணவர்த்தன தெரிவித்தார். இந்தக் கப்பல் சேவை வாரத்தில் ஏழு நாள்களும் இடம்பெறும்.

இந்தச் சேவைக்காக இந்தியத் தரப்பில் நான்கு கப்பல்களும், இலங்கைத் தரப்பில் மூன்று

(28 ஆம் பக்கம் பார்க்க)

## கசூரினா சென்றவர்களில் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஜன.10

காரைநகர் கசூரினா கடற்கரையில் குளித்துக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் அலையில் சிக்கி உயிர் இழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மல்லாகத்தைச்

(28 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டின் பல பகுதிகளில் அடை மழை மூவர் உயிரிழப்பு, வீடுகள் பல சேதம்

கொழும்பு, ஜன. 10

நாட்டின் பல பாகங்களிலும் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக மூவர் உயிரிழந்துள்ளனர். 13 பேர் காயமடைந்துள்ளனர். அதேவேளை, 157,738 குடும்பங்களைச் சேர்ந்த 588,014 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளம் காரணமாக 669 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. 2,653 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. - இப்படி அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

பாதிப்புக்குள்ளான 1083 குடும்பங்களைச் சேர்ந்த 4010 பேர் 14 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே உயிரிழந்தனர் என்றும் அவர் கூறினார்.



வடகிழக்குப் பருவ பெயர்ச்சியுடன் கடந்த மாதம் ஆரம்பமான கடும் மழையினால் கிழக்கு மாகாணத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தனர். இவர்கள் 15 நாள்களுக்கு மேலாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, அண்மையில் மழை ஓய்ந்ததும் வீடு திரும்ப ஆரம்பித்தனர். இப்படியான நிலையிலேயே நேற்று முன்தினம் இரவு முதல் அடை மழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக மரங்கள் முறிந்து வீதிகளில் வீழ்ந்துள்ளதால், சில மாவட்டங்களுக்கிடையிலான தரை வழிப் போக்குவரத்தும் முற்றாகப் பாதிக்கப் பட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் சீரழிந்துள்ளது.

பாலங்கள், வீடு, மதில் என்பன இடித்து விழும் அபாயம் இருப்பதாக அங்கிருந்தும் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டி, நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களிலும் தொடரும் சீரற்ற காலநிலையினால் குறித்த பிரதேசங்களில் பல இடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் தரை வழிப் போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது. சில பிரதேசங்

(28 ஆம் பக்கம் பார்க்க)

## பேராதனையில் மண் சரிவு ஏழு பேர் புதையுண்டு மரணம்

### மேலும் பலர் சிக்கியிருக்கலாம் எனச் சந்தேகம்

கொழும்பு, ஜன. 10

கண்டி பேராதனையில் நேற்று மாலை ஏற்பட்ட மண் சரிவில் 5 வீடுகள் புதையுண்டன. அதனால், ஏழு பேர் உயிரிழந்தனர். மேலும் பத்து பேர் படுகாயமடைந்த நிலையில் கண்டி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனக் கண்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் மேலும் பலர் புதையுண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். மீட்புப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மண் சரிவுகள், வீடுகள் புதையுண்டமை தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின்

(28 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ்.பொம்மைவெளிப் பகுதி முஸ்லிம் மக்கள் பிரதேச செயலரைச் சந்திக்க முடியாது ஏமாற்றம்

## மனுவைக் கையளிக்காமல் திரும்பினர்



யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்ப்பாணம் பொம்மைவெளி மக்களை யாழ்ப்பாண பிரதேச செயலர் சந்திக்க மறுத்ததாகக் கூறபடுவதை அடுத்து அந்த மக்கள் பிரதேச செயலக முன்றலில் பல மணிநேரம் காத்திருந்தும் மனுக் கொடுக்க முடியாத நிலையில் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டி ஏற்பட்டதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

வெள்ள நிவாரண உதவிகள் எதுவும் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை எனக்கூறி கடந்த சனிக்கிழமை யாழ். பிரதேச செயலக முன்றலில் காத்திருந்த சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் இந்த முறைப்பாட்டைக் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

யாழ். பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அண்மையில் பெய்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட்டது. இந்த நிலையில் வெள்ள நிவாரணப் பொருள்கள் மற்றும் பணத் தொகை கிடைக்காததன் காரணமாக ஐம்பதுக்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் யாழ். பிரதேச செயலகத்தில் பிரதேச செயலரைச் சந்தித்து மனுக் கொடுக்கக் காத்திருந்தனர்.

காலை 8.30 மணி தொடக்கம் மக்கள் காத்திருந்த போதும் பிக்கப் வாகனத்தில் தனது அலுவலகத்துக்கு வருகை தந்தார் பிரதேச செயலர்; வாகனத்தில் இருந்தவாறே அங்கு நின்ற கிராம அலுவலர்களுடன் உரையாடி விட்டு அங்கிருந்து உடனடியாக வெளியேறிவிட்டார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் தாம் காத்திருப்பது பிரதேச செயலருக்குத் தெரிந்தும் தம்மை அவர் சந்திக்காது சென்று விட்டதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அந்த மக்கள் கையளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட மனுவில் கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கப்பட்ட பதிவுகள் பாரபட்சமானவையென்றும் அதன் காரணமாகவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எமக்கு எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-14)

## இன்று பிரியாவிடை

சாவகச்சேரிப் பிரதேச சபையின் செயலாளராகப் பணிபுரிந்து ஒய்வுபெறும் வே.சிவராஜலிங்கத்தின் பிரியாவிடை நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்குசாவகச்சேரி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும். முகாமைத்துவ உதவியாளர் திருமதி கௌரீஸ் வரிவிக்னகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்வார். (ஒ-10-131)

## சாவகச்சேரி விபத்தில் மாணவி படுகாயம்

சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை தனியார் பஸ் ஒன்று சைக்கிளில் மோதியதில் அதில் பயணித்த இளம்பெண் படுகாயமடைந்தார்.

சம்பவத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவியான பொன்னம்பலம் தர்சினி (வயது-23) என்பவரே இரண்டு கால்களும் முழங்காலுக்குக் கீழ் நசியுண்டு படுகாயம் அடைந்தவர் ஆவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் வீதியால் சென்று கொண்டிருந்த மாணவியுடன் மோதுண்டதில் அவர் கீழே விழுந்தார். அச்சமயம் அவரின் காலுக்கு மேலாகப் பஸ் ஏறிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த பெண் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ-10-1131)

## பன்றிக் காய்ச்சலின் தாக்கம் தணிந்து வருவதாக அமைச்சர் சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.10

பன்றிக் காய்ச்சல் நோயின் பரவுகை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன நாடாளு மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சு அண் மைக் காலங்களில் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் மூலம் இந்நோயின் தீவிரம் கட்டுப்படுத்தப் பட்டுள்ளதாகவும் தேவையேற்படின் தேவையான தடுப்பூசிகளை விமானம் மூலம் தருவிக்கத் தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கைவசம் இருந்த தடுப்பூசிக ளின் ஆயுள்காலம் ஜனவரி 8 ஆம் திகதியுடன் முடிவடைந்து விட்டது. எனினும் தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ள முடியாதவர்கள் நோய்த்தாக்கத்துக்கு உள்ளானால் அவர்களுக்கு சிகிச்சையளிக்க அவசியமான சகல மருந்துகளும் வைத்தியசாலைகளின் கையிருப்பில் உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் எம்.பி. அநுர குமார திசாநாயக்க எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். (ஒ-5)

# தமிழர்களின் தனித்துவத்தைப் புரிந்துகொண்டு பொருத்தமான தீர்வை முன்வைக்க வேண்டும்

## மன்னார் ஆயர் தலைமையிலான குழு நல்லிணக்க ஆணைக்குழுவுக்குச் சாட்சியம்



மன்னார், ஜன. 10

★ தமிழர்களின் தனித்துவத்தை - அடையாளங்களைப் புரிந்துகொண்டு அவர்களுக்கான பொருத்தமான அரசியல் தீர்வைக் கொடுக்க வேண்டும்.

★ எதிர்காலத்தில் பிரச்சினைகளையும் வன்முறைகளையும் தடுப்பதற்கு ஒரு கருவியாக நல்லிணக்க ஆணைக்குழு இருக்கும் என்பது எமது நம்பிக்கையாகவும் இருக்கிறது. அத்துடன் சாதகமான தன்மையை வெளிப்படுத்தி நல்லிணக்கத்தைக் கொண்டுவரும் என்றும் நாம் நம்புகிறோம்.

- இவ்வாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப்பு ஆண்டகை தலைமையில் அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளார் மற்றும் குரு முதல்வர் விக்டர் சோசை அடிகளார் இணைந்து கூட்டாகச் சாட்சியம் அளித்தனர்.

கடந்த சனிக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நல்லிணக்க ஆணைக்குழு கூடியது.

மன்னார் ஆயர் எழுத்து மூலம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த ஆணைக்குழு இரண்டு விஜயத்தை மேற்கொண்டு இங்குள்ள மக்களின் சாட்சியங்களைப் பதிவு செய்தது. அத்துடன் மடு உதவி அரச அதிபர் பிரிவுக்கும் சென்று அங்கும் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

மன்னாரில் ஆணைக்குழு முன் ஆயர் தலைமையிலான குழுவினர் சாட்சியமளிக்கையில் கூறிய முக்கிய அம்சங்கள் வருமாறு :-

மன்னார் மாவட்டத்தில் மூன்று தசாப்தங்களாகப் பல்லாயிரக்கணக்கானோர் பாதிப்பு அடைந்திருக்கின்றார்கள். இருந்தும் எமக்கு கொடுக்கப்பட்ட அமர்வுக்கான காலம் போதாமையாகவே இருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வும், நல்லிணக்கமும் எட்டப்படுமாயின் நாம் 2002ஆம் ஆண்டுக்குக் பின்நோக்கி இன்னும் கடந்து இனப்பிரச்சினையின் ஆரம்ப காலத்தில் இருந்து நடந்த சம்பவங்களை இந்தக் குழு ஆராய வேண்டும் என கருத்து வெளியிடுகின்றோம்.

உண்மையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகளோ, அல்லது ஏனைய ஆயுதக் குழுக்களோ தமிழர் பிரச்சினையின் காரணம் அல்ல. மாறாக தமிழர் பிரச்சினையை அரசுகள் கையாண்ட முறைகளின் விளைவாக தோன்றியதே இக் குழுக்கள் என்பதை கூறி வைக்க விரும்புகின்றோம்.

அடிப்படைக் காரணங்களாகிய தமிழ் மக்களுடைய அரசியல் யதார்த்தம் மொழி, நிலம், கல்வி, அரசியல் அதிகாரப் பகிர்வு, இவற்றைப் புரிந்து கொள்ளும் போதுதான் நல்லிணக்கத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கலாம், பாடங்களையும் கற்றுக் கொள்ளலாம்.

கடந்தகாலங்களில் இடம்பெற்ற சம்பவங்களின் உண்மைத் தன்மையை அறிக்கையிடுவதும், அதை ஏற்றுக் கொள்வதும் இன்றியமையாதது என நம்புகின்றோம்.

குறிப்பாக சர்வதேச மனித உரிமைகள், மனிதாபமான நியமங்களுக்கு (சட்டங்கள்) எதிரான மீறல்கள்,

★ வன்முறையாகக் காணாமற் ஆக்குதல்.

★ நீதிக்கு அப்பாற்பட்ட கொலைகள்.

★சட்டத்திற்குப் புறம்பாகத் தடுத்துவைத்தல்.

★ சித்திரவதைகள்.

★ வழிபாட்டுத்தலங்கள், வைத்தியசாலைகள், மக்கள் குடியிருப்புக்கள் மீது நடாத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சு, எறிகணை வீச்சு ஆகியனவும் இவற்றைச் செய்யும்படியாகக் கட்டளை இட்ட அதிகாரிக்ளின் பொறுப்பும் வெளிப்படையாகவே அறிவிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மன்னிப்பதற்கும் அல்லது பொது மன்னிப்பு வழங்குவதற்கும் அறிக்கையிடலும், ஏற்றுக் கொள்ளலும் அவசியம் என்றே கருதுகின்றோம்.

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் ஏனைய இனத்தவரோடு சேர்ந்து ஒரே நாட்டிலே வாழ்ந்தாலும் அவர்களுக்கென விசேட அடையாளங்களாகிய பண்பாடு, மொழி, மதம் வரலாறு விடம் உண்டு என்பதை ஏற்றுக் கொண்டு இதன் வழியாக ஓர் அரசியல் தீர்வை மக்களுக்குக் கொடுக்க வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கம் சிறுபான்மையினருடைய உரிமைகள் அரசியல் அமைப்பிலே ஆழமாகப் பதியப்படல் வேண்டும்.

அரசியலமைப்பும், நீதித்துறையும் எந்தவொரு இனம், மதம், குழுவிற்கு சார்பாக இருக்கக் கூடாது. அது தெரியவும் கூடாது. அந்த வகையில் அரசியல் தீர்வு ஊடாக பிரச்சினைகள் களையப்பட வேண்டும்.

உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள்.

★ வன்முறையாகக் காணாமற் ஆக்குதல்

★ தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள்

★ நீதிக்குப் புறம்பான விசாரணைகள் அற்ற

★ போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு

★ முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு.

★ நிரந்தர வீடுகள், வாழ்வாதாரம், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து வசதிகள்.

★ இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீண்டும் தமது சொந்த மண்ணில் மீள் குடியேறுவதற்கு சாதகமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பனவேயாகும் எனத் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டோர் விவரம் திரட்டப்படுவது கண்டனத்துக்குரியது

## சிறி தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன.10

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் பின்னர் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளின் செயற்பாட்டையும் அவர்கள் தொடர்பான தரவுகளையும் புலனாய்வுப் பிரிவினர் திரட்டி வருவதனால் அவர்கள் அச்சமடைந்திருப்பதுடன், மனவிரக்தியும் அடைந்துள்ளனர்.

சிறி தமிழ் ஈழ விடுதலை இயக்கம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு மேலாகத் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு புனர்வாழ்வு அளித்து நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனைத் தமிழ் மக்களின் நலன் பேணும் கட்சி என்ற வகையில் சிறி ரெலோ கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுக்கப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் கடந்தகால கசப்பான நினைவுகளை மறந்து சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற இக் காலகட்டத்தில் அவர்கள் மீது இவ்வாறான செயற்பாடுகள் திணிக்கப்படுகின்றன.

அவர்களும், அவர்கள் சார்ந்த சமூகமும் மீண்டும் ஒரு தடவை கடந்த கால நினைவுகளை நினைத்துப் பார்க்க இது வழி வகுப்பதுடன் தவறான வழிக்கு அவர்களை இட்டுச் செல்லும் என்பதனை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

இதனை இன்று நாம் அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எத்தனையோ பாதுகாப்புப் படைவீரர்கள் படைகளிலிருந்து தப்பியோடி இருப்பதுடன், வேண்டப்படாத சம்பவங்களிலும் அவர்கள் ஈடுபடுகின்றனர்.

அவர்கள் மன்னிக்க முடியாத விரோத செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு காரண கர்த்தாவாக உள்ளனர். அதனைத் தட்டிக் கேட்காத அரசு ஏன் தமிழ் இளைஞர், யுவதிகள் மீது இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

ஒன்றுபட்ட எமது நாட்டில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகளை சுதந்திரமாக வாழவிடாது நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்ற நோக்கோடு இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளை உரிய்முறையில் பயன்படுத்திக் கொள்கின்றார்களா என அறியும் பொருட்டே இவ்வாறான விவரங்கள் திரட்டப்படுகின்றன என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டிருப்பது நகைப்பிற்கு உரியதாகவே இருக்கிறது என்பது வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் கணிப்பாக இருக்கின்றது.

எது எவ்வாறு இருப்பினும் புனர்வாழ்வு அளித்து விடுவிக்கப்பட்டிருக்கின்ற தமிழ் இளைஞர், யுவதிகள் மீது மேற்கொள்ளப்பட்டுவருகின்ற இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிறி ரேலோ கட்சி வேண்டுகோள் விடுக்கிறது.- என்றுள்ளது. (ம)

## வீதியில் ஏற்பட்ட குழியை செப்பனிடக் கோரிக்கை

குருநகர், ஜன.10

யாழ்.வேம்படி வீதியில் 2ஆம் குறுக்கு வீதிக்கு தெற்குப் புறத்தில் அமைந்துள்ள கியு மெடிக்கா வைத்திய நிலையத்துக்கு முன்னால் உள்ள வேம்படி வீதியின் ஒரு பகுதி உடைந்து குழியாகக் காணப்படுகிறது.

இந்தக் குழியில் பொதுமக்கள் தவறிவிழுந்து விடக்கூடாது என்பதற்காக மரக்கிளை யொன்று குழிக்குள் வைக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி குழியைச் செப்பனிட்டுப் போக்குவரத்தை இலகுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு சம் பந்தப்பட்டோருக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக தொடர்ந்து பெய்த மழை காரணமாக யாழ். குடாநாட்டில் உள்ள வீதிகள் பலவும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-135)

# கிழக்கு வெள்ள அகதிகளுக்கு தங்குமிட வசதி, சமைத்த உணவு

## அமைச்சர் ஹக்கீம் அவசர கோரிக்கை



கொழும்பு, ஜன. 10

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்குமிட வசதியும், சமைத்த உணவும் வழங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படி நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சுனில் கன்னங்கரவுக்க பணிப்புரை வழங்கியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் நேற்றும் கடும் மழை பெய்ததுடன், வீதிகள் உட்பட பல நூற்றுக்கணக்கான வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. மக்கள் மழை காரணமாக இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். அவர்களுக்குத் தேவையான நிவாரண நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் ஹக்கீம் கவனம் செலுத்தி வருகிறார்.

# 308 உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஆளும் தரப்பு வேட்பாளரை நிறுத்தும்

கொழும்பு, ஜன. 10

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 308 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்துமென அக்கட்சியின் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடு முழுவதுமுள்ள 330 மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றில் 308 சபைகள் ஆகியவை கடந்த 6ஆம் திகதி கலைக்கப்பட்டமை தெரிந்ததே. கலைக்கப்பட்ட 308 சபைகளிலும் ஐ.ம.சு. கூட்டமைப்பு சார்பில் போட்டியிட பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன என்றும் அவர் சொன்னார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான தேசியக் குழுவொன்று ஐ.ம.சு.கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரத்துக்கென நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் பிரதமர் டி.எம்.ஜயரட்ன, அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, டளஸ் அழகப்பெரும, பஸில் ராஜபக்ஷ, சுசில் பிரேமஜயந்த, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் நேர்முகப் பரீட்சைகள் இன்று முதல் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

# புலிகளைத் தோற்கடித்த விதம் குறித்து விளக்க கொழும்பில் சர்வதேச மாநாடு

## 80 நாடுகளுக்கு அரசு அழைப்பு

கொழும்பு,ஜன.10


முப்பது ஆண்டுகளாக நடந்து வந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்ட விதத்தை விளக்கும் சர்வதேச மாநாடு எதிர்வரும் மே மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொழும்பில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள 80 நாடுகளின் இராணுவத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட யுத்த தந்திரங்கள், அணுகுமுறைகள், தாக்குதல்கள் போன்றவை பற்றிய விவரங்கள் இம்மாநாட்டில் தெளிவுபடுத்தப்படவுள்ளன.

இம்மாநாட்டை நடத்துமாறு பல்வேறு நாடுகள் வேண்டுகோள்கள் விடுத்திருந்தன என்றும் மாநாட்டில் புலிகளின் யுத்தத் தந்திரங்கள், பாவித்த ஆயுதங்கள் அந்த ஆயுதங்களை அவர்களுக்கு வழங்கி உதவிய நாடுகள் போன்ற விவரங்கள் தெளிவுபடுத்தப்படும் என்று பிரசாத் சமரசிங்க மேலும் கூறினார். (ஒ-5)

# பேராசிரியராகப் பதவி உயர்வு



யாழ்ப்பாணம், ஜன. 10

கலாநிதி கு.மிகுந்தன் விவசாய உயிரியல் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீடம் ஆரம்பித்த காலத்திலிருந்து விரிவுரையாளராக இணைந்து கொண்ட இவர் விவசாய உயிரியல் துறையில் பல்வேறு பதவி நிலைகளையும் கடந்து தற்போது அத்துறையில் முதலாவது பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

விவசாய விஞ்ஞானப் பட்டப்படிப்பைத் தமிழ்நாடு கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்திலும் பயிர் காப்பியல் முதுகலைமாணிக் கல்வியைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தினது விவசாய மேற்படிப்பு நிலையத்திலும் கற்றார். இந்திய அரசினது புலமைப் பரிசில் பெற்றுத் தனது கலாநிதிப் பட்டப் படிப்பை பெங்களூரில் உள்ள வேளாண் விஞ்ஞானப் பல்கலைக்கழகத்திலும் கற்றார்.

தனது ஆய்வுக் கட்டுரைகளை அமெரிக்கா, பெல்ஜியம், நெதர்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற உலகளாவிய ரீதியிலான ஆய்வு மாநாடுகளில் சமர்ப்பித்ததுடன் உலகளாவிய ஆய்வு இதழ்களிலும் பிரசுரித்துள்ளார். கடந்த ஆண்டு விஞ்ஞானத்தை மக்களிடையே பரப்பியமைக்காக விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் தேசிய விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினது விவசாய பீடத்தில் விவசாய உயிரியல் துறையின் தலைவராகவும் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் அலகின் பணிப்பாளராகவும் பணிபுரியும் இவர் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினது இவ்வாண்டுத் தேர்வுத் தலைவராகப் பணிபுரிகின்றார்.

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் விவசாய ஆராய்ச்சித் துறையில் ஆராய்ச்சி உத்தியோகத்தராகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு வே.குணசிங்கம் அவர்களினதும் சரோஜினிதேவி அவர்களினதும் புத்திரனாவார்.

# 14 லட்சத்து 61 ஆயிரம் பனம் விதைகள் நாடு முழுவதும் நடப்பட்டுள்ளன

கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட பனம் விதை நடும் திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்கள் உள்ளடங்கலாக நாட்டில் 14 லட்சத்து 61 ஆயிரத்து 828 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

அதில் 10 லட்சத்து 43 ஆயிரத்து 298 பனம் விதைகள் குழிகளிலும், 4 லட்சத்து 18 ஆயிரத்து 530 பனம் விதைகள் நாற்றுப் பாத்திகளிலும் நடுகை செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாணத்தில் 2 லட்சத்து 87 ஆயிரத்து 778 பனம் விதைகள் குழிகளிலும், 3 லட்சத்து 80 ஆயிரம் பனம் விதைகள் நாற்றுப் பாத்திகளிலும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில் 70 ஆயிரத்து 800 விதைகளும், கிளிநொச்சியில் 2 லட்சத்து 17ஆயிரத்து 500 விதைகளும், வவுனியாவில் 61 ஆயிரம் பனம் விதைகளும், மன்னாரில் ஒரு லட்சத்து 24 ஆயிரம் விதைகளும் குழிகளில் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இதே போல் திருகோணமலையில் 54 ஆயிரத்து 620 பனம் விதைகள் குழிகளிலும் 62 ஆயிரத்து 760 விதைகள் நாற்றுப் பாத்தியிலும் மட்டக்களப்பில் 92 ஆயிரத்து 850 விதைகள் குழிகளிலும் 7ஆயிரத்து 150 விதைகள் நாற்றுப் பாத்தியிலும் நடப்பட்டுள்ளன.

கற்பிட்டியில் 45 ஆயிரத்து 250 விதைகளும், கல்முனையில் 89 ஆயிரத்து 500 விதைகளும் குழிகளில் நடப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (ம-14)

# அராலியில் நேற்று பட்டப்பகலில் வீடு புகுந்து பணம், உடைமை சூறை

யாழ்ப்பாணம்,ஜன.10

அராலி-செட்டியார்மடம் பகுதியில் பட்டப்பகலில் கதவு உடைத்து உள்ளே சென்ற திருட்டுக் கோஷ்டியினர் ஒரு தொகுதி பணம் மற்றும் உடைமைகளைச் சூறையாடிச் சென்றுள்ளனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் திருமதி சுப்பிரமணியம் பூரணம் (72 வயது) என்பவரது வீட்டிலேயே பட்டப்பகலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினம் தனிமையில் இருந்த மூதாட்டி அயலில் உள்ள ஒருவரை சுகயீனம் விசாரிக்கச் சென்ற வேளையில் அங்கு சென்ற திருட்டுக் கோஷ்டி கதவுகளை உடைத்து உள்ளே புகுந்து பொருள்களையும் பணத்தையும் சூறையாடிச் சென்றுள்ளது.

பொலிஸார் கொலை, கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக ஒலிபெருக்கி மூலம் வீதிவழியே அறிவித்தல் விடுத்துக் கொண்டு செல்லும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-302)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனைவரும் பார்வையிட வேண்டிய நீரிழிவை வெற்றிகொள்வோம் கண்காட்சி

யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சைப் பிரிவு நடத்தும் 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' என்ற சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சியின் இரண்டாம் நாளான நேற்றும் நூற்றுக்கணக்கான மக்கள் பார்வையிட்டுச் சென்றதனை அவதானிக்க முடிந்தது.



யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா ஆரோக்கிய உணவு செய்வோம் என்ற நூலை வெளியீட்டு வைக்க அதன் முதற்பிரதியை விரிவுரையாளர் ரி.அருணகிரிநாதன் பெற்றுக்கொள்கிறார்.

நிகழ்வின் ஓர் அங்கமாக 'ஆரோக்கிய உணவு செய்வோம்' என்ற நூல் வெளியிடப்பட்டது. நல்லூர் நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் இந்த நீரிழிவு விழிப்புணர்வுக் கண்காட்சி எதிர்வரும் 12ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

கடந்த இரண்டு தினங்களும் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இதனைப் பார்வையிட்டுள்ளதாகக் கண்காட்சியின் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

'உதயன்' ஊடக அனுசரணையுடன் இடம்பெற்று வரும் இந்தக் கண்காட்சி நிகழ்வுக்கான நிதி அனுசரணையினை அமெரிக்காவின் 'ஐஎம்ஏச்ஒ' என்ற நிறுவனம் வழங்கியுள்ளது.

**வைத்திய அதிகாரி சி.பரமேஸ்வரன்**
யாழ்.போதனா வைத்தியசாலை,
நீரிழிவு சிகிச்சைப் பிரிவு



யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சைப்பிரிவினால் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தக் கூடிய விதத்தில் ஒவ்வொரு வருடமும் இக்கண்காட்சியை நடத்தி வருகின்றோம்.

இக் கண்காட்சி தொடர்ந்து 5 நாள்கள் நடைபெற இருப்பதால் அனைவரும் இதனைப் பார்த்துப் பயன் பெறலாம்.

நீரிழிவு பற்றி விழிப்புணர்வு இல்லாதவர்கள் வராமல் எவ்வாறு தடுப்பது, வந்தபின் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள், உணவுப்பழக்க முறைகள், மருந்துவப்பாவனை முறைகள் போன்றவற்றுக்கு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

நீண்ட காலமாக நீரிழிவு உள்ள ஒருவர் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், அவற்றை தடுக்கும் வழிகள் என்பவற்றுக்கு தனிப்பட்ட, குழுநிலை ரீதியில் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநிலைத் தாக்கங்கள் ஏற்படாமல் தவிர்ப்பது தொடர்பாகவும் குழந்தைகள், கர்ப்பிணிகளுக்கு நீரிழிவு நோய்தாக் காமல் பாதுகாக்கும் வழிமுறைகள், நோயினால் அவயங்களை இழந்தவர்கள் வாழ்வைச் சிறந்த முறையில் எவ்வாறு அமைப்பது தொடர்பான மாதிரி உருவங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தொகுப்பு:
**சக்தி, நிஸா**

விழிப்புணர்ச்சி தொடர்பான புத்தகம், சி.டி போன்றனவும் விற்பனை செய்யப்படுகின்றன. நீரிழிவு நோயாளிக்குரிய (குளுக்கோ மாணி மீற்றர்) குறைந்த விலையிலும் பெற்றுக் கொள் எலாம்.

குருதிப்பரிசோதனை, கண் பரிசோதனை இவை இலவசமாக வழக்கப்படுவதால் அனைவருக்கும் இக் கண்காட்சி பயனுள்ளதாக அமையும்.

**ப.சயந்தன், தெல்லிப்பழை**



இந்தக் கண்காட்சியில் நீரிழிவு பற்றிய பல அறியாத விடயங்களைக் கண்டும் கேட்டும் அறிந்தேன்.

இந்தக் கண்காட்சியைப் பார்க்குமாறு எனது பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும் என நினைக்கிறேன்.

நான் பெற்றுக் கொண்ட தகவல்களை நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்குத் தெரியப்படுத்தக் கூடிய விதத்தில் பூரணமான அறிவைப் பெற்றுக்கொண்டேன்.

வயது வித்தியாசமின்றி அனைவரும் விளங்கக் கூடிய விதத்திலும் பல தகவல்களைத் தந்தார்கள்.

இதுபோன்ற கண்காட்சிகள் பாடசாலைகளிலும் நடைபெறவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.



நூல்வெளியீட்டு நிகழ்வின்போது இடம்பெற்ற சிறுவர் கலை நிகழ்வு

**திருமதி விஜயலக்சுமி, ஊர்காவற்றுறை**



பாடசாலை மாணவர்கள் அறியக் கூடிய பல தகவல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. முக்கியமாக நீரிழிவு நோயாளருக்கான சிறந்த உணவுப் பழக்கத்தைப் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். அவ்வாறு யாரும் கடைப்பிடிப்பதும் இல்லை. இங்கு அதுபற்றி செயல்முறை ரீதியாக விளக்கத்தைக் கொடுத்தார்கள். இதுவே நோயாளர் நீரிழிவில் இருந்து மீள்வதற்குப் பயனுள்ளதாக உள்ளது.

பட விளக்கங்களும், செயல் முறை விளக்கங்கள் சிறுபிள்ளைகளும் விளங்கக்கூடிய விதத்தில் பல கருத்துக்களைக் கூறினார்கள்.



கண்காட்சி நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்ட விளக்கக் குறிப்புகள்

**எஸ்.நிலோறஸ், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை**



நீரிழிவு பற்றி பூரண அறிவைப் பெறக்கூடியதாக இருந்தது. நான் தரம் - 11 இல் கல்வி கற்பதால் எமது பாடங்கள் சம்பந்தமான விளக்கங்களையும் பெற்றுக்கொண்டேன்.

பெரியவர்களுக்கு மட்டுமல்லாமல் பாடசாலை மாணவர்களுக்கும் இந்தக் கண்காட்சி பயனுள்ளதாக அமைந்துள்ளது.

கண்காட்சி முடிவில் எமது நீரிழிவு பற்றிய அறிவுத் திறனைப் பெற்றுக் கொண்டுள்ளோமா? என கணினி முறையில் பரீட்சை வைத்துச் சான்றிதழ் வழங்கினார்கள். இவை இன்னும் மேலதிகமாக நீரிழிவு பற்றிய தகவலைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தூண்டுகிறது.

## சுகவாழ்வுக்கான மாபெரும் கண்காட்சியும் விழிப்புணர்வு வார நிகழ்வுகளும்

நீரிழிவுச் சிகிச்சை நிலையம் யாழ்.போதனா வைத்தியசாலை

இடம் : நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபம்
காலம் : 08.01.2011 முதல் 12.01.2011 வரை
காலை : 8.30 மணி - மாலை 7.30 மணிவரை

**உள்ளடக்கம்**

★ நீரிழிவு நோய் வருமுன் காப்பது எப்படி?
★ நீரிழிவு வந்தபின் வாழ்வது எப்படி?
★ கர்ப்ப காலத்திலிருந்தே குழந்தைகளைக் காப்பது எவ்வாறு?
★ நீரிழிவு நோயின் உளத்தாக்கங்களும் பரிசோதனைகளும் சிகிச்சை முறைகளும்
★ நீரிழிவின் பாதிப்புகள்

★ குறைந்த செலவில் இரத்த, சலப் பரிசோதனைகள் செய்து கொடுக்கப்படும்.
★ இலவச கண் பரிசோதனை
★ குளுக்கோஸ் மற்றும் இரத்த அழுத்தத்தை அளவிடும் மீற்றர் குறைந்த விலையில் வாங்கலாம்.
★ நீரிழிவு, உயர் குருதியமுக்கம், நுளம்புடன் ஒரு குருசேத்திரம், நீரிழிவை வெற்றிகொள்வோம், 2010 கண்காட்சி பற்றிய CD கள் விற்பனைக்குண்டு.
★ 'ஆரோக்கிய உணவு செய்வோம்' புத்தக வெளியீடு
★ உங்களுக்கு இனிவரும் காலங்களில் நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு உண்டா என்பதும் அதற்கான தடுப்பு முறைகளும் கூறப்படும்.
★ தனிப்பட்ட மற்றும் குழுநிலை ஆலோசனைகள் வழங்கப்படும்.
★ நீரிழிவுச் சிகிச்சை நிலைய ஆய்வுகளின் முடிவுகள் வெளியிடல்.
★ கலை நிகழ்ச்சிகள், இன்னும் பல.........

நீரிழிவு மற்றும் கொலஸ்ரோல் பரிசோதனைகளை மேற்கொள்ள விரும்புவோர் 12 மணித்தியாலங்கள் உணவு அருந்தாத நிலையில் வருகைதர வேண்டும்.

## நிகழ்ச்சி நிரல்

இன்று (10.01.2011) பிற்பகல் 4.00 மணி
★ வரவேற்புரை
★ நீரிழிவு சிகிச்சை நிலைய வளர்ச்சியும் சிகிச்சையும்
வைத்திய கலாநிதி R.பரமேஸ்வரன்
★ 'பழங்களும் நீரிழிவும்' - நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள்.
வைத்திய கலாநிதி திருமதி P.செல்வகரன்
★ கவியரங்கம்
★ நன்றியுரை

நாளை (11.01.2011) பிற்பகல் 4.00 மணி
★ வரவேற்புரை
★ நடனம்- தாதிய மாணவர்கள்
★ நாடகம்- தாதிய மாணவர்கள்
★ நன்றியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மக்கள் பாதுகாப்பு நலனை விரைவு படுத்துக!

குடாநாட்டில் தொடரும் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல், காணாமற் போதல் போன்ற சம்பவங்களை, மக்களைக் கடந்த சுமார் இரண்டு மாதங்களாக உறைய வைத்துள்ள சம்பவங்களை, நிறுத்துவதற்கு, முற்றுப்புள்ளி வைப்பதற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்று பொலிஸ் மா அதிபர் கலாநிதி மஹிந்த பாலசூரியா உறுதி அளித்துள்ளார்.

குடாநாட்டில் சகல பகுதிகளுக்கும் விசேட பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படும் என்று குடாநாட்டு மக்களுடன் நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பின் போது பொலிஸ்மா அதிபர் அறிவித்தார்.

கடந்த சுமார் ஒன்றரை மாதங்களாக குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு மாண்டு போன கதை புதியதல்ல. இருள் கவிந்ததும், அன்றைய இர்வு எந்த ஊரில், எந்த வீட்டில் கொள்ளை, கொள்ளைக்கு வந்த போர்வையில் கொலை, ஆள் கடத் தல், காணாமற் போகச் செய்தல் என்ற மிகப் பாரதூர மான குற்றச் செயல்கள் இடம்பெறுமோ, அந்த நிலை தமது வீட்டு வாசலுக்கும் வந்துவிடுமோ என்ற ஏக்கத்துடனேயே குடா நாட்டு மக்கள் அனைவரும் இரவைக் கழிக்கின்றார்கள்.

போர் முடிவதற்கு முந்திய காலத்தில், அவசரகாலச் சட்டமும், தொடர் ஊரடங் குகளும் சுற்றிவளைப்புகளும், இராணுவம் வீட்டுக்கு வீடு வந்து விடுதலைப் புலிச் சந்தேக நபர் அல்லது ஆதரவாளர் என்று முத்திரை குத்தி நடத்திய கைது கள், காணாமற் போகச் செய்தல், கொலைகள் என்பன தாராளமாக நடைபெற்ற இருண்ட காலத்திலிருந்து-

குடாநாட்டில் மக்களின் வாழ்க்கையில் சிறிது வெளிச்சம் தோன்றியது. இனிமேல் தமக்கு நிம்மதிக் காற்றுவீசும், வீடுகளிலும் வீதிகளிலும் சுதந்திரமாக வசிக்கலாம், நடமாடலாம் என்று மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டதைப் பொறுக்க முடியாத சக்திகள் குடாநாட்டில் மீண்டும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன.

இவற்றுக்குப் பின்னால் கண்ணுக்குப் புலப்படாத ஓர் உந்து சக்தி, இல்லாமல் குடாநாடு மீண்டும் மேலே குறிப்பிட்ட வன்செயல்கள், அராஜகங்கள் நிறைந்த பூமியாக அதிவேகத்தில் மாறியிருப்பது அசாத்தியம்.

மீண்டும் முந்திய நிலை தலையெடுத்து, சொற்ப கால பீதியற்ற இயல்பு வாழ்க்கை மங்கிப் போகச் செய்வதில் அரூ பக் கரங்கள் சேர்ந்திருக்கின்றனவோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் நெடிது எழுந்து நிற்கின்றது.

அந்த அரூபக் கரங்களை இனம் காண்பதும், மக்களின் பீதியைப் போக்குவதும் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதும் குடாநாட்டில் உறைந்து போயுள்ள இயல்பு நிலை வாழ்க்கையை மக்களுக்கு மீட்டுக் கொடுக்கும் பெரும் பொறுப்பும் தட்டிக்கழிக்க முடியாத கடமையும் பொலிஸாரிடமும் படையினரிடமுமே உண்டு.

அந்த வகையில், பொலிஸ்மா அதிபர் தாமே வந்து நிலைமைகளை நேரில் கண்டறிந்து சட்டத்தை யும் ஒழுங்கையும் மீள்விப்பதற்கு உரிய ஏற்பாடுக ளைச் செய்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

குடாநாட்டில் மீண்டும் வன்முறைகள் மலிந்து வருவது, அனைத்துலக மட்டத்தில் அரசுக்கு அவப் பெயரைத் தேடித்தரும் என்ற அம்சத்தையும் உணர்ந்து தடுப்பு நடவடிக்கைகள் விரைவு படுத்தப் பட வேண்டும்.

குடாநாட்டு மக்களை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ்மா அதிபர் நேற்று முன்தினம் குடாநாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதி, அரசியல் தலைவர்களின் வாக்குறுதி போலன்றி செயல்வடிவம் பெறுவது அத்தியாவசியம்.

அதே போன்று-

அண்மைக்காலமாக, குடாநாட்டில் இடம்பெறும் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல், காணாமற் போதல், அதாவது காணாமற் போகச் செய்தல் என்ற சம்பவங் களால் மக்கள் பீதியடைந்த நிலையில் உள்ளனர் என்ப தனை யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துறு சிங்க வெளிப்படுத்தியிருப்பதும்-

அந்த நிலையைப் போக்குவதற்கு படையினரும் பொலிஸாரும் இணைந்து ரோந்து மற்றும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்துள்ளதாக அறிவித்திருப்பதும் மக்களுக்கு ஆறுதல் அளிப்பதாக அமையும்.

போர் நடைபெற்ற காலங்களில், படையினர் நடத்திய இரவுநேர ரோந்துகளும் சோதனைகளும் உண்டாக்கிய இயல்பு நிலைக்குப் பாதகமான அனுபவங்கள், துன்பங்கள் குடாநாட்டு மக்களின் மனங்களில் இருந்து இன்னமும் திரைவிலகவில்லை. அத்தகைய அனுபவம் மீண்டும் ஏற்படாதவாறு அமைதி நிலை தோற்றுவிக்கப் பட வேண்டும் என்பதனை இங்கு எடுத்துரைக்க விரும்புகிறோம்.

எப்படியோ வன்முறைகளற்ற, உயிரிழப்பும், உடைமை இழப்பும் இல்லாத, அச்சமற்ற நிம்மதியான, வாழ்க்கையையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதற்கு விரைந்து ஏற்பாடு செய்யப்படுவதையே மக்கள் எதிர்பார்த்து ஏங்குகிறார்கள். குடாநாட்டு மக்களின் பாதுகாப்பு நலன் பேணப்பட வேண்டும் என்பதே எந்த நடவடிக்கையினதும் ஏற்பாட்டினதும் சூத்திரமாக (போர்முலாவாக) இருப்பது இன்றி அமையாததாகும்.

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் இளம் வேட்பாளர்களைக் கொண்டிருக்க வேண்டும்

### தெரிவத்தாட்சி அலுவலர் குகநாதன் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 10

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்துக் கட்சிகளும் இளம் வேட்பாளர்களைக் கட்டாயம் கொண்டிருக்கவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அனைத்துச் சபைகளின்தும் தெரிவத்தாட்சி அலுவலர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியும், தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் போட்டியிட முடியும்.

இவை யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியின் 16 பிரதேச சபைகளுக்கும் 3 நகர சபைகளுக்குமாகப் போட்டியிடமுடியும்.

அவை தாம் போட்டியிடும் பிரதேச, நகர சபைக்கேற்றவாறு அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட இளம் வேட்பாளர்களைக் கட்டாயம் கொண்டிருக்க வேண்டும்.

இளம் வேட்பாளராகப் போட்டியிடுவோர் 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதியன்று 18 வயதினைப் பூர்த்தி செய்தவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

அவ்வாறு அமையாது தாக்கல் செய்யப்படும் நியமனப் பத்திரங்கள் யாவும் நிராகரிக்கப்படும். நியமனப் பத்திரங்கள் இந்த மாதம் 27 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாகத் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

அத்துடன் ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிக்கவிரும்பினால் 27 ஆம் திகதி நண்பகல் 12 மணிமுதல் 1.30 மணிவரையான காலப்பகுதியில் தெரிவிக்கலாம். 1.30 மணிக்கு அவை பரிசீல்னைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மேலும், இந்த விடயங்கள் தொடர்பான சுற்றறிக்கைகள் சகல பிரதேச, நகர சபைகளிலும் காட்சிப்படுத்தப் படும். அத்துடன் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(ம-15)

# பொன்சேகா மீண்டும் திடீர் சுகவீனம்; சிங்கப்பூர் டாக்டர்களை அழைக்க முயற்சி

கொழும்பு, ஜன.10

வெலிக்கடையில் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் இராணுவத்தளபதி மீண்டும் திடீரென நோய்வாய்ப்பட்டுள்ளார்.

உள்ளூர் வைத்தியர்களால் சிறைச்சாலையில் அவருக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் எந்தப் பயனையும் அளிக்கவில்லை என்றும் அவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவரது தற்போதைய உடல்நிலையைக் கருத்திற்கொள்ளும் போது அவர் முழுமையான வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியவராக உள்ளார் என ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் அலஸ் வெலிக்கடை சிறைச்சாலை நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளார் என கூறப்படுகிறது.

சரத் பொன்சேகா முழுமையான உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்றும் இதன் காரணமாக சிங்கப்பூரைச் சேர்ந்த விஷேட வைத்தியக் குழுவினரை இலங்கைக்கு வரவழைக்க வேண்டும் எனவும் அவர் சிறைச்சாலை நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளார் எனவும் கூறப்படுகிறது. (ம)

# கணினி இயந்திரத்துக்குள் கஞ்சா 5 இளைஞர்கள் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜன.10

கணினி இயந்திரமொன்றுக்குள் மறைத்து வைத்திருந்த நிலையில் பாடசாலை மாணவர்களுக்கு கஞ்சா போதைப் பொருள்களை விற்பனை செய்து வந்ததாகச் சந்தேகிக்கப் படும் இளைஞர்கள் ஐவரை கட்டுகஸ் தோட்டை பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்குத் தலைமை தாங்குவதாகக் கூறப்படும் சுமார் 20 வயது மதிக்கத்தக்க இளைஞன், கட்டுகஸ்தோட்டை நகரில் அமைந்துள்ள வீடொன்றில் வைத்து தனது நண்பர்களின் உதவியுடன் மேற்படி கஞ்சா போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது மேற்படி இளைஞனுக்குச் சொந்தமான கணினிக்குள் இருந்து ஒரு தொகை கஞ்சா பக்கெட்டுகள் கைப்பற்றப்பட் டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## மணி விழா நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.10

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் செ.குமாரசாமியின் மணிவிழா நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை கலாசாலையில் இடம்பெறவுள்ளது. (ம)

# 'சண்டே லீடர்' ஆசிரியர் படுகொலை; விசாரணையில் முன்னேற்றமில்லை

கொழும்பு, ஜன. 10

சண்டே லீடர் ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரி ஒருவருக்கும் கராஜ் உரிமையாளர் ஒருவருக்கும் தொடர்பு உண்டு என்ற வகையில் புலனாய்வுகள் நடைபெற்று வருகின்றன.

மவுண்ட்லெவெனியா நீதிமன்றத்தில் கடந்த வாரம் புதன்கிழமை பொலிஸார் இத்தகவலைத் தெரிவித்தனர். மவுண்ட்லெவெனியா பிரதம நீதிவான் நிரோஷா பெர்னாண்டோ முன்னிலையில் இக்கொலை வழக்கு விசாரணைக்கு வந்தபோது பொலிஸார் மேற்கண்ட தகவலைத் தெரிவித் தனர்.

லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டு நேற்று முன்தினம் ஜனவரி 8ஆம் திகதி இரண்டாவது வருடாந்த தினமாகும். அவர் தமது காரில் காரியாலயத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் கொலை செய்யப்பட்டார்.

கொலையாளிகள் லசந்தவின் கார்க் கண்ணாடிகளை உடைத்து நொறுக்கிவிட்டு அவரை இரும்பு ஆயுதங்களால் தாக்கியுள்ளனர். மயக்கமுற்ற நிலையில் களுபோவில ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு அங்கு காலமானார். குண்டுச் சத்தங்கள் எதுவும் கேட்கவில்லை என்று பலர் சாட்சியங்கள் கூறியுள்ளனர். பிரேதபரிசோதனை விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை, இக்கொலை தொடர்பான முன்னேற்ற அறிக்கையை வரும் 14ஆம் திகதி மன்றில் தாக்கல் செய்யும்படி நீதிவான் உத்தர விட்டார். வழக்கு மீண்டும் இம்மாதம் 14ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

## நாளை

| | | |
|---|---|---|
| மார்கழி 27 | | 11.01.2011 |
| | | செவ்வாய்க்கிழமை |
| திதி: | : | ஸப்தமி |
| | | பி.இ.02.28 வரை |
| நட்சத்திரம் | : | உத்தரட்டாதி |
| | | பி.ப.05.26 வரை |
| சுபநேரம் | : | 11.03- 12.33 வரை |
| ராகுகாலம் | : | 03.33- 05.03 வரை |

### உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில்

# ரணில் – சஜித் சமரசம் மூத்த தலைவர்கள் ஏற்பாடு

கொழும்பு, ஜன. 10

ஐ.தே.கட்சியில் தலைமைப் பதவிக்குப் போட்டா போட்டிகள் தலைவிரித்து ஆடிக்கொண்டிருந்தபோதிலும் அடுத்துவரும் நாள்களில் தற்காலிகமான ஒற்றுமை நிலவக் கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதாக ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தலைமைப் பதவிக்கு ஆவல் கொண்டுள்ள சஜித் பிரேமதாஸவுக்கும் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் கட்சியின் உயர் தலைவர்கள் சமரசம் செய்து வைத்திருப்பதே இதற்கு காரணமாகும்.

கட்சியின் மூத்த தலைவர்களான ஜோசப் மைக்கல் பெரேரா, ஜோன் அமரதுங்க மற்றும் ஜயலத் ஜயவர்த்தன போன்ற தலைவர்கள் மேற்படி இருவருக்குமிடையில் பல தடவைகள் சந்திப்புக்களை நடத்தி இந்தச் சமரசத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

உள்ளூராட்சித் தேர்தல் காலத்திலாவது வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாகச் செயற்படும்படியாக இருவரையும் மூத்த தலைவர்கள் கோரியிருக்கிறார்கள்.

இந்நிலையில் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் காலத்தில் ஐ.தே. கட்சியின் தலைவர்கள் மத்தியில் ஒற்றுமை நிலவக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அப்பத்திரிகை கூறுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் நினைவஞ்சலி

## விண்ணிலுள்ள அப்பாவிற்கு விருப்புடன் நாமனுப்பும் பிறந்தநாள் வாழ்த்து மடல்

அப்பா!
உங்கள் முகம் பார்த்து
ஆண்டுகள் மூன்றோடி கழிந்தன
எம் இதய கோயிலே
மங்காத முழுமதியே
தங்கமான தந்தையே
பிரிவினால் தவிக்கின்றோம்
அம்மாவின் துயரமே நீங்கவில்லை
கணங்கள் ஒவ்வொன்றும்
உளத்தினில் நீட்சிபெற்றே
நிலைத்து மறைகின்றன

காலனை கரங்கூப்பி
கேட்கின்றோம்
மக்கள் சேவையாளனான
அப்பாவில் ஏன் கண் வைத்தாய்
ஆண்டவனே!
எங்களை ஆள்பவனே!
ஆள்காட்டி விரல்கொண்டு
அப்பாவின் உயிரறுத்தவனே!
நாமோ எதுவுமறியாத
அப்பாவிப் பிள்ளைகளானோம்
நிம்மதியாய் வாழவிடு
அம்மாவையும் உண்டுறங்கவிடு
இன்று அப்பாவிற்கு
பிறந்த நாளல்லவோ
மெழுகுவர்த்தி ஏற்றி
கேக்கினை வெட்டி நாம் மகிழ

மனம் நொந்து
போய் நிற்கின்றோம்
அனல்கண்ட புழுவானோம்
எழுகின்ற சூரியனும்
ஒளிதந்து மறைகின்றான்
அப்பாவே...!
உங்களுடைய
திருவுருவப்படத்திற்கு
புதிய மாலை சூடி
வாடியே விழிநீர்
சொரிகின்றோம்
பிறந்தநாள் மூன்றுகளும்
பறந்தே போயின
வானத்திலிருந்து
எம்மை வழிநடத்துங்கள்
தூண்களாய் எழுந்து நின்று
எமக்கு நிழல் தாருங்கள்
கனவிலே தோன்றி
கதை பல கூறுங்கள்
அப்பா...!
உங்கள் நினைவோடு
என்றும் எழுகின்றோம்
நினைவோடு வாழுகின்றோம்

மக்கள்
பவதாரணி
பிரணவன்
பவித்திரா

மலர்வு:
10 — 01 — 1966

உதிர்வு:
01 — 01 — 2008



திரு.தியாகராசா மகேஸ்வரன்

276, பலாலிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொலைபேசி:
021-2227559


இல.32, 36ஆவது ஒழுங்கை
கொழும்பு - 06
தொலைபேசி: 011-2360679

தகவல்:- விஜயகலா மகேஸ்வரன், பிள்ளைகள், குடும்பத்தினர்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் யாழ்., கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)

# மரண அறிவித்தல்

## திருமதி அரியகுணராஜா குலமணிதேவி



வடமராட்சி, ஆண்டாவளவு, கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியகுணராஜா குலமணிதேவி கடந்த (08.01.2011) சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் மகளும் சுப்பிரமணியம்- பாக்கியம் தம்பதியரின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- பறுவதம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற அரியகுணராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தவசுப்பிரமணியத்தின் பாசமிகு தங்கையும் பிரபாகரன் (லண்டன்), ரமணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் பவானி, நிர்மலன் ஆகியோரின் அன்பு மாமியும் கீர்த்திகா, கிருஷ்ணா, பிரவீன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் சரோஜாதேவியின் மைத்துனியும் ஸ்ரீபாஸ்கரன் (ஆசிரியர்- டிறிபேக்கல்லூரி), ரஜனி, பாஸ்கரன் (கனடா), சுபாஸ்கரன் (ஆசிரியர்- அஷ்ஷார் கல்லூரி, கண்டி) ஆகியோரின் அன்பு அத்தையும் சந்தோஷ், கபினாஷ் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் காலஞ்சென்ற திருமதி மாணிக்கம் மற்றும் சிவக்கொழுந்து, சண்முகநாதன் ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்ற பவராசாவின் மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2011) திங்கள்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
[illegible] (பெறாமகன்), [illegible] (மருமகன்).
[illegible] நிலையம், கண்டி வீதி, சாவகச்சேரி.

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
077 4113694, 021 4920770.

(சி/574486)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் சம்பளக் கொடுப்பனவு சுற்றறிக்கை திணைக்களங்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன.10

வடமாகாணத்தில் இயங்கும் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் இந்த வருடத்துக்கான சம்பளக் கொடுப்பனவு நாள்கள் தொடர்பான சுற்றறிக்கை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கு வடமாகாண பிரதம செயலாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த மாதக் கொடுப்பனவு எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமையும், பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் முறையே எதிர்வரும், 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், ஏப்ரல் மாதத்துக்குரிய கொடுப்பனவு 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், மே மாதத்துக்குரிய கொடுப்பனவு 20 ஆம் திகதி திங்கட்கிழமையும், ஜூலை மாதத்துக்குரிய கொடுப்பனவு 20 ஆம் திகதி புதன் கிழமையும், ஒகஸ்ட் மாதத்துக்குரிய கொடுப்பனவு 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், செப்ரெம்பர் மாதத்துக்குரிய கொடுப்பனவு 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் ஒக்ரோபர் மாத்துக்குரிய கொடுப்பனவு 20 ஆம் திகதி வியாழக்கிழமையும், நவம்பர் மாத்துக்குரிய கொடுப்பனவு 21 ஆம் திகதி திங்கட்கிழமையும், டிசெம்பர் மாதத்துக்குரிய கொடுப்பனவு 20 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் வழங்கப்பட வேண்டும் என மேற்படி சுற்று நிருபத்தில் குறிப்பிட ப்பட்டுள்ளது. (201-300)

## பண்பாட்டு மரபு வளம் பேணுகை அமைப்பு மாணவருக்குச் சைக்கிள்கள் வழங்கியது



யாழ்ப்பாணம், ஜன.10

இயற்கை பண்பாட்டு மரபு வளம் பேணுகை அமைப்பினால் வறிய மாணவர்களுக்கான சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை நல்லூர் மங்கையர்க் கரசி வித்தியாலயத்தில் நடை பெற்றது.

சுற்றுச் சூழலியளாளர் பொ. ஐங்கரநேசன் வெளியிட்ட நூல்கள் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு 25 பாடசாலைகளைச்சேர்ந்த 50 மாணவர்களுக்கு சைக்கிள்களும் பெற்றோருக்கு நல்லினப் பலாக் கன்றுகளும் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வன்னி மாவட்ட உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பொ.ஐங்கரநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் ஆகியோரால் மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப் பட்டன. (201-7)

## மட்டுவில் பகுதியில் விழிப்புக்குழுக்கள்

சாவகச்சேரி, ஜன.10

மட்டுவில், சந்திரபுரம், மட்டுவில் வடக்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கி பொது மக்களின் பங்களிப்புடன் விழிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தென்மராட்சி 523 ஆவது படையணியின் கட்டளை அதிகாரிகளின் வழிப்படுத்தலில் இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்காகவே இந்த விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குற்றச் செயல்களைத் தடுக்கும் வகையிலும், விழிப்புக் குழுக்களை கண்காணிக்கும் வகையிலும் மட்டுவில் வடக்குப் பொது மாதா ஆலயத்திற்கு அருகில் படையினரின் சிறிய முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (204-131)


## 805 இலக்க பஸ் சேவை விரைவில்

நீண்டகாலமாக சேவையிலிருந்து நிறுத்தப்பட்டிருந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் 805 வழி இலக்க பஸ் சேவை விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் இந்த பஸ் நாவற்குழி, தனங்களப்பு, சாவகச்சேரி, கச்சாய் ஊடாக கொடிகாமம் சென்று அங்கிருந்து அதே மார்க்கமாக யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தைச் சென்றடையும்.

இந்த மார்க்கத்தில் பஸ் சேவை நடத்துவது தொடர்பாக கோண்டாவில்சாலை உயர் அதிகாரிகள் பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.(201 -207)

## மீளக் குடியமர்ந்த பகுதியில் உள்ள வீதியில் கட்டுக்கள் உடைந்த நிலையில் கிணறு: அச்சத்துடன் பயணிக்கும் மக்கள்



யாழ்ப்பாணம், ஜன.10

மக்கள் மீள்குடியேற்றம் என்ற நிலையில் மக்கள் குடியேற்றப்படுகின்ற போதிலும் கண்ணிவெடி தவிர்ந்த மக்களின் ஏனைய விடயங்களில் போதிய கவனம் எடுக்கப்படாத நிலைமை காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புன்னாலைக்கட்டுவன் பகுதி மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் அந்தப் பகுதியில் எந்தவொரு அடிப்படை வசதிகளும் செய்யப்படாத நிலைமை காணப்படுவதாக அந்தப் பிரதேசம் காணப்படுகின்றது.

குறிப்பாக இராஜேஸ்வரி அம்மன் வீதியில் கிணறு ஒன்று கட்டுகள் உடைந்து போக்குவரத்துச் செய்யும் வீதியுடன் காணப்படுகின்றது. மின்சார வசதிகூட இலலாத இந்த வீதியில் குறிப்பிட்ட கிணறு காணப்படுகின்றபோதிலும் இந்தக் கிணறு தொடர்பாக இதுவரைக்கும் கவனம் எடுக்கவில்லையெனவும் இந்தப் பகுதியில் குடியமர்ந்துள்ள பொதுமக்கள் கவலையுடனும் அச்சத்துடனும் தெரிவிக்கின்றனர்.

மேலும் இது தொடர்பாக பிரதேச செயலக அலுவலங்களோ பிரதேச சபை அலுவலர்களோ அன்றி கிராம அலுவலரோ நடவடிக்கை மேற்கொள்ளாத நிலைமை காணப்படுகின்றது. இதேவேளை பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் இந்த வீதியைப் பயன்படுத்தி வருவதாகவும் இரவு வேளையில் மேற்படி வீதியூடாகப் பயணிப்போர் இந்தக் கிணற்றில் வீழ்வது நிச்சயம் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (201-86)

## மோ.வாகன அனுமதிப்பத்திர. கட்டணங்கள் அதிகரிப்பு

மோட்டார் வாகனங்களின் அனுமதிப்பத்திரங்களுக்கானகட்டணங்கள் நடப்பு ஆண்டில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவடமாகாண சபை மோட்டார் வாகனங்கள் திணைக்கள ஆணையாளர் பா. ஜெயகரன் அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் வரவு செலவுத்திட்ட பிரேரணையில் குறிப்பிட்டதற்கு அமைவாக சகல மோட்டார் வாகனங்களுக்கும் முன்னர் அறவிட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக 10 வீதம் கட்டணம் அறவிடப்படும் என ஆணையாளர்சுற்று நிருபம் மூலம் சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவித்துள்ளார். (201-122)

## பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சாவகச்சேரி வணிகர் மன்றத்தால் புலமைப்பரிசில்

தென்மராட்சி, ஜன.10

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. சாதாரண் தரம் (2009), உயர்தரம் 2010 ஆகிய பரீட்சைகளில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு நமசிவாயம் புலமைப் பரிசில் நிதியை வழங்கவுள்ளனர்.

இந்த நிதி வழங்குவதற்கு தகைமையுள்ள மாணவர்களின் விவரங்களை வழங்குவதற்கு வலயக்கல்வி அலுவலகத்தினர் பாடசாலை அதிபர்களிடமிருந்து மாணவர்களின் விவரங்களைக் கோரியுள்ளனர்.

மேற்படி பரீட்சைகளில் சித்தி பெற்ற தாய் அல்லது தந்தையை அல்லது இருவரையும் இழந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ள ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தலா 3 மாணவர்கள் வீதம் (தரம் 5) பரீட்சைப் புள்ளிகள் மற்றும் பெறுபேற்றின் மாவட்ட நிலை ஆகிய விவரங்களை இன்று திங்கட் கிழமை வலயக்கல்வி அலுவல கத்தில் கையளிக்குமாறும், தகைமையுள்ள மாணவர்கள் இல்லையெனில் ''இல்லை'' எனக் குறிப்பிட்டு அறிக்கை வழங்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேம காந்தன் அறிவித்துள்ளார். (201-207)




## காரைநகரில் மூடப்பட்டிருக்கும் பாடசாலைகளைத் திறக்க வேண்டும்

### தியாகராசா மத்திய ம.வி. அதிபர் உரை

காரைநகர், ஜன.10

காரைநகரில் இயங்காமல் முடப்பட்டிருக்கும் ஏனைய பாடசாலைகளையும் விரைவாகத் திறந்து கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும். இதனால் அபிவிருத்திப் பாதையை நோக்கிச் செல்லும் காரைநகருக்கு பாடசாலைகளின் மீள் ஆரம்பம் உந்து சத்தியாக அமையும். இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய அதிபர் பொ.சிவானந்தராஜா.

காரைநகர் தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாலயம் கடந்த இருபது வருடங்களுக்குப் பின் கடந்த புதன் கிழமை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த மீள் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி பாடசாலைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அதிபர் திருமதி மங்களேஸ்வரி தேவராசா தலைமையில் நடைபெற்ற மீள் திறப்பு விழாவில் ஊர்கா வற்றுறைக் கோட்டக் கல்வி அதிகாரி கே.பாஸ்கரன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன் காரைநகர் கோட்டக் கல்வி அதிகாரி பு.விக்கினேஸ்வரனால் நாடாவெட்டி பாடசாலை மீளத்திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட அன்றைய தினமே 40 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் பாடசாலையில் இணைந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

இந்தக் கிராமப் பிள்ளைகள் நீண்டதூரம் சென்று கல்வி கற்கும் அவல நிலை இன்றுடன் நீங்கிவிட்டது. இந்த மாணவர்களின் விரைவான கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

இருபது வருடங்களுக்குப் பின் மீள ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் வரலாறு அழிந்து போகாமல் ஆவணப்படுத்தப்பட வேண்டும். கடந்த காலங்களில் இப்பாடசாலை சிறந்த ஆசிரியர்களையும் புகழ்பூத்த விளையாட்டு வீரர்களையும் உருவாக்கியமை பாடசாலையின் வளர்ச்சியிலும் காரைநகர் பிரதேச வளர்ச்சி தங்கி உள்ளது.

மேலும் காரைநகரில் 14 பாடசாலைகள் உள்ளபோதிலும் எட்டுப் பாடசாலைகளே இயங்குகின்றன. இதேபோன்று ஏனைய பாடசாலைகளும் மீள ஆரம்பிப்பதற்கு கல்வி அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் நலன் விரும்பிகளும் உதவ முன்வர வேண்டும் என்றார் -அவர்

இந்த நிகழ்வில் காரைநகர் பிரதேச பாடசாலை அதிபர்கள், கடற்படை அதிகாரிகள், பெற்றோர், பழைய மாணவர்கள், தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (201-250)

## சின்னக்கடைச் சந்தையில் கடலுணவு விலை உயர்வு

குருநகர், ஜன.10

குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தையில் கடலுணவுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எடுத்துவரப்படுவதால் இவைகளின் விலை அதிகரித்துக் காணப்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சந்தையில் இறால் கிலோ ரூபா 600 ஆகவும் கணவாய் கிலோ 600 ரூபாவாகவும், மீன் கிலோ 500 - 600 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகிறன. இதேவேளை தற்போது நிலவும் பனி மற்றும் மழை போன்ற சீரற்ற காலநிலை காரணமாக கடலுணவுகளைப் பிடிப்பதில் சிரமம் ஏற்படுவதாக மீனவர்கள் தெரிவித்தனர். (201-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மூலம் தஞ்சாவூர் பல்கலைக்கழக BA பட்டதாரியாகலாம்

- A/L எந்த பிரிவை சார்ந்தவராயினும் A/L பரீட்சையில் 2 பாடங்கள் சித்தி
- ஏனையவர் அடிப்படைப் பாடநெறியில் இணைந்து கற்கைநெறியைத் தொடரமுடியும்.
- இப்பட்டம் இலங்கைப்பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான இலவசக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் தொலைபேசி ஊடாக முன்பதிவுகளை மேற்கொள்ளவும்.

SinAcc
(ஞானக்குழந்தை இல்லம்)
இல.49/2, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.
0778849647

தென்மராட்சியில்
பாரதி கல்வி நிலையம்,
மீசாலை மேற்கு, மீசாலை.
0755253775.


## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு) மானிப்பாய்

### கூலிக்கான கூறுவிலை கோரல்

எமது வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் நவாலியில் அமைக்கப்படவுள்ள பின்வரும் கட்டடங்கள் அமைப்பதற்கு கூலிக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி - 11.01.2011-16.01.2011 வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் திகதி 17.01.2011 மு.ப 11மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 17.01.2011 நண்பகல் 12 மணி

### வேலையின் விபரம்

| விபரம் | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. தொழிற்சாலைக் கட்டடம் 02 (50'X 27') | 1000.00 | 5000.00 |
| 2. கலால் பகுதி ஓய்வு அறை (28 X 12) | 500.00 | 5000.00 |
| 3. திறந்த மண்டபம் (20 X 12) | 500.00 | 5000.00 |

பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு மட்டும் கேள்விப் பத்திரம் வழங்கப்படும்.
கேள்வி விண்ணப்பப் படிவத்தையும், நிபந்தனைகளையும் எமது கொத்தணியின் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய்.

(சி-574467)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2189 திகதி 08-01-2011

ஆங்கில எழுத்திற்கும் C

வெற்றி எண்கள் 11 20 28 35

போனஸ் இல: 51

ஜக்பொட் பரிசு ரூ. 30,321,100/- வெல்லப்படவில்லை

| இசையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 209229 | 20/- | 4,184,580/- |
| 2 இல | 14931 | 100/- | 1.493,100/- |
| 3 இல | 324 | 1,000/- | 324,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000.000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8397 | 40/- | 335,880/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 589 | 1,000/- | 589,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 30,321,100/- | - |
| 1 இல + போனஸ் இல | 10015 | 100/- | 1,001,500/- |
| 2 இல + போனஸ் இல | 456 | 500/- | 228,000/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 392 | 200/- | 78,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 30 | 1,500/- | 45,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 10,109,460/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 244394 | | 10,709,460/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 302722989-8-16 |
| கம்பஹா | 302723053-6-01 |
| பொலன்னறுவை | 302723549-4-27 |
| கொழும்பு | 302723776-7-37 |
| யாழ்ப்பாணம் | 302720511-5-40 |
| குருணாகல் | 302717548-1-40 |
| களுத்துறை | 302722774-1-07 |
| கேகாலை | 302726501-7-01 |
| கொழும்பு | 302733289-7-19 |
| கண்டி | 302729012-2-24 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 30,892,050/-

வாதா நிற டிக்கட்டுகள் 2011 ஜனவரி 12 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

## விக்கிலீக்ஸின் ஆவணங்களை ஒப்படைக்குமாறு டுவிட்டருக்கு உத்தரவு

வாஷிங்டன்,ஜன.10

விக்கிலீக்ஸ் தொடர்பான ஆவணங்களை அமெரிக்க நீதித்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு சமூக வலைத்தளமான டுவிட்டருக்கு அமெரிக்க நீதிமன்றமொன்று உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவின்படி விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜூலியன் அசாஞ்சே மற்றும் விக்கிலீக்ஸுக்கு இரகசிய ஆவணங்களை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமெரிக்க இராணுவ உத்தியோகத்தர் பிராட்லி மன்னிங் உட்பட பலரின் விவரங்களை அமெரிக்க நீதித்துறை திணைக்களத்துக்கு டுவிட்டர் இணையத்தளம் ஒப்படைக்க வேண்டும்.

சந்தாதாரர் பெயர்கள், பாவனையாளர் பெயர்கள், தபால் முகவரிகள், வதிவிட முகவரிகள் என்பனவும் ஒப்படைக்கப்பட வேண் டிய விவரங்களில் அடங்கும் என நீதிமன்ற ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சான்றிதழ்கள் வழங்கல்

வண்ணை, ஜன. 10

கடற்தொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் கடந்த வருடம் வழங்கப்பட்ட பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

வெளி இணைப்பு இயந்திரம் திருத்துதல், கடல் வரைபடம் வாசித்தல், தொடர்பாடல் மற்றும் அற்றலைட் உபகரணம் இயக்குதல் ஆகிய பயிற்சி நெறிகளைப் பூர்த்திசெய்துள்ளவர்கள் கல்லூரி அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ள முடியுமென உதவிப் பணிப்பாளர் இ. செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த காலங்களில் பயிற்சி நெறிகளை முடித்துக்கொண்டு இதுவரை சான்றிதழ் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-160)

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

தென்மராட்சி,ஜன.10

அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களில் மணல் ஏற்றிய மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை வெள்ளிக்கிழமை விசாரித்த நீதிவான் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்ததுடன் மணலையும் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார். (ஒ-207)


வீட்டுக்கும் ஹோட்டலுக்கும்



டயிடஸ் ஸ்ரோஸ்
புறக்கோட்டை லிபர்டி ப்ளாஸா
2435383



# VISA - வீசா
Consultancy Service

*UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,*

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.


## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ - து)

### பதவி வெற்றிடம்

பதவி: காவலாளி
தரம் : 314/16
சம்பளத் திட்டம் : 9200 - 70 X 10 + 75 X 10 - 10650
(கூ.வே ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு அமைய வாழ்க்கைப் படி வழங்கப்படும்)

**தகைமை:**
கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்ட பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது ஒரு வருடகால அனுபவம் அல்லது எட்டாம் வகுப்புச் சித்தியுடன் விண்ணப்பதாரி நல்ல தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

**வயதெல்லை 25 - 45**

விண்ணப்ப முடிவு திகதி: 25/01/2011

விண்ணப்பப் படிவத்தை ரூபா 20/= செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

1. அனுபவம் உள்ளவர்களுக்கும், ஓரளவு சிங்கள மொழி பரீட்சையம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்
2. சபையால் கோரப்படும் பிணை செலுத்தப்படல் வேண்டும்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து), வீரசிங்கம் கட்டடத் தொகுதி 2ஆம் மாடி, இல. 12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

செயலாளர்,
யா.மா.கூ.சபை.

(சி-574445)

## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 89
திகதி - 08.01.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து S — அதிர்ஷ்ட இலக்கம் 06 — வெற்றி இலக்கம் 0 6 1 2 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இல | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | S | 06 | 0 6 1 2 5 | ரூ. 6,870,607.00 | - |
| 1 பரிசு | | 06 | 0 6 1 2 5 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 0 6 1 2 5 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | 6 1 2 5 | ரூ. 10,000.00 | 26 |
| 4 பரிசு | | | 1 2 5 | ரூ. 1,000.00 | 275 |
| 5 பரிசு | | | 2 5 | ரூ. 50.00 | 2666 |
| 6 பரிசு | | | 5 | ரூ. 20.00 | 25431 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இல | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 0 6 1 2 | ரூ. 1,000.00 | 28 |
| 8 பரிசு | | | 0 6 1 | ரூ. 100.00 | 272 |
| 9 பரிசு | | | 0 6 | ரூ. 50.00 | 2673 |
| 10 பரிசு | S | | | ரூ. 20.00 | 10604 |
| 11 பரிசு | S | 06 | | ரூ. 100.00 | 1192 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,997,050.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.1 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.7,276,066.00

## கூட்டுறவுப் பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்படும் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர் பிரிவுக்குப் பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்குத் தகைமையுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

தகைமை: க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் வர்த்தகம்/கணிதப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களும்அதற்கு மேலான தகைமையுடையவர்களும், கூட்டுறவுப் பணியாளர் சாதாரண பிரிவுப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

முடிவு திகதி:- 25.01.2011

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி,
2ஆம் மாடி, இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
விண்ணப்பப் படிவத்தை மேற்படி முகவரியில் அமைந்த சபை அலுவலகத்தில் ரூபா 20/= செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.

அதிபர்,
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போகத்தில் 2 லட்சத்து 30 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை

## வடமாகாண ஆளுநர் தகவல்

கிளிநொச்சி, ஜன.10

இம்முறை பெரும்போகத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் 2 லட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாய அமைப்புகளுக்கு உழவு இயந்திரங்களைப் பகிர்ந்தளிக்கும் விழாவொன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

இந்த விழாவில் ஒரு விவசாய அமைப்புக்கு ஆறு உழவு இயந்திரங்கள் வீதம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாய அமைப்புக்களுக்கு 58 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்திய - இலங்கை நல்லுறவு அடிப்படையில் இந்தியாவினால் வழங்கப்படும் இந்த உழவு இயந்திரங்கள் வடக்கில் மீள்குடியமர்ந்துள்ள மக்களின் விவசாயச் செயற்பாடுகளின் மேம்பாட்டுக்காகவே பயன்படுத்தப்பட விருக்கின்றன. (க-22)

# பாலவேலைகள் நிறைவு பெற்ற போதிலும் இருபக்கப் பெரு வீதிகளும் சேதமான நிலையில்

பூநகரி, ஜன.10

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலவேலைகள் நிறைவுபெற்ற போதும் இருபக்கங்களிலுமுள்ள பெருவீதிகள் இன்னமும் புனரமைப்புச் செய்யப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பல காலமாக இழுபட்டுக் கொண்டேபோன கேரதீவு - சங்குப்பிட்டிப் பால வேலைகள் ஒருவாறாக நிறைவுபெற்ற போதிலும் இதற்கு இருபக்கங்களிலுமுள்ள பெரு வீதிகள் இன்னமும் புனரமைக்கப்படாமையால் நாவற்குழியிலிருந்து மன்னார் செல்லும் வீதியில் வாகனப் போக்குவரத்துக்கு அனுமதி வழங்குவதற்கு இன்னும் சிலகாலம் செல்லப் போவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




கடும் மழை பெய்தபோது இராணுவத்தினர் மற்றும் அரச உயரதிகாரிகளின் வாகனங்க்ள் இவ்வீதியூடாகப் பயணித்ததைக் காணமுடிந்தது. (க-121)

# உணவுடன் தொடர்புடைய நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜன.10

உணவகங்கள், தேநீரகங்கள், வெதுப்பகங்கள், உணவுப் பொருள்களைக் கையாளும் நிலையங்கள் என்பவற்றின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளைய தினம் கிளிநொச்சிச் செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகக் கரைச்சிப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டுக்கான அனுமதி வழங்கல், சுகாதார நடைமுறைகளுக்கான அறிவுறுத்தல் தொடர்பான கலந்துரையாடலே நாளைய தினம் செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணியளவில் கிளிநொச்சி செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமை தாங்குவார்.

இதில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் உரிமையாளர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறும் பிரதேசசபைச் செயலாளர் திருமதி மோ.அருள்சோதி அறிவித்துள்ளார். (க)

# பின்தங்கிய கிராமங்களில் இயங்கும் முன்பள்ளிகள் அவலமான நிலையில்

கிளிநொச்சி, ஜன.10

கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களில் இயங்கிவரும் முன்பள்ளிகள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றுள் கருணா நிலையம், தென்னிந்திய திருச்சபை, அமெரிக்க இலங்கை மிசன் ஆகிய அமைப்புக்களின்கீழ் இயங்கும் முன்பள்ளிக்ள் தவிர அனேகமான ஏனைய முன்பள்ளிகள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றியே காணப்படுகின்றன. மணியங்குளம், விநாயகர் குடியிருப்பு, கோணாவில், திருநகர், உருத்திரபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள முன்பள்ளிகள் கட்டட வசதிகள் இன்றிக் காணப்படுகின்றன. இதனைவிடப் பொது அமைப்புக்களின்கீழ் இயங்கும் முன்பள்ளிகளுக்கும் கட்டடங்கள் இல்லை. எண்பது வீதமான முன்பள்ளிகளில் சிறார்களின் மகிழ்வான கற்றல் செயற்பாடுகளுக்குத் தேவையான வசதிகள் ஏதும் காணப்படவில்லை.

இவ்வாறு இந்த முன்பள்ளிகள் அடிப்படை வசதிகளின்றிக் காணப்படுவதுடன் இவற்றில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குரிய வேதனமும் வ்ழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலை தொடர்ந்தால் இத்தகைய முன்பள்ளிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே மாறிவிடும். ஆகவே உரியவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து இவற்றைக் காப்பாற்றுமாறு மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-6)

# பாதுகாப்பற்ற குடியிருப்புகளால் வன்னியில் பாம்புக் கடிக்கு இலக்காவோர் அதிகரிப்பு

கிளிநொச்சி, ஜன.10

வன்னியின் பல்வேறு இடங்களிலும் பாம்புக்கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கை தினமும் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வாரம் ஒன்றுக்கு மூன்றுக்கு மேற்பட்டோர் பாம்புக் கடிக்குச் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். இதே போன்று மல்லாவி வைத்தியசாலையிலும் அதிகமானோர் சிகிச்சை பெறுகின்றனர்.

இங்கு மீள்குடியமர்ந்த அநேக மக்கள் பாதுகாப்பில்லாத நிலையிலேயே வசித்து வருகின்றனர். இவர்களின் வீடுகள் தற்காலிகக் கொட்டகைகளாகக் காணப்படுவதால் பாம்புகள் உள்ளே செல்வதற்கு வசதியாக உள்ளது.

அத்துடன் மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகள் பல மாதங்களாக நடமாட்டமற்ற பிரதேசங்களாகக் காணப்பட்டதால் பாம்புகளின் பெருக்கத்திற்கு வழிவகுத்துள்ளது.

இது இவ்வாறிருக்க கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயாரான சுந்தரலிங்கம் சாந்தினி என்பவர் பாம்புக்கடிக்கு ஆளாகிய நிலையில் நீண்ட நாள்களாகக் கிளிநொச்சிப் பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# ஆசிரியர் வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கும் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்

கிளிநொச்சி, ஜன.10

கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை, கட்டட வசதிக் குறைவுகள் என்பவற்றால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஐந்து நிரந்தர ஆசிரியர்களும், தொண்டர் ஆசிரியர் ஒருவரும் கடமைபுரியும் இப்பாடசாலையில் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள்.

பாடசாலையின் சீரற்ற சூழல், ஆசிரியர் பற்றாக்குறை என்பனவற்றால் மாணவர்களின் வரவு குறைந்து வருவதாகப் பாடசாலை வட்டாரம் விசனம் தெரிவிக்கின்றது.

மாணவர்களின் எதிர்கால கல்வி நிலையைக் கருத்தில் கொண்டு பாடசாலையின் குறைபாடுகளைத் தீர்த்துவைக்குமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-313)

## உழைப்புக்கு ஏது நிகர்?...



ஓயாத கரங்கள்: கிளிநொச்சி, கணேசபுரம் கிராமத்தில் காசுக்கான வேலைத் திட்டத்தின்கீழ் மக்கள் ஆர்வத்துடன் வேலை செய்து கொண்டிருக்கின்றனர். (405)

# பாடசாலைக்கு மின்பிறப்பாக்கி

கிளிநொச்சி, ஜன.10

கிளிநொச்சி, வட்டக்கச்சி மகாவித்தியாலயத்துக்கு மின்பிறப்பாக்கியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒரு லட்சம் ரூபாவை பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார். 1 ஏபி தரமுடைய பாடசாலையாக இருந்தும் இதுவரை மின்சாரவசதி வழங்கப்படாமையால் பாடசாலையின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தன.

ஆயினும் பொதுப் பரீட்சைகளில் இந்தப் பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். மின்சார வசதி கிடைக்குமாயின் பாடசாலையின் கல்வித்தரம் மென்மேலும் உயர்வடைய வாய்ப்புக்கள் உண்டு.

தற்போது இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் மின்பிறப்பாக்கியொன்றை வாங்கிப் பொருத்துவதால் பாடசாலைக்குப் பேருதவியாக இருக்குமெனக் கூறிய பாடசாலைச் சமூகத்தினர் இதற்கு உதவி புரிந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு நன்றியும் தெரிவித்தனர். (க-405)

# புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர்களுக்கு கிளிநொச்சியில் திசைமுகப்படுத்தல் செயலமர்வு

கிளிநொச்சி, ஜன.10

கிளிநொச்சி கல்வி வலயத்தில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு நடைபெற்று வருகின்றது.

கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமான இந்தச் செயலமர்வு 13 ஆம் திகதிவரை நடைபெறும்.

இதில் கிளிநொச்சி வலயக் கல்வீப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், கணக்காளர், கலாசார உத்தியோகத்தர் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு புதிய ஆசிரிய ஆலோசகர்களுக்குத் திசைமுகப்படுத்தலை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட 18 ஆசிரிய ஆலோசகர்களுக்கே இந்தச் செயலமர்வு இடம்பெற்று வருகின்றது. (க-405)

# அவலத்தில் கிளி. தபாலகம்

கிளிநொச்சி, ஜன.10

போரினால் சேதமடைந்த கிளிநொச்சித் தபாலகம் புனரமைக்கப்படாத நிலையில் பரிதாபமாகக் காட்சியளிக்கின்றது.

தற்போது தனியாருக்குச் சொந்தமான கடையொன்றில் சிரமங்களுக்கு மத்தியில் தபாலகம் இயங்கி வருகின்றது.

அதேவேளை தபாலதிபரும் நிரந்தரமாக நியமிக்கப்படாத நிலையில் தற்காலிக அடிப்படையில் ஒருவர் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (க)

# புகையிரதப் பாதையின் இருமருங்கிலும் குடியிருப்போரை வெளியேற அறிவுறுத்து

கிளிநொச்சி, திருநகர் மேற்கில் புகையிரதப் பாதையின் இருமருங்கிலும் குடியிருக்கும் 70 குடும்பங்களையும் வெளியேறுமாறு அரசு அறிவித்துள்ளதால் செல்ல இடமின்றி இந்தக் குடும்பங்கள் தவிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்குக்கான புகையிரதப் பாதையின் புனரமைப்புப் பணிகளின் பொருட்டு இந்தக் குடும்பங்கள் வெளியேற்றப்படவுள்ளன. இந்தக் குடும்பங்களுக்குச் சொந்தமான காணி எதுவும் இல்லை. அத்துடன் தற்போது தமக்கெனக் காணிகளைக் கொள்வனவு செய்வதற்கேற்ற நிதி வசதியும் இவர்களிடம் இல்லை. இந்த நிலையில் எங்கே செல்வது என்பது தெரியாமல் இக்குடும்பங்கள் அவல நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தாம் வேறொரு இடத்தில் குடியேறுவதற்கு அரசு உதவ வேண்டுமென இவர்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ள்னர். (க-313)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணி விழா வாழ்த்து



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 12 ஆண்டுகள்
விரிவுரையாளராக, பிரதி அதிபராகப் பணியாற்றி இன்று (10.01.2011)
மணிவிழாக் காணும் எங்கள் அன்பு கனிந்த பேராசான்
ஞானபண்டித இசையரசு இசைமாமணி கீதாசாகரம் இசைநாவலன்

## உயர்திரு செல்லத்துரை குமாரசாமி (கரவைக்குமரன்)

சங்கீதபூஷணம், பயிற்றப்பட்ட ஆசிரியர் (விசேடம்- சங்கீதம்) PGDE, S.L.E.A.S

**கல்விச்சேவை விபரம்..**

- ★ 1982.05.24- 1986.12.31 யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்- இசையாசிரியர்
- ★ 1987.01.01- 1997.01.09 யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி- இசையாசிரியர்.
- ★ 1997.01.10- 1998.06.09 யா/கற்பகமலை அ.த.க பாடசாலை, யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் } இசையாசிரியர்.
- ★ 1998.06.10- 2000.08.23 - கோப்பாய் ஆசிரிய கலாசாலை இணைப்பு விரிவுரையாளர்.
- ★ 2000.08.24- 2011.01.09 கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்- பிரதி அதிபர்.

- ★ 1990- 1995 தொலைக்கல்விப் பயிற்சிப் போதனாசிரியர்.
- ★ வட இலங்கை சங்கீத சபை ஆசிரியர் தரம்- பிரதம பரீட்சகர்
- ★ யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட முன்னைய வருகை விரிவுரையாளர்.
- ★ யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பரீட்சை அலகு முன்னாள் இசைத்துறை பரீட்சகர்

இன்று எமது கலாசாலை ரதிலக்ஷ்சுமி மண்டபத்தில் மணி விழாக்காணும் ஆசானை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

**கலாசாலைச் சமூகம்,**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை.**

### பஸ் கம்பனிகளின் இணையம் புதிய இடத்தில்

யாழ்.கச்சேரி, நல்லூர் வீதியில் இயங்கி வந்த யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம் இன்று திங்கட்கிழமை முதல் கச்சேரி- நல்லூர் வீதியில் (ரயில் கடவைக்கு அண்மையில்) புதிய இடத்தில் செயற்பட வுள்ளதாக இணையத்தின் தலைவர் எஸ். கெங்காதரன் அறிவித்துள்ளார். (ஒ-9)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



(1068:8)

புளியங்கூடல் மேற்கைச் சேர்ந்த
**ஜெயகுமார் தனுஜா**
ஊர்காவற்றுறை மாவட்ட/ நீதிவான் நீதிமன்றின் சுருக்கெழுத்தாளராக 01.11.2010 அன்றிலிருந்து நிரந்தர நியமனம் பெற்றதையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பட்டப்படிப்புக் கல்லூரி இறுதியாண்டு நண்பர்கள்.**

## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

2011.01.07 அலுவலக முடிவுகள் — சீட்டிழுப்பு இல. 2341

வெற்றி எழுத்து: U — வெற்றி எண்கள்: 6 8 5 0 4 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | U | 6 | 8 | 5 | 0 | 4 | 9 | ரூபா. 14,784,063/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 6 | 8 | 5 | 0 | 4 | 9 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் - |
| 2 பரிசுகள் | | | 8 | 5 | 0 | 4 | 9 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | | | | 5 | 0 | 4 | 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 137 |
| 4 பரிசுகள் | | | | | 0 | 4 | 9 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1387 |
| 5 பரிசுகள் | | | | | | 4 | 9 | ரூபா. 100/= | பரிசுகள் 13820 |
| 6 பரிசுகள் | | | | | | | 9 | ரூபா. 20/= | பரிசுகள் 137054 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 6 | 8 | 5 | 0 | 4 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 6 | 8 | 5 | 0 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 141 |
| 9 பரிசுகள் | | 6 | 8 | 5 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1392 |
| 10 பரிசுகள் | | 6 | 8 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13687 |
| 11 பரிசுகள் | U | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 54817 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
**Rs. 10,470,970.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
**தேசிய லொத்தர் சபை**
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470667, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

# அணிவிழா பலவும் கண்டு அவனி வாழி!

(ஞானபண்டித இசையரசு, இசைமாமணி, கீதசாகரம், இசைநாவலன்)

**மணிவிழாத் தம்பதிகள்**
கரவைக் குமரன் சங்கீதபூசணம்
**திரு-செ-குமாரசாமி** PGDE- S.L.E.A.S
**(பிரதி அதிபர்- கோப்பாய் ஆசிரிய கலாசாலை)**
*சங்கீதபூஷணம்* **திருமதி கு-வரதலட்சுமி**

மணி விழா நன்நாள்- இன்று (10.01.2011) திங்கட்கிழமை





பணிவினால் தொண்டினால் பரந்த மனத்தால்
பாசமொடு செம்மைநெறி பகரும் குணத்தால்
பணியினால் இசையினால் பாடும் குரலால்
பலர் நெஞ்சும் வாழ்த்து மரும் பேறும் பெற்றே
மணி விழாக் கண்டு உளம் மகிழும் வேளை
மாதவத்துத் தம்பதியீர்! மாண்பால் வாழ்வில்
அணி விழா பலவும் கண்டவனி வாழ
அன்புடனே வாழ்த்துகிறோம் வாழிபல் லாண்டே!

**அழகுற ஆக்கி வளமுற வாழ்த்துவோர்**

**மருமகன்**- Dr.திரு.சி.சிவப்பிரியன் (Medicine- London),
**மகள்**- திருமதி சுகன்யா சிவப்பிரியன் (Teacher- London),
**பேரப்பிள்ளைகள்**- செல்வன் சி.திரிஷான், சி.திரிஷிகா (London),
**மகன்**- திரு.கு.சுரேந்தர் (Electrical- Electroinc Engineer, Southbank, University- London), **மகள்**- செல்வி கு.பிருந்தாவனி (B.A. Student),
**மகள்**- செல்வி கு.வீணாவாஹினி (B.A. Student), **மகன்**- திரு.கு.ரஜீவன் (Molecular Biology & Biochemistry, Colombo University),
**மருமகன்**-செல்வன் ஜீ.நட்ரேஸ் (மாணவன்), **சகோதரி**- இ.நித்தியானந்தலட்சுமி,
**சகோதரி**- திருமதி வி.சிவகாமி, **மைத்துனன்**- திரு.இ.ஜீவராஜா (London).

வீரபத்திரர் கோயிலடி, உடுப்பிட்டி.
தொலை பேசி இல: 0213214997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'புலிகளின் குரல்' வானொலிக்கான கருவிகளை அரச சமாதானச் செயலகத்திடமே நோர்வே வழங்கியது

## விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்

கொழும்பு, ஜன.10

புலிகளின் குரல் வானொலிக்கான ஒலிபரப்புக் கருவிகளை இறக்குமதி செய்வதற்கு உதவுமாறு நோர்வேயிடம் இலங்கை அரசே கேட்டுக்கொண்டதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தகவல் பரிமாற்றக் குறிப்புகளில் இந்த விவரம் இடம்பெற்றுள்ளதாக அது குறிப்பிட்டுள்ளது.

2002 டிசெம்பர் 20 ஆம் திகதியிடப்பட்ட இந்தத் தகவல் பரிமாற்றக் குறிப்பில், இலங்கை அரசு தமது தூதரகத்திடம் இந்த வேண்டுகோளை விடுத்ததாக நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் எம்மிடம் தெரிவித்தார் என்று கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒலிபரப்பு ஒழுங்குமுறையின் கீழ் செயற்படுவதற்கான இணக்கப்பாடு ஒன்றின் அடிப்படையிலேயே இந்தக் கருவிகளை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசு நோர்வேயின் உதவியை நாடியது. ஆயினும், இந்த உதவியை நேரடியாகப் புலிகளுக்கு செய்ய முடியாது என்றும் இலங்கை அரசின் சமாதான செயலகத்திடமே வழங்க முடியும் என்றும் நோர்வே கூறியது.

இந்தக் கருவிகள் கப்பல் மூலம் கடந்த மாதம் கொழும்புத் துறைமுகத்துக்கு ஒரு கொள்கலனில் கொண்டுவரப்பட்டன.

நோர்வேத் தூதரகத்துக்கு அனுப்பப்பட்ட இந்தக் கொள்கலன் சுங்கவரி செலுத்தப்படாமலேயே கொண்டு செல்லப்பட்டது.

நோர்வே தூதுரகம் இதை இலங்கை அரசின் சமாதான செயலகத்திடம் கையளிக்க, பாதுகாப்பு அமைச்சின் உதவியுடன் புலிகளுக்கு அனுப்பப்பட்டது.

புலிகளின் குரல் வானொலியை சட்டபூர்வமானதாக்கும் நோக்கிலேயே இலங்கை அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

அப்போது புலிகளின் குரல் வானொலி குறைந்த சக்தி கொண்ட பண்பலை ஒலிபரப்பையே மேற்கொண்டு வந்தது.

## வெள்ளைப்பிரம்பு...




பரோபகாரம்: கோண்டாவில் லயனஸ் கழகத்தினால் இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளனத்தின் வட மாகாணக் கிளை அங்கத்தவர்களுக்கு ஒரு தொகுதி வெள்ளைப் பிரம்புகள் அண்மையில் சம்மேளன மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன. இந்த நிகழ் வில் பார்வையற்ற ஒருவருக்கு வெள்ளைப் பிரம்பு வழங்கப்படுகின்றது.

# சி.டி.எம்.ஏ. பாவனை அதிகரிப்பால் தொலைபேசி அழைப்பு எடுப்பதில் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்.குடாநாட்டில் சி.டி. எம்.ஏ. தொலைபேசிகளின் பாவனை அதிகரித்துள்ளதால் அதற்கான அழைப்புப் பெறுவதற்கு அலைவரிசையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சி.டி.எம்.ஏ. தொலைபேசிகள் குடாநாட்டில். விநியோகிக்கப்பட்டிருப்பதாக யாழ்.ரெலிக்கொம் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

இந்தத் தொலைபேசி அதிகளவில் பயன்படுத்துவதனால் தான் அதன் அலைவரிசையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.இந்த அலைவரிசையை மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கையை ரெலிக்கொம் நிறுவனம் மேற்கொண்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (204-26)

# பட்டம் ஏற்றும் போட்டி

தமிழ் மக்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான பட்டம் ஏற்றும் போட்டிகள் 20 வருடகால இடைவெளிக்குப் பின்னர் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு வல்வெட் டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் இப்போட்டியில் யாழ். மாவட்டத்திலிருந்து அனைவரும் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போட்டியில் வெற்றிபெறுவோருக்குப் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.(201-236)

# காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கோப்புகள் சமயோசிதமாகத் திருட்டு

கொழும்பு, ஜன.10

காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவுக்குச் சொந்தமான பல கோப்புகள் இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளன - என ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக வெளியாரின் ஊடுருவல் மூலம் ஆணைக்குழுவிலிருந்து முக்கி யமான பல கோப்புகள் களவாடப்பட்டுள்ளன. காணிகளின் உடைமைப் பத்திரம், குத்தகை ஒப்பந்தங்கள் போன்ற முக்கிய ஆவணங்களைக் கொண்ட கோப்புகளே இவ்வாறு களவாடப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஆணைக்குழுவின் ஆவணக் காப்பகத்தின் பொறுப்பாளரின் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகள் புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (204-5)

# எதற்காகப் பதவி விலகினார் என்று தகவல் தர பிரதம நீதியரசர் மறுப்பு

கொழும்பு,ஜன.10

பதவி விலகல் கடிதம் வழங்கியமை குறித்த பிரதம நீதியரசர் அசோக டி சில்வா ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட மறுத்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி பிரயோகித்த அழுத்தம் காரணமாக, தாம் பதவி விலகுவதாக அறிவித்து, ஜனாதிபதி செயலத்தில் பிரதம நீதியரசர் பதவி விலகல் கடிதத்தை கையளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இலங்கை அரசாங்க தரப்பில் இந்தச் செய்தி மறுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பில் வெளிநாட்டு ஊடகம் ஒன்று பிரதம நீதியரசரிடம் கேள்வி எழுப்பியுள்ளது. எனினும் இது தொடர்பில் பதில் வழங்க மறுத்த நீதியரசர், இந்த விடயத்தை மௌனமாகக் கடைப்பிடிப்பதே சிறந்தது எனத் தெரிவித்ததாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், உண்மையில் அவர் பதவி விலகல் கடிதத்தை வழங்கவில்லை என்றால் எதற்காக அவர் இது தொடர்பில் அமைதி காக்க வேண்டும் என அந்த ஊடகம் கேள்வி எழுப்பியுள்ளது.

பதவி விலகல் தொடர்பான தகவல்களை வெளியிட வேண்டாம் என அரசாங்கத் தரப்பில் இருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# உள்நாட்டு உற்பத்தியாளரை ஒழிக்கும் முயற்சியில் அரசு

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.10

உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஒழிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போது அந்தக் கட்சியின் தவிசாளர் காமினி ஜயவிக்கிரம பெரேரா இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

நாட்டின் உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஒழித்து வெளிநாட்டு விவசாயிகளை ஊக்குவித்து அவர்கள் இலாபம் ஈட்டும் வகையில் இந்த அரசாங்கம் செயற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் தரகுப் பணம் பெற்றுக்கொள்ளும் முறையொன்று உருவாவது குறித்து குற்றச்சாட்டை முன்வைப்பதுடன் இந்த அரசாங்கத்தின் கொள்கைகள் முட்டாள்த்தனமானவை என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் தெரிவித்தார்.

இன்னும் மூன்று மாதங்களுக்கு முட்டை மற்றும் இறைச்சியை இறக்குமதி செய்வார்களாயின் நூறு வீதம் வெளிநாட்டு முட்டைகள் மற்றும் இறச்சியை இறக்குமதி செய்யும் நாடாக இலங்கை மாறுவதோடு பல்வேறுபட்ட தொற்று நோய்களைக் கொண்ட நாடாகவும் மாற்றமடையும் நிலை ஏற்படும் எனவும் அவர் கூறினார். (22)

# பல்கலைக்கழக அனுமதிக்கு ஆங்கிலம் கட்டாயமானது

## உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.

கொழும்பு,ஜன.10

அதிவிசேட திறமைமைகளை வெளிப்படுத்துகின்ற மாணவர்களைப் பல்கலைக் கழகங்களில் இணைத்துக் கொள்ளும் நடைமுறை இந்த வருடத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின்போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறை பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிபெற, கல்விப் பொதுத்தராதர உயர்தரம் மாணவர்களுக்கு ஒரு தடையாக இருக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த ஆண்டு முதல் உயர்தரப் பரீட்சையின் போது, ஆங்கிலபாடப் பரீட்சையில் தோற்றுவது கட்டாயமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு ஆங்கிலம் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உயர்கல்வி நிறுவனங்களைப் பதிவு செய்வது மற்றும் அதனை வகைப் படுத்துவது தொடர்பில் புதிய சட்டங்கள் இயற்றப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# ஹெல உறுமய கட்சியினரின் சாட்சியம் இன நல்லுறவைக் கெடுத்துவிடும்

## பிரபா கணேசன் எம்.பி. கண்டனம்

கொழும்பு, ஜனவரி. 10

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க மற்றும் மேல் மாகாண சபை அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோர் நல்லிணக்க ஆணைக்குழு முன் அளித்துள்ள சாட்சியம் இன நல்லுறவைக் கெடுக்கக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது. - என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அமைச்சர் சம்பிக்க ரணவக்க நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில், 1956 ஆண்டில் சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக கொண்டு வரப்பட்டதை நியாயப்படுத்தியும், பல்கலைக்கழக தரப்படுத்தல் தமிழ்பேசும் மக்களை பாதிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்..

அதுமட்டுமின்றி 1983 ஆண்டில் இனக்கலவரத்தில் சிங்கள மக்களே பாதிக்கப்பட்டார்கள் என்று கூறியிருப்பது இரு இனங்களுக்கிடையேயான நல்லுறவைப் பாரியளவில் பாதிக்கும் எனக் கருதுகின்றேன்.

அதைவிட மேல்மாகாண சபை அமைச்சர் இலங்கையில் வாழும் அனைத்து மக்களையும் சிங்களவர்கள் என்றே அங்கீகரிக்க வேண்டும் என்று சாட்சியமளித்திருப்பது அவரது அறிவற்ற - தெளிவற்ற தன்மையை எடுத்துக்காட்டுகிறது. இவர்கள் போன்று இனவாதத்தைக் கக்கி இலங்கை நாட்டில் அமைதியைச் சீர்குலைப்பவர்களினால் தான் அன்று தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த முற்பட்டார்கள்.

இன்று யுத்தத்திற்கு பின்பு இனங்களிடையே ஏற்பட்டு வரும் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கான முழுமுயற்சியில் நாம் ஈடுபட்டு வரும்போது இப்படிப்பட்டவர்களை அரசு அமைச்சர் அந்தஸ்துடன் வைத்துக் கொண்டிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் கலட்டிச்சந்தியில்....

# AHIEZER SUPPLIERS இன்

# மாபெரும் மலிவு விற்பனை 2011

**Transport Free**

**பல நிறங்களில் கொமட் வகைகள்**
Scoting pan
Bathroom **Tiles**, Bathroom Doors….
**Seeko Marketting** சமையலறை சிங் வகைகள்
***Richardson Bulbs*** 2வருட மற்றும் 1வருட உத்தரவாதத்துடன்

**Nemsuji Motors விசேடமாக**
பித்தளை பம்புகளுடன் 5வருட முழு உத்தரவாதத்துடன்
S-Lon PE+ Water Tanks
350L,500L,750L,1000L Single Layer and Double Layer
10 வருட உத்தரவாத்துடன்
மற்றும் Kevilton Switches, Bajaj Celing Fans, ACL Cables & all kind of PvC Pipes and fittings, PvC & Steel flanges….






**யாரும் எதிர்பாரத அதிரடி விலைக்கழிவுடன்**

## முந்திக்கொள்ளுங்கள்........
## கையிருப்பு உள்ளவரை மட்டுமே





**யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில்.**
**AHIEZER SUPPLIERS**
**No-289, Brown Road, Jaffna.**
**T.P: 021-5100700 Fax: 021-2220227**






# JAFFNA International 2011 TRADE FAIR
*2nd Edition*

**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2011**

**ஜனவரி 21, 22, 23 திகதிகளில்**
**சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக**
(பிரதான வீதி, துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகிலுள்ள)
மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

காட்சிக்கு
வைக்கப்பட்டுள்ளவை
**தினசரி இசை நிகழ்ச்சி**
உயர் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் / விசேட உணவுகள், குடிபானங்கள் முதலியன / கைத்தொழில், விவசாய மற்றும் உங்கள் வீட்டுக்கு தேவையான அனைத்து உபகரணங்களும் / கட்டிட பொருட்களும் உபகரணங்களும் / கைத்தொழில் கருத்தரங்குகள் மற்றும் முதலீட்டு அரங்கம்

ORGANISED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED, A member of SA SOUTH ASIA EXHIBITION SERVICES network

FOR INFORMATION CONTACT:
4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Marker Mw, Colombo 03
Tel: 2390560-2, Fax: 2390563
E-mail: rizwan@saexhibitions.com
HOTLINES: 0773959834, 0773959835, 0772614109
www.saexhibitions.com/jitf

SILVER SPONSOR: dimo TECHNOLOGY
CO-ORGANISED BY: FCCISL Sri Lanka
IN ASSOCIATION WITH: CCIY
CO-SPONSORS: Elephant House, KEELLS, Nilkamal
SUPPORTED BY | PARTNER COUNTRY INDIA | OFFICIAL BANKER BOC | OFFICIAL PRINT MEDIA Sunday Observer, Daily News | OFFICIAL ELECTRONIC MEDIA சக்தி | OFFICIAL FREIGHT FORWARDER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒஸ்மானியாக் கல்லூரியைப் புனரமைக்க பழைய மாணவர்கள் சங்கம் கோரிக்கை

வடமராட்சி,ஜன.10

கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து அழிந்துபோன யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியைப் புனரமைத்து மீண்டும் கட்டியெழுப்ப கல்விமான்களும் புத்தி ஜீவிகளும் இணைந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் எம்.எஸ். ஜஹாங்கிர் தெரிவித்துள்ளார்.

கடந்த 20 வருடங்களாகச் செயலிழந்த இந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்டது. ஒஸ்மானியாக் கல்லூரியை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பழைய மாணவர் சங்கச் செயலாளர் மேலும் கூறியதாவது:

யாழ்.மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களுக்கென தனியான பாடசாலை தேவை என உணரப்பட்டதனால்தான் அந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு உருவான ஒஸ்மானியாக் கல்லூரி முஸ்லிம் சமூகத்தில் பல்வேறுபட்ட புத்தி ஜீவிகளையும், அறிஞர்களையும், அரசியல்வாதிகளையும் உருவாக்கியுள்ளது. கல்வியில் முன்னேறிச் சென்ற ஒஸ்மானியாக் கல்லூரி வடமாகாணத்தைப் பொறுத்தமட்டில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி போன்ற பழைமை வாய்ந்ததும், பிரபல்யமானதுமான கல்லூரிகளுடன் கல்வி நடவடிக்கையில் மட்டுமல்லாது விளையாட்டுத் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் சரிசமமாகப் போட்டியிட்ட ஒரு கல்லூரியாகும்.

முன்னணியில் திகழ்ந்த இந்தக் கல்லூரி 1990 ஆம் ஆண்டு வட மாகாண முஸ்லிம்களின் வெளியேற்றத்துடன் சின்னாபின்னமாகிச் சிதைந்து போனது.


வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீண்டும் மீள்குடியமர்வதில் நாட்டம் கொண்டுள்ளனர். இன்றுவரை யாழ்ப்பாணத்தில் 622 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன. இவர்கள் கல்வித் துறையில் மிகுந்த நாட்டம் கொண்டுள்ளனர்.சிதைந்துபோன ஒஸ்மானியாக் கல்லூரி திருத்தியமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தில் 6 நிரந்தர ஆசிரியர்களுடனும் 10 தற்காலிக ஆசிரியர்களுடனும் கற்றல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த மாதம் 40 மாணவர்கள் மீளக்குடியமர்ந்து இங்கு கல்வியைத் தொடரவுள்ளனர்.

எனவே, இந்தக் கல்லூரியைப் புனரமைத்து கல்விச் சேவையைச் சீர்செய்ய அனைவரது ஒத்துழைப்பையும் நாடுகின்றோம். - என்றார்.

(204-236)

# வீதியோ அவலத்தில் மக்களோ சிரமத்தில்



கைதடி,ஜன.10

கைதடி, கோப்பாய் பால வீதி மோசமான நிலையில் சேதமடைந்திருப்பதனால் இந்த வீதியால் செல்லும் பயணிகளும், வாகனச் சாரதிகளும் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.


இந்த வீதி கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி வீதியில் உள்ள பாலம் மட்டும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட போதும் வீதியைத் திருத்த சாவகச்சேரி பிரதேசசபையோ, கோப்பாய் பிரதேச சபையோ நட வடிக்கை எடுக்கவில்லை எனவும் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(204-288)

## ஒளி பரவட்டும்...



ஊக்குவிப்பு: பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒளிவிழாவில் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற ஒருவருக்கு அருட்திரு மௌலிஸ் அடிகளார் பரிசில் வழங்குகிறார்.அருகில் பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் நிற்கிறார். (319)

# கோப்பாய் பிரதேசத்தில் உதவிக்கொடுப்பனவு விவரம் வழங்கல்

நாவற்குழி, ஜன. 10

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 2011 ஆம் ஆண்டில் பொதுசன மாதாந்த உதவித் தொகை, நோய் உதவித் தொகைகள் வழங்கப்படும் மாதங்களும், உரிய திகதிகளும் தை மாதக் கொடுப்பனவுடன் இன்று திங்கட்கிழமை உரியவர்களுக்கு வழங் கப்படவுள்ளதாக பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.

பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தபாலகங்கள், உப தபாலகங்களில் கொடுப்பனவைப் பெறும்போது கொடுப்பனவு அட்டையுடன் விவரங்கள் தொடர்பான பிரதி வழங்கப்பட உள்ளது.

அரச ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியத் திகதிகள் வழங்கப்படுவதுபோல மாதாந்த உதவித் தொகை பெறுபவர்களுக்கும் வருட ஆரம்பத்திலேயே உதவித் தொகை வழங்கப்படும் திகதிகளை வழங்கும் முன்னோடி முறையை பிரதேச செயலர் அறிமுகம் செய்துள்ளார்.

எனவே மேற்படி புதிய நடைமுறையால் தாம் தெளிவான தகவலைப் பெறக்கூடியதாக உள்ளது என்று பயனாளிகள் தெரிவித்துள்ளனர். (201 - 121)

# காரைநகர் மேற்குப் பிரதான வீதியை புனரமைக்க கேட்கின்றனர் மக்கள்

காரைநகர், ஜன. 10

காரைநகர் மேற்கு பிரதான வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளமையால் அதனை விரைவாகப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் மகாராணி க. சோமசேகரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த பல வருடங்களாக காரைநகர் வாரிவளவில் இருந்து பலகாடு வரையிலான மூன்று கிலோ மீற்றர் வீதி பெரும் சேதமடைந்துள்ளது. இந்த வீதி ஊடாக பொதுமக்களோ, போக்குவரத்து வாகனங்களோ செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் வாரிவளவுடன் வாகனங்கள் திரும்பிச் செல்வதனால் பொதுமக்கள் 3 கிலோ மீற்றர் தூரம் கால்நடையாகப் பயணிக்க வேண்டியநிலை காணப்படுகின்றது. இதனால் பாடசாலை மாணவர், வயோதிபர், நோயாளர், பொதுமக்கள் எனப் பலரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே இந்த வீதியை சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, காரைநகர் ஊரி, பிட்டியோலை, ஈவன்னடைப்பு, கொட்டப்புலம் போன்ற கிராமங்கள் இன்றுவரை மின்சாரம் காணாத பிரதேசங்களாகவே காணப்படுகின்றன. இந்தக் கிராமங்களுக்கு மின்சாரம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(201-250)

# பப்பாசிச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

வலி.தெற்குப்பிரதேச செயலர் பிரிவில் பப்பாசிச் செய்கையை ஊக்குவிப்பதற்கு விவசாயத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக மேற்படி பிரதேசத்திலுள்ள 30 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பப்பாசி நாற்றுக்களும் உள்ளீடுகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை 8 பயனாளிகளுக்கு கால் ஏக்கருக்கு வாழைக் குட்டிகளும் அதற்கான உள்ளீடுகளும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் 50 வீத மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகள் வழங்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (201-38)

# அனுமதியின்றி பட்டாசு விற்றவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

தென்மராட்சி,ஜன.10

அனுமதிப் பத்திரமின்றி பட்டாசு வகைகள் விற்பனை செய்த வர்த்தகர்கருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் பட்டாசுகளை அழிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸாரால் மந்துவில் பகுதி வர்த்தகருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் மா.கணேசராசா, வர்த்தகர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

நீதிவானின்உத்தரவுப்பிரகாரம் பட்டாசுகள் அனைத்தும் நீதிமன்றவளாகத்தில் தீயிட்டு அழிக்கப்பட்டன. (201-207)

# சங்கானை மத்தி குடியேற்றக் காணிப் பங்கீடு தொடர்பாக அமைச்சருடன் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம் ஜன.10

வடக்கின்வசந்தம் அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் சங்கானை மத்தி குடியேற்றத் திட்டக் காணிப் பங்கீடு குறித்து ஆராய்வதற்காக இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்கானை மத்தி குடியேற்றத்திட்ட சுத்திகரிப்பு தொழிலாளர் குழு பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்திக்கவுள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

சங்கானை மத்தி- அராலி ஊரத்தியில் 50வருடங்களுக்கு மேலாக குடியிருக்கும் காணி விடயத்தில் காணிப் பங்கீடு செய்து உறுதிகள் வழங்குமாறு ஜனாதிபதி செயலகம் வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமியை கடிதம் மூலம் கோரியுள்ளது.

எனினும் இதற்கு பொருத்தமான பதில் கிடைக்காததால் அராலி மத்தி ஊரத்தி- சங்கானை மத்தி பகுதி மக்கள் குழு இன்று திங்கட்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை சங்கானை மத்தி அம்பாள் சனசமூக நிலையப் பிரதிநிதிகளான மா.சிவஞானம், செயலாளர் க.தவராசா ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (201-302)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# மீள்குடியமர்ந்த முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். மாவட்டதில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் குறை, நிறைகள் தொடர்பாகவும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாகவும் ஆராய்வதற்கான நடமாடும் சேவை நாளை செவ்வாய் கிழமை காலை 9மணிக்கு ஒஸ்மானியாக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையின் போது யாழ். பிரதேச செயலர், யாழ். கல்வித்திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்கள பிராந்திய உதவி ஆணையாளர், மாவட்ட புனர்வாழ்வுப் பகுதித் திட்டப் பணிப்பாளர், யாழ். மாநகரசபை ஆணையாளர், தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர், ஆள்பதிவுத் திணைக்கள பதவி நிலை உதவியாளர், காணித்திணைக்கள பிரதம நில அளவையாளர், சமூக சேவைகள் திணைக்கள பதவி நிலை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் யாழ். மாவட்டத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெயர்ந்து புத்தளம் மற்றும் பிற மாவட்டங்களில் தங்கியிருந்து தற்போது மீளக் குடியமர்ந்து வரும் முஸ்லிம் மக்களைக் கலந்து கொள்ளு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். காலை வாரி விட்ட சிலரே இப்போது கை கொடுத்து உதவ முன்வருவர். அதிக வேலைப்பளுவை எதிர் கொள்ளலாம். மாற்று மொழி பேசும் நண்பர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும்.

**இடபம்:**
எதிலும் சுயநலத்துடன் செயற்படுவீர்கள். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். உறவினர்கள் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள். பெண்கள் கணவரின் பாராட்டைப் பெறலாம். அரசு தொடர்பான காரியங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். நண்பர்களுக்காக அல்லது முன்பின் தெரியாதவர்களுக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம்.

**மிதுனம்:**
செல்வாக்கு, சொல்வாக்கு பாதிக்கப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். கணவன் மனைவி இடையே சச்சரவுகள் ஏற்படலாம். திட்டமிட்ட பணிகளை திடீரென தள்ளிவைக்கலாம். சில வேலைகளுக்காக ஒன்றுக்கு பலமுறை அலைய நேரிடலாம். சக ஊழியர்களுடன் கோபதாபங்கள் ஏற்படலாம்.

**கடகம்:**
குடும்பப் பெரியவர்களின் கோபத்திற்கு ஆள் படலாம். கடன் விவகாரங்களில் எச்சரிக்கையாக நடந்து கொள்வது நல்லது. ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். வேண்டாத செலவுகளால் சேமிப்பு கரையலாம். நீங்கள் செய்த வேலை ஒன்றை சிலர் தாங்கள் செய்ததாகக் காட்டிக் கொள்ளலாம்.

**சிங்கம்:**
யாருடைய பணமாவது உங்களின் கைகளில் புரளலாம். சில விடயங்களில் அதிகமாகக் கஷ்டப்பட நேரிட்டாலும், ஆதாயம் கிடைக்கும். உங்களின் தேவை ஒன்றை மற்றவர்களின் செலவில் முடித்துக் கொள்வீர்கள். சக ஊழியர்களை அல்லது நண்பர்களை நம்பி ஒப்படைத்த காரியம் நல்லவிதமாக முடிவுக்கு வரும். தம்பதியர் பாசம் கூடும்.

**கன்னி:**
வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். நினைத்தது நடக்க வேண்டும் என பிரார்த்தனை செய்வீர்கள். போட்டி, எதிர்ப்புகள் விலகும். உறவினர் ஒருவர் தொடர்பான விடயங்களைப் பற்றி மற்றொரு உறவினருடன் ஆலோசிப்பீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். எதிர்பாராத சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

**துலாம்:**
பொறுப்புடனும், பொறுமையாகவும் செயற்பட்டு சாதனை படைக்க வேண்டிய நாள். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது. பயணங்களால் அலைச்சல்களைச் சந்திக்கலாம். பல நாள் கடன் மிகுதி ஒன்றைக் கொடுக்கலாம். புதியவர்களின் உதவி கிடைக்கும். நண்பர் ஒருவரைப் பற்றி மற்றொரு நண்பரிடம் விமர்சிப்பீர்கள்.

**விருச்சிகம்:**
அவசரம், வேகத்தைக் குறைத்து நிதானமாகச் செயற்பட வேண்டிய நாள். எதிர்பார்த்த ஒரு காரியம் நடக்காமல் ஏமாற்றத்தைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். முக்கிய பிரச்சினை தொடர்பாக சிலருடன் சண்டை போடலாம். கடிதங்கள் நல்ல செய்திகளைக் கொண்டு வரலாம்.

**தனுசு:**
ஏமாற்றங்களைத் தவிர்க்க விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். வயிறு உபாதைகளைத் தவிர்க்க உணவில் கவனம் அவசியம். சக ஊழியர்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். பெண்கள் கணவரை கேட்காமல் சில வேலைகளைச் செய்து அவர்களின் அதிருப்தி, கோபத்திற்கு ஆளாகலாம்.

**மகரம்:**
எண்ணிய காரியங்கள் எண்ணம் போல முடியும் நாள். பல நாள்களாக வராமல் இருந்த கடன் மிகுதிகள் வரலாம். தொழில் ரீதியாகப் புதிய அனுபவங்களைப் பெற நேரிடலாம். பிள்ளைகள் வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். பயணங்கள் அனுகூலமாக அமையும். உடன் பிறந்தவர்கள் வழியில் சிரமங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:**
ஏமாற்றங்கள், இழப்புகளைத் தவிர்க்க எதிலும் எச்சரிக்கையோடு நடந்து கொள்வது நல்லது. தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல வாய்ப்பு உருவாகலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டியது அவசியம். திட்டமிட்டபடி சில காரியங்கள் நடக்காமல் அதில் மாற்றம் ஏற்படலாம். பெண்களால் சந்தோஷம் உண்டு.

**மீனம்:** சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் இருந்தாலும், பின்னர் சரியாக முடிவுக்கு வரும். எந்த விடயத்திலும் முந்திக் கொண்டு நீங்களாக வாக்குக் கொடுப்பதைத் தவிர்க்கவும். கடன் மிகுதிகளைக் கேட்டு வாங்குவீர்கள். எதிர்வரும் தினங்களில் நடைபெற உள்ள காரியங்களுக்காக முன்னேற்பாடு செய்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம்.

# தன்மீது போர்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி மரணதண்டனைக்குள்ளாக்க முயற்சி என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜன. 10

போர்க் குற்றங்களுக்காகத் தன்னை மின்சாரக் கதிரைக்குக் கொண்டு செல்வதற்கு எதிர்க்கட்சியினரும், உதவி நிறுவனங்களும், வெளிநாட்டு சக்திகளும், புலிகளின் அனுதாபிகளும் முயற்சி செய்வதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடுவெலவில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சில சக்திகள் எனக்கும் பிரதம நீதியரசருக்கும் இடையில் பிளவை ஏற்படுத்த முனைகின்றன. நவம்பர் 19 ஆம் திகதி நடந்த பதவியேற்பு நிகழ்வுக்குப் பின்னர் பிரதம நீதியரசரை நான் சந்திக்கவேயில்லை. அப்படியிருக்கும் போது எங்களுக்குள் எப்படி பிரச்சினை வந்தது. குறிப்பிட்ட சில எதிர்க்கட்சிக் குழுக்கள், உதவி நிறுவனங்கள், வெளிநாட்டு சக்திகள், புலிகளின் ஆதரவாளர்கள் போன்றோர் எனதும் இலங்கையினதும் பெயரைக் கெடுக்கும் நோக்கில் செயற்படுகின்றனர்.

இவர்கள் என்னைப் போர்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி மின்சாரக் கதிரைக்குக் கொண்டு போக விரும்புகிறார்கள். இலங்கைக்கு ஜி.எஸ்.பி வரிச் சலுகையை வழங்கக்கூடாது என்றும்-

வெளிநாட்டு வங்கிகள் கடனுதவிகளை வழங்கக் கூடாது என்றும் இவர்கள் கோருகின்றனர். இலங்கை தோல்வியடைந்த நாடு என்று காட்டுவதற்கும், இங்குள்ள ஆட்சியாளர்கள் அனைத்துலக சட்ட திட்டங்களை மீறும் வகையில் செயற்படுவதாகவும் இவர்கள் பரப்புரைகளில் ஈடுபடுகின்றனர் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# உயிர் வாழ்வு உறுதிச்சான்றிதழ் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஜன.10

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் தாங்கள் உயிர் வாழ்வதற்கான உறுதிச் சான்றிதழை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னதாகப் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு மேற்படி பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

இதற்கான படிவங்கள் ஓய்வூதியர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்தப் படிவங்களை உரியமுறையில் பூர்த்தி செய்து தமது பிரிவுக் கிராம அலுவரால் உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும். அத்துடன் குறிப்பிட்ட திகதிக்குள் உயிர்வாழ்வு சான்றிதழ் சமர்ப்பிக்கத்தவறின் எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தற்காலிமாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (201-7)

# நீங்கள் எந்த வகை?

சுயமாக முன்னுக்கு வருவதை விடப் பிறரைப் பின்பற்றி முன்னுக்கு வருவது சுலபம். பலர் இந்தப் பாதையைத்தான் விரும்புகின்றனர். அத்துடன் நிற்காமல் வித்தியாசமாக விளங்குவதுடன் வேறுபட்டுத் தனித்தன்மை காட்டுவதும் அவசியமானது. அவர்கள் பெறுகின்ற வெற்றியும் அசைக்க முடியாததாகிவிடும். இதுதான் கௌரவமானது.

வீதியோரத்தில் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கடைபோட்டு ஒருவர் உழைத்து முன்னேறினால் இன்னொருவனுக்குப் பொறுக்காது. உடனடியாக அதேமாதிரி கடையை எதிரிலேயே ஆரம்பிப்பான். இப்படி அடுத்தவன் வியாபாரத்தில் மண் அள்ளிப் போடுவான். இந்த இழிவான செயல் தேவையில்லை. ''பெரிதே உலகம், பேணுநர் பலரே'' என்ற சங்கத் தமிழனின் சொல்லைப் புரிந்து கொண்டு ஒன்றையே சாராமல் புதிது புதிதாகப் பல்வேறு தொழில்கள் செய்து உழைக்கப்பழகுவது அவசியம்.

பொதுவாக மனிதர்கள் மூன்று வகை: அந்த வகையில்

எல்லோரும் செய்வதையே தானும் செய்து இறந்து போகிறவர்கள்.

யாருமே செய்ய முடியாததைத் தாமே செய்து வாழ்ந்து காட்டுகிறவர்கள்.

யாருமே செய்ய முடியாததைச் செய்து மரணத்தைக் கொல்கிறவர்கள். இதில் நாம் எந்தவகை என்று பிரித்துப் பார்க்க வேண்டும்.

முற்காலத்தில் 'லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்' என்று அமெரிக்காவில் அனைவரும் அந்த வார்த்தையே பேசியபோது 'பிரதர்ஸ் அண்ட் சிஸ்டர்ஸ்' என்று வித்தியாசமாக விளித்ததால்தான் விவேகானந்தர் கவனிக்கப்பட்டார்; மதிக்கப்பட்டார். அதுபோல் எங்கும் எப்போதும் தனித்தன்மையுடன் வித்தியாசமாக நீங்கள் இருங்கள், கவனிக்கப்படுவீர்கள். வித்தியாசம் வேறு; விபரீதம்வேறு. வேறுபாட்டை விளக்கிக் கொள்ளவில்லை யென்றால் வித்தியாசமான விபரீதங்கள் உங்களுக்கு விளையும்.

புதுமணத் தம்பதிகளிடையே தேனிலவுக்கு எங்கே போவது என்று பேச்சு வந்தது. 'இதுவரை தேனிலவுக்கு எந்த ஜோடியும் போகாத வித்தியாசமாக இடத்துக்கு என்னைக் கூட்டிப் போக வேண் டும்' என்றாள் மனைவி. ''ஸ்கூட்டரில் ஏறு'' என்று மனைவியைக் கூட்டிக் கொண்டு மயானத்துக்குக் கொண்டு வந்து நிறுத்தினான் கணவன். ''சீச்சீ .... மயானத்தில் தேனிலவா?'' கோபமடைந்தாள் மனைவி. கண வன் ''அட... இந்த இடத்தை என்ன அவ்வளவு கேவலமாக நினைக்கி றாயா? இங்கே வருவதற்கு ஒவ் வொருவரும் இறக்கின்றனர்'' என மயானத்தின் மேன்மையை எடுத்துக்கூறினான் கணவன். இது வித்தியாசமல்ல; விபரீதம்.



உலக நாடுகளில் விடுதலைப்போர் நடத்திய எல்லாத் தலைவர்களும் கத்தி, துப்பாக்கி, பீரங்கி, கப்பல், விமானம் போன்றவற்றை நம்பிப் போராடினார்கள். குஜராத்திலிருந்து புறப்பட்ட அந்த ஒரு மனிதன் எந்த ஆயுதமுமில்லாமல் போர்க்களத்துக்குள் புகுந்தார்.

''இந்த நாடு என்னுடையது. உன்னுடையது அல்ல....'' என்ற உண்மையைப் பிரிட்டிஸ்காரர் முன் வைத்துப் போராடினார் அந்த மனிதர். எனவே அந்தச் சத்தியத்தின் முன் எல்லா ஆயுதங்களும் கூர் மழுங்கிப் போயின. அவர்தான் மகாத்மா காந்தி.

''நிராயுதபாணியாக நின்று போராடும் ஒற்றை மனிதரின் போராட்டத்தை வலிமைவாய்ந்த ஆயுதங்கள் வைத்திருக்கும் பிரிட்டிஸ்சர்ச்சிலால் ஏன் நிறுத்த முடியவில்லை?'' என்று எதிர்கட்சிகள் கேட்டபோது சர்ச்சில் சொன்ன பதில் ஆழமானது. ''அந்த மனிதன் கத்தியை எடுத்தால் நான் துப்பாக் கியை எடுப்பேன். துப்பாக்கியை தூக்கினால் நான் பீரங்கியால் முடிவு கட்டியிருப்பேன். பீரங்கி எடுத் துப் போராடினால் நான் குண்டுமழை பொழிந்து அழித்திருப்பேன். அவர் சத்தியத்தை எதிர்க்கும் ஆயுதம் இதுவரை கண்டுபிடிக்கவில்லை என்பதை நண்பருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.'' என்றார் சர்ச்சில்.

ஆனால் வித்தியாசமான ஆயுதத்தைக் கையில் எடுத்தார் காந்தி. அனைவராலும் கவனிக்கப்பட்டார். உலகம் உருவாகிய நாள் முதல் இன்றுவரை உலகத்தைப் பாதித்த நூறுபேர் என்ற பட்டியல் எழுதினால் அதில் மகாத்மா காந்தியும் ஒருவர். உலக வரலாறு அவரை ஒருபோதும் தவிர்க்க நினைக்காது.

வித்தியாசமாகச் செயற்படுபவர்கள் கவனிக்கப்படுவார்கள். விபரீதமாக இருப்பவர்கள் விலக்கப்படுவார்கள். பட்டுப்புடவையுடன் பலபேர் பவனிவரும் திருமண வீட்டில் பளிச்சென்று கைத்தறிப் புடவையை அணிந்துகொண்டு ஒற்றை ரோஜாவைத் தலையில் வைத்திருக்கும் பெண்ணாக இருங்கள். சகோதரிகளே... நீங்கள் கண்டிப்பாகக் கவனிக்கப்படுவீர்கள். வித்தியாசமாக இருங்கள்; வெற்றி நிச்சயம்.

சுகி சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை எதிர்க்கக் கூடாது மகிந்தவின் செய்தி இதுவே



இலங்கையின் பல பகுதிகளிலும் உள்ள தடுப்பு முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுடனும் தொடர்ந்தும் தடுப்பில் வைக்கப்பட்டிருப்பவர்களது நெருங்கிய உறவினர்களுடனும் உலக பொதுவுடமைவாதிகளுக்கான இணையத் தளம் (World Socialist Web Site) அண்மையில் உரையாடியிருந்தது.

தடுப்பு முகாம்களில் எவ்வாறு 'தாங்கள் அடக்குமுறைக்கு உட்பட்டோம் என்பதை மட்டும் அவர்கள் விவரிக்கவில்லை. ஒருவரது அடிப்படை ஜனநாயக மற்றும் சட்ட ரீதியான உரிமைகள் மீறப்படும் வகையில் தாங்கள் எவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தோம் என்பதையும் விளக்குகிறார்கள்.

மே 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளமைப்பு வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து போர் இடம்பெற்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்திருந்த தமிழ்ப் பொதுமக்கள் அரச படையினரால் நிர்வகிக்கப்பட்ட 'நிவாரணக் கிராமங்களில்' அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்த முகாம்களைச் சுற்றி முட்கம்பி வேலிகள் இடப்பட்டிருந்தன. ஆயுதம் தாங்கிய படையினர் 24 மணி நேரமும் காவலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள் அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதோடு தனியான இடங்களில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களிலிருந்த இளவயது ஆண்களிடமும் பெண்களிடமும் விசாரணை நடாத்திக் கொண்டிருந்த இராணுவத்தின் புலனாய்வாளர்கள் தினமும் நூற்றுக்கணக்கானவர்களை சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்து இரகசியமான இடங்களுக்குக் கொண்டு சென்றனர்.

ஈற்றில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களின் தொகை 12,000ஆக உயர்ந்தது. மக்களை அச்சத்திற்குள்ளாக்கி அமைதியாக்குவதே புலனாய்வாளர்கள் இவ்வளவு பெரும் எண்ணிக்கையானோரைக் கைது செய்ததன் நோக்கம்.

விடுதலைப் புலிச் சந்தேகநபர்கள் என்ற பெயரில் 11,696 பேர் கைது செய்யப்பட்டு பல்வேறுபட்ட தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் எனவும் இவர்களில் 5,586 பேர் புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்டார்கள் என்றும் புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுனந்த ரணசிங்க கடந்த திங்களன்று கொழும்பிலிருந்து வெளிவரும் 'த ஐலண்ட்' பத்திரிகைக்குத் தெரிவித்திருந்தார்.

உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் அளவில் பெரிய தடுப்பு முகாம்களின் தேசமாக இலங்கை மாறியிருக்கிறது எனக் கடந்த செப்டெம்பரில் அனைத்துலக நீதிபதிகள் ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது.

இலங்கை அரச படையினரால் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவரும் இந்த இரகசியத் தடுப்பு முகாம்களில் உண்மையில் எத்தனைபேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை சுதந்திரமாக உறுதிப்படுத்துவதற்கான எந்த வழிவகையும் கிடையாது. இந்தத் தடுப்பு முகாம்களின் நிலைமை எவ்வாறுள்ளது என்பதையும் சுதந்திரமான எவரும் உறுதிப்படுத்த முடியாது.

செஞ்சிலுவை அனைத்துலகக் குழுவினர் கூட இந்த முகாம்களுக்குச் செல்வதற்கு அனுமதி இல்லை. சித்திரவதை, நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் காணமல் போதல்கள் என்பவற்றுக்கு இலங்கை இராணுவத்தினர் பெயர் போனவர்கள்.

பொலன்னறுவைக்கு அண்மையில் வெலிக்கந்தைப் பகுதியில் இயங்கி வரும் தடுப்பு முகாமிலுள்ள ஒருவரின் உறவினர்களுடன் நாம் உரையாடினோம்.

குறிப்பிட்ட இந்தப் பகுதியில் காடுகள் அழிக்கப்பட்டு மூன்று தொகுதிகளாக பாரிய தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 17 அடி நீளமான கூடாரங்களின் முன்னாள் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

1,000 பேர் வரை இங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்று குறிப்பட்ட நபர் எங்களிடம் கூறினார். ஒவ்வொரு கூடாரமும் ஆறு அறைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு அறைகளுக்குள்ளும் ஐந்து பேர் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். காட்டின் மத்தியில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தத் தடுப்பு முகாமினைச் சுற்றி முட்கம்பிச் சுருள்கள் இடப்பட்டிருப்பதோடு ஆயுதம் தரித்த படையினர் 24 மணி நேரமும் காவல் செய்கிறார்கள்.

தடுப்பிலுள்ள ஒரு சிலர் மாத்திரமே தலையணைகளையும் பாயினையும் வைத்திருக்கிறார்கள் என அவர்களது உறவினர்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு மாதமும் இவர்களுக்குச் சவர்க்காரக் கட்டி ஒன்று, சம்பூ பை ஒன்று, பற்பசை ஒன்று வழங்கப்படுகின்றன. மூன்று நேரமும் சோறு வழங்கப்படுவதாகவும் ஆனால் அது போதாதிருப்பதாகவும் அதன் தரமும் மோசமாக இருப்பதாகவும் அங்கிருப்பவர்கள் கூறுகிறார்கள்.

உடுபுடைவைகள் மற்றும் ஏனைய தேவைகளை பெற்றோரே அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கிறார்கள். தடுப்பிலுள்ளவர்கள் திருமணம் செய்தவர்களாயின் மனைவி பிள்ளைகளும் இல்லையாயின் பெற்றோர்களும் இவர்களைச் சென்று பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

தடுப்பு முகாம்களின் நிலைமையினை அங்கிருந்து விடுவிக்கப்பட்ட ஒருவர் இவ்வாறு விவரிக்கிறார்.

''சிங்களத் தேசிய வாதத்தினை வலுப்படுத்தும் வகையில் செயற்படுமாறும் கொழும்பு அரசுக்கு தங்களது விசுவாசத்தினைத் தடுப்பிலுள்ளவர்கள் வெளிப்படுத்தவேண்டும் என்றும் வற்புறுத்தப்படுகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் காலையில் அங்குள்ள மைதானங்களில் அணி திரளும் தடுப்பிலுள்ளவர்கள் அரசுக்கு எதிராகச் செயற்படமாட்டேன் என உறுதியுரை எடுக்குமாறு பணிக்கப்படுவதோடு இலங்கை தேசியக் கொடியினை ஏற்றும் நிகழ்விலும் கலந்து கொள்ளவேண்டும் என அறிவுறுத்தப் பட்டிருக்கிறது'' என்றார் அவர்.

இதனைத் [illegible] தடுப்பு முகாமினைத் துப்[illegible]

> **இலங்கை அரச படையினரால் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவரும் இந்த இரகசியத் தடுப்பு முகாம்களில் உண்மையில் எத்தனை பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சுதந்திரமாக உறுதிப்படுத்துவதற்கான எந்த வழிவகையும் கிடையாது.**

கும். பின்னர் தடுப்பு முகாம்களுக்குள்ளேயே அமைக்கப்பட்டிருக்கும் பண்ணைகளில் கடுமையாக வேலை செய்யுமாறும் தடுப்பில் உள்ளவர்கள் பணிக்கப்படுகிறார்கள்.

வெலிக்கந்தைப் பகுதியிலுள்ள தடுப்பு முகாமில் அளவில் பெரிய பண்ணைகளில் நாள் பூராவும் கடும்பணி செய்ய வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. மரக்கறிச்செய்கை, நெற்செய்கை என்பன இங்கு இடம்பெறுகின்றன.

பண்ணைகளில் வேலைசெய்து விட்டு மாலையில் திரும்பும்போது கடுமையான உடற்சோதனைகளுக்கு இவர்கள் உட்படுத்தப்படுகிறார்கள்.

''அரசும் தடுப்பு முகாமினை நிர்வகிக்கும் இராணுவத்தினரும் எங்களை அடிமைகள் போலவே நடத்தினர்'' என தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட இன்னொருவர் எம்மிடம் கூறினார்.

''எங்களது' திருமணத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் எனது கணவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்திருக்கிறார். அதிலிருந்து அவர் விலகிய பின்னர் இயக்கத்துடன் எனது கணவருக்கு எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. எமக்கு நான்கு பிள்ளைகள். மூத்த பிள்ளையின் வயது எட்டு. மாணிக்கம் பண்ணை முகாமில் வைத்து எனது கணவனைக் கைதுசெய்த படையினர் சிறிய விசாரணையின் பின்னர் விடுவித்துவிடுவோம் என எங்களிடம் அவர்கள் உறுதியளித்த போதும் இன்னமும் அவரை விடுவிக்கவில்லை'' என வெலிக்கந்தை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்[illegible] மனைவி எமக்குக் கண்ணீருடன் விவரித்தார்.

போரின் காரணமாக இவர்களது வீடு மற்றும் உடமைகள் அனைத்தும் அழிந்துவிட்ட நிலையில் தனது நான்கு பெண் பிள்ளைகளுடனும் தாயாருடனும் இந்த இளம் பெண் சிறிய ஓலைக் குடிசையில் வசித்து வருகிறாள். ''என்னிடம் போதிய பணம் இல்லாமையினால் கடந்த இரண்டரை மாதங்களாக நான் கணவனைச் சென்று பார்வையிடவில்லை'' என்கிறார்.

''நான் அங்கு சென்று வருவதற்கு 5000 ரூபாவாவது (45 டொலர்) தேவைப்படும். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை சென்று பார்வையிடுவதற்காக செஞ்சிலுவை அனைத்துலகக் குழுவினர் 4,000 ரூபாய்களைத் தருகிறார்கள். நான் எனது பிள்ளைகளுடன் சென்றுவர வேண்டுமெனில் இந்தத் தொகை எமது பயணத்திற்குப் போதாது. முதலில் நான் வவுனியாவிற்குச் செல்ல வேண்டும். அங்கு ஒருநாள் தங்கியிருந்து விட்டு பின்னர் ஏனையவர்களுடன் இணைந்து வாகனமொன்றை ஒழுங்குசெய்து வெலிக்கந்தைக்குச் செல்லவேண்டும். சென்று திரும்ப வருவதற்கு நான்குநாள் ஆகும்'' என்கிறார் இவர்.

இவரது கணவனை காவல்துறையினரோ அல்லது இராணுவத்தினரோ அல்லது புலனாய்வாளர்களோ இன்னமும் விசாரணைக்கு உட்படுத்தவுமில்லை, எந்தவிதமான குற்றச்சாட்டுக்களையும் சுமத்தவுமில்லை. ''இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை எனது கணவனிடமிருந்து கடிதம் கிடைக்கும். இவ்வாறு தடுப்பிலுள்ளவர்களை விடுவிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது வேறு எந்த அரசியல் கட்சிகளோ உருப்படியான எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை'' என இவர் முறையிடுகிறார்.

போர் இடம்பெற்ற காலப் பகுதியில் விடுதலைப் புலிகளை ஆதரித்து நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தற்போது கொழும்பு ஆட்சியாளர்களுடன் இணைந்து செயற்படும் நிலைப்பாட்டினை எடுத்திருக்கிறது. இவ்வாறு தடுப்பில் வைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழர்களின் விடுதலைக்காக எந்தவிதமான போராட்டங்களையும் கூட்டமைப்பு முன்னெடுக்கவில்லை.

தடுப்பில் வைக்கப்பட்டிருப்பவர்கள் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவேண்டும் அல்லது அவர்கள் உடனடியாகவே விடுவிக்கப்படவேண்டும் என அதிபர் ராஜபக்ஷவுடனும் நீதி அமைச்சர் ரவூப்ஹக்கீமுடனும் தாங்கள் உரையாடியிருப்பதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கடந்த மாதம் குறிப்பிட்டிருந்தார். இந்தப் பேச்சுக்களின் விளைவாக ஆக்கபூர்வமாக எதுவுமே இடம்பெறவில்லை. அத்துடன் தடுப்பிலுள்ளவர்களின் விடுதலையினை விரைவுபடுத்தும் வகையில் கூட்டமைப்பு வேறு எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

வவுனியாவிலுள்ள தடுப்பு முகாம் ஒன்றில் கணவன் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு நடுத்தர வயதினையுடைய பெண்ணொருவர் இவ்வாறு கூறுகிறார்.

''போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலப் பகுதியில் இராணுவத்தினரின் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்க விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினை விட்டு தப்பச்செல்வதற்காக நாங்கள் முயற்சித்துக் கொண்டிருந்தோம். இந்த நிலையில் நானும் எனது கணவரும் ஒருவரையொருவர் பிரிந்துவிட்டோம். எறிகணைத் தாக்குதலின் விளைவாக காயமடைந்த எனது கணவர் இராணுவத்தினால் கைதுசெய்யப்பட்டுத் தடுப்பில் வைக்கப்பட்டிருப்பதாக நான் பின்னர் அறிந்தேன்.

''மோசமான வறுமையில் தாங்கள் வாடுகிறோம். எனது உறவினர் ஒருவரின் வீட்டில் இணைந்து வாழும் நாங்கள் உண்ணுவதற்கு எதுவுமற்ற நிலையில் சிலசமயம் பட்டினி கிடந்திருக்கிறோம். என்னிடம் போதிய பணவசதி இல்லாமைனால் பல மாதங்களாகத் தடுப்பிலுள்ள எனது கணவனைச் சென்று நான் பார்க்கவில்லை'' என தனது பரிதாப நிலையினை விபரிக்கிறார் இந்துப் பெண்.

(22ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாழைச் செய்கையில் பாரம்பரிய, நவீன தொழில்நுட்பங்களின் விரிவாக்கம்

யாழ். மாவட்டத்தில் அண்ணளவாக 4000 விவசாயிகள் வாழைச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் சராசரியாக ஒருவர் ½ ஏக்கர் விஸ்தீரணம் எனும் அடிப்படையில் வாழைச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது மாவட்டத்தின் மொத்தமாக 823 ஹெக்ரயர் விஸ்தீரணத்தில் இப்பயிரானது செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. ஆண்டுதோறும் 24690 மெற்றிக்தொன் வாழைப்பழம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

சந்தையை நோக்கிய பொருளாதாரத்தில் கூடிய வருமானத்தை ஈட்டக்கூடிய வகையிலும் சுற்றுப்புறச் சுழலை பாதுகாக்கக்கூடிய வகையிலும் வாழைச் செய்கை முறைமையை மாற்றியமைத்தல் காலத்தின் தேவையாகும். இன்றைய நுகர்வோர் தரமான பழங்களை உண்பதற்கே விரும்புகின்றனர். பழத்தின் தரம் குறைவாக இருப்பதனைக் கருத்திற் கொண்டு வாழைப் பழத்தினை கொள்வனவு செய்வதனைத் தவிர்ப்பதனையும் அவதானிக்க முடியும். பழங்களை விற்பனை செய்யும் தனியார் நிவனங்கள், கம்பனிகள், நகர்புற சந்தை, சுப்ப மாக்கெற் என்பனவும் அவர்களது தர நிர்ணயத்திற்கமைவான பழங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்கின்றன.

பல வாழைச் செய்கையாளர்கள் எதாவதொரு வகையில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட சிறப்புப் பெற்ற பாரம்பரிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். எனினும் எல்லா வாழைச் செய்கையாளர்களும் எல்லா சிறப்புப் பெற்ற பாரம்பரிய தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தாத நிலை காணப்படுகின்றது. மேலும் வாழைப்பழங்களின் தரம், உற்பத்தித்திறன் என்பவற்றை மேம்படுத்தக் கூடியதும் சூழலிற்கு தீங்கேற்படுத்தாத நவீன தொழில்நுட்பங்களையும் தமது உற்பத்திச் செயற்பாட்டில் ஒருங்கிணைக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

தொழில்நுட்ப பரம்பல் பொறிமுறை




உரு 1

உரு 1 இல் காட்டப்பட்ட தொழில்நுட்ப பரம்பல் பொறிமுறையில் காட்டப்பட்டதன் பிரகாரம் தொழில்நுட்ப பரம்பலை ஊக்குவிக்கும் நோக்குடன் இக்கட்டுரை வரையப்படுகின்றது.

**யாழ். மாவட்டத்தில் வாழைச் செய்கையின் உற்பத்திப் போக்கு**

உரு 2 இல் யாழ்மாவட்டத்தின் வாழைச் செய்கை விஸ்தீரணப் போக்கு வாழைச் செய்கையில் ஏற்பட்ட எழுச்சி, வீழ்ச்சி என்பவற்றை தெளிவாக காட்டுகின்றது.

**யாழ்.மாவட்டத்தில் வாழைச் செய்கை விஸ்தீரணம் ஹெக்டேயரில்**





ஏ-9 பாதையுடாக போக்குவரத்து செய்ய முடியாத காலப்பகுதியில் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வாழைப்பழத்தினை வெளிமாவட்டங்களிற்கு அனுப்ப முடியாதநிலை காணப்பட்டது. இதன் காரணமாக உள்ளூர் சந்தைகளில் மிகவும் குறைந்த விலைக்கே விற்பனை செய்ய வேண்டி ஏற்பட்டதால் பல விவசாயிகள் வாழைச் செய்கையினை கைவிட்டனர். 2009ஆம் ஆண்டு ஏ-9 வீதியுடான போக்குவரத்து மீண்டும் ஆரம்பித்த பின்னர் வாழைச் செய்கை விஸ்தீரணம் அதிகரித்துச் செல்கின்றது. வாழைச் செய்கையாளர்கள் வாழைப்பழத்தினை கூடிய விலைக்கு விற்பனை செய்யக்கூடியதாக இருப்பது இதற்குரிய பிரதான காரணியாகின்றது. எனவே வாழைச் செய்கையின் உற்பத்தி மட்டத்தினையும் தரத்தினையும் மேம்படுத்தக்கூடிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் கைக் கொள்ளுதல் வேண்டும்.

**பிரதேச ரீதியான பரம்பல்**

உரு 3 இல் உள்ள பிரதேசரீதியான வாழைச்செய்கை விஸ்தீரண பகுப்பாய்வு உரும்பிராய், புத்தூர், உடுவில் ஆகிய பிரிவுகளில் கூடுதலாக செய்கை பண்ணப்படுகின்றது. (58%) வேலணை, புங்குடுதீவு, அம்பன், பருத்தித்துறை, நல்லூர் ஆகிய பிரதேசங்களில் குறைந்தளவு (7%) விஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்படுகின்றது.

பிரதேசரீதியாக வாழைச் செய்கை விஸ்தீரணம்




உரு 3

**மாவட்டத்தில் செய்கை பண்ணப்படும் வர்க்கங்கள்**

கதலி, இதரை, கப்பல் ஆகிய வர்க்கங்கள் பிரதானமாக செய்கை பண்ணப்பட்டு வருகின்றன. கதலி வர்க்கங்கத்தில் தேன் கதலி, புளிக்கதலி, சீனிக்கதலி என உபபிரிவுகளும் கப்பல் வர்க்கத்தில் கோழிக்கூடு, ஆனைக்கோடன் என உபபிரிவுகளும் இதரையில் கொழும்பு இதரை, உள்ளூர் இதரை என உபபிரிவுகள் காணப்படுகின்றன.

உரு 4 இல் பிரதான வர்க்கங்கள் செய்கை பண்ணப்படும் விஸ்தீரணம் மற்றும் மொத்தச் செய்கை, பரப்பின் ஒவ்வொரு இனத்தினதும் வீதமும் காட்டப்பட்டுள்ளது.

உரு4: யாழ். மாவட்டத்தில் செய்கைபண்ணப்படும் வாழைவர்க்கங்களின் விஸ்தீரணம் சிறியளவில் செவ்வாழை, மருத்துவ வாழை, ஆனைவாழை, பச்சை நாடான், பன்றிவாழை, புவாழை, எம்பொன், சுவேந்திரா ஆகிய




வர்க்கங்களும் செய்கை பண்ணப்படுகின்றது.


கறி சமைக்க பயன்படுத்தப்படுகின்ற மொந்தன் வாழை 14.25 ஹெட்ரேயர் விஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. மொந்தன் வாழையில் சாம்பல் மொந்தன், வெண்மொந்தன், அபிஷேக மொந்தன் என உபபிரிவுகள் காணப்படுகின்றன. அபிஷேக மொந்தன் வரட்சியைத் தாங்கி வளரக்கூடியதால் தீவுப் பகுதியில் வாழைச் செய்கையை அதிகரிப்பதற்கு இது சாதகமான வர்க்கமாகும்.

சி.சிவகுமார்
பிரதி விவசாய பணிப்பாளர் (விரி)
யாழ்ப்பாணம்.

பிரதேசரீதியாக வர்க்கங்களின் பரம்பலை நோக்கும் போது கப்பல் வர்க்கத்தின் செய்கை விஸ்தீரணமானது. இதனை கதலி வர்க்கத்தின் செய்கை விஸ்தீரணத்துடன் ஒப்பிடும்போது புத்தூர், உரும்பிராய், உடுவில் பிரதேசங்களில் குறைவடைந்து காணப்படுகின்றது.

**வாழை இனங்களை பாதுகாத்தலும் பரப்புதலும்**

மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தாய்த்தாவர வாழை மூலவளத் துண்டம்



யாழ். மாவட்ட வாழைச் செய்கையாளர்களிடமிருந்து 19 வர்க்க வாழைக்குட்டிகள் பெறப்பட்டு மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் தாய்த்தாவர வாழை மூலவளத் துண்டம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இத்துண்டத்திலிருந்து 19 வகையான வாழைக்குட்டிகள் வவுனியா விவசாய பாடசாலை, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிற்கான மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்கள், வவுனியா அரச விதை உற்பத்திப் பண்ணை, மருதனார் மடம் விவசாய கல்லூரி, பொலநறுவ பிரதி விவசாய பணிப்பாளர் காரியாலயம் என்பவற்றிற்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் யாழ். மாவட்ட பாடசாலைகள் சிலவற்றிற்கும் இக்குட்டிகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வெவ்வேறு இனங்களை செய்கை பண்ணுவதற்கு ஆர்வமுள்ள யாழ். மாவட்ட விவசாயிகளும் இங்கிருந்து தேவையான இனக் குட்டிகளைப் பெற்று தமது தோட்டங்களில் நாட்டி வருகின்றனர். (வளரும்)



# நெல் வயல்களில் பச்சையிலைத்தத்தி மற்றும் பங்கசு கபிலப்புள்ளித் தாக்கம்

கைதடி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் நாவற்குழி கிழக்கு, கோயிலாக்கண்டி, கைதடி, நாவற்குழி, மறவன்புலவு, தனங்கிளப்பு பகுதி வயல்களில் நெற்பயிரைப் பிரித்துப் பார்க்கும்போது தனியாகவோ அல்லது கூட்டமாகவோ பச்சையிலைத் தத்திகள் நெற்பயிரின் தண்டு, இலையின் பிற்புறத்தேயிருந்து பயிரின் சாற்றை உறிஞ்சிக்குடிப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதன் காரணமாக பச்சையிலைத் தத்தியின் தாக்கத்திற்கு உட்பட்ட நெற்பயிர்களில் இலை மஞ்சளாகி பயிர் வளர்ச்சி குன்றியிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எனவே நெற் செய்கையாளர்கள் தினமும் தமது வயல்களை நன்கு சுற்றிப் பார்வையிட்டு பயிர்களைப் பிரித்துப் பார்த்து பச்சையிலைத் தத்தி காணப்படும் இடங்களுக்கு பின்வரும் பூச்சி நாசினிகளில் ஏதாவதொன்றை விசிறி பச்சையிலைத் தத்தியின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் விளைவில் ஏற்படக்கூடிய பாரிய வீழ்ச்சியைத் தடுக்க முடியும்.

| இரசாயனப் பெயர் | வர்த்தகப் பெயர் | பாவனை முறை |
|---|---|---|
| இமிடாகுளோபிறிட்(Imidaclopride70% WG) | பிறவாடோ(Provado ) | 2.4 கிராம் 16 லீற்றர் நீரில் கலக்கவும் |
| தயாமெதொசாம்(Thiamethoxam 25% WG) | அக்ராறா ( Actara ) | 5 கிராம் 16 லீற்றர் நீரில் கலக்கவும் |
| பிப்ரொனில்(Fipronil g/l SC) | றீஜென்ற்(Regent) | 24 மி.லீ 16 லீற்றர் நீரில் கலக்கவும் |
| பெனோபியூகாப் (Fenobucarb 500g/l EC) | பி.பி.எம்.சி(BPMC)<br>டோசர் Dozer<br>பாசா (Basa) | 56 மி.லீ 16 16 லீற்றர் நீரில் கலக்கவும் |

மேலும் நெற்பயிர்களின் இலைகளில் ஒடுங்கிய கபில நிறமான இலைப்புள்ளிகள் மற்றும் நெல் எரிபந்தம் போன்ற பங்கசு நோய்களின் தாக்கமும் காணப்படுவதால் மேலும் நோய் பரவக்கூடிய சாதகமான சூழல் தென்படுவதால் நோய்த் தொற்றுள்ள வயல்களை இனங்கண்டு பின்வரும் பங்கசு நாசினிகளில் ஒன்றை

| இரசாயனப் பெயர் | வர்த்தகப் பெயர் | பாவனை முறை |
|---|---|---|
| ரெபுகொனெசோல் 250 g/l EW | பொலிகர் | 10 மில்லி லீற்றர் 16 லீற்றர் நீரில் கலக்கவும். |
| காபன்டசிம் 500 g/l SL | பவஸ்ரின் | 12 மில்லி லீற்றர் 16 லீற்றர் நீரில் கலக்கவும். |
| ஐசோபுரோத்தியொலென் 400g/l EC | பியூனென் | 20 மில்லி லீற்றர் 16 லீற்றர் நீரில் கலக்கவும். |
| எடிபென்பொஸ் 300g/l EC | கினோசான் | 40 மில்லி லீற்றர் 16 லீற்றர் நீரில் கலக்கவும். |
| கசுமைசின் 20g/l SL | கசுமின் | 24 மில்லி லீற்றர் 16 லீற்றர் நீரில் கலக்கவும். |

விசிறி நோயைக் கட்டுப்படுத்தி விளைவில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்க்க முடியும்.

குறிப்பு: சகல பீடைநாசினிகளும் 16 லீற்றர் தாங்கிக்கு கணக்கிடப்பட்டுள்ளது. திரவ நாசினிகள் மி.லீ அளவிலும் பவுடர் (தூள்) நாசினிகள் கிராமிலும் அளவிடப்பட்டுள்ளது.

மா.யோகநாதன்,
விவசாயப்போதனாசிரியர்,
கைதடி.

மேலும் விவரங்களுக்கு விவசாயிகள் தயவு செய்து 0778445373 இலக்க தொலைபேசியுடன் தொடர்புகொண்டு உங்களது நெல் வயல் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயம்

(சென்றவாரத்தொடர்ச்சி.....)


350 வருடங்களுக்கு முன்னர் போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது படையெடுப்பை மேற்கொண்டு பூநகரி வழியாக கொழும்புத்துறைக்கு வந்திறங்கி இந்து சமயத்தையும் வழிபாட்டிடங்களையும் அழிப்பதில் ஈடுபட்டனர். அப்போது நல்லூர் அரசகுமாரன் எதிர்மனசிங்கன் இந்தக் கோயில் முன்றலில் வைத்து சிரச்சேதம் செய்யப்பட்டார் என்றும் இந்தக் கோயிலில் குருக்களும் வளேந்திப்போரிட்டு அரசனுடன் வீரமரணமடைந்தார் எனவும் கூறப்படுகின்றது.

அதனைச் சித்தரிக்கும் காட்சி இந்தக்கோயிலின் இராஜகோபுரத்தின் தென் பகுதியில் வடிவமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அருள்மிகு மன்றுளாடும் வதிரிபீட விநாயகர் ஆலயம் ஆரம்பத்தில் மூலஸ்தானத்துடன் கூடிய சிறிய ஆலயம். மற்றும் சுற்றுப்புற மண்டபங்களுடன் தோற்றம் பெற்றாலும் பிற் காலத்தில் செயற்பட்டு வந்த ஆலய பரிபாலனசபையினரின் முயற்சியால் பழனி ஆண்டவர் கோயில், நவக்கிரக, வைரவர், அம்பாள் மீனாட்சி, பஞ்சமுகப் பிள்ளையார் போன்ற இஷ்ட தெய்வங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

காலப்போக்கில் கொடி மண்டபம், சுற்றுக்கொட்டகை, வசந்த மண்டபம், யாகசாலை, வாகனசாலை என்பன அமைக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இந்தக் கோயிலுக்கு இப்பகுதியில் வாழ்ந்த பெருமக்களால் வழங்கப்பட்ட நிலபுல்ங்கள் நிறைய உண்டு. பூநகரி செட்டிய குறிச்சியிலும் இந்தக் கோயிலுக் குரிய ஆதனங்கள் காணப்படுகின்றன.

நாவலர் பெருமானின் சைவ சமய வளர்ச்சிக் காலத்தில் உருவான சைவ வித்தியா சாலையாகிய கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலம், தவத்திரு சிவயோக சுவாமிகள் வாழ்ந்ததும் அவரது ஆச்சிரமத்தைக் கொண்டதுமான புறச்சூழல்கள் இந்த ஆலயத்தின் சிறப்புக்கு மேலும் மெருகூட்டி நிற்கிறது. இலந்தை மரத்தை தல விருட்சமாகவும் ஆலயச்சூழல் எங்கும் உவர் நீராகக் காணப்படக் கோயில் கிணறுகள் அமிர்தம்போன்ற அதிமதுர நன்னீராக அமைந்திருப்பதால் தீர்த்த விசேடமும் கொண்ட திருத்தலமாக விளங்குகின்றது. இதன் தொன்மைக்குச் சான்று பகரும் மரபுரிமைச் சின்னங்களான சுமைதாங்கிகல், ஆவுரஞ்சிக்கல் என்பனவும் இந்த ஆலய வெளிப்புறக் கிணற்றின் அருகே அமைந்துள்ளதைக் காணலாம். கால்நடைகளின் தாக சாந்திக்கென நீர்த்தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் அக்காலத்தில் வாழ்ந்த 'சாமியார்' என்பவரால் தினமும் நீர்நிறைத்து வருவதைக் கண்டவர்களில் நானும் ஒருவன்.

இந்த ஆலயத்தினுள் இருக்கும் இஷ்ட தெய்வங்களில் பழனியாண்டவருக்குத் தனியான வரலாறு உண்டு. நூற்று இருபது வருடங்களைக் கடந்த பழனி ஆண் டவர் சிற்றாலயம் இங்கே காணப்படுகின்றது. இந்தப் பகுதியில் கல்வி, செல்வம், சைவ சமய ஒழுக்கம் என்பவற்றில் சிறந்து விளங்கிய தில்லையம்பலம் குமாரசாமிச் செட்டியார் (கணக்கர்) என்பவர் தமக்குப் பிள்ளைப்பேறு இன்மையால் இந்தியா சென்று தலயாத்திரை மேற்கொண்டு பழனியில் 1890 ஆம் ஆண்டளவில் தங்கி இருந்தார். அப்பொழுது முருகக் கடவுள் அவருடைய கனவில் தோன்றி "இந்த ஜென்மத்தில் உனக்கு மக்கட்பேறு இல்லை. ஆதலால் நீ என்னைப் பிள்ளையாக ஏற்றுப் பரிபாலிப்பாயாக" என்று கூறி மறைந்தார்.



பின்பு கணக்கர் குமாரசாமி பழனியில் பழனி ஆண்டவர் விக்கிரகம் செய்வித்துக்கொண்டு வந்து இலந்தைநகர் வதரி பீட விநாயகர் ஆலயத்தின் வடமேல் திசையில் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து வழிபட்டு வந் தார்.



தனது செல்வம், நிலபுலன்களைக் கோயில் பெயரில் சாதனம் எழுதி வைத் தார். இந்தப் பகுதியில் 'கணக்கர் சந்தி' எனும் இடம் இன்றும் வழக்கில் உள்ளது குறிப்பிடத்தக்கது. காரைநகரில் சிவஸ்ரீ தியாகராஜக் குருக்களை அழைத்துவந்து இங்கே குடியேற்றி கோயில் நித்திய நைமித்தியங்களை நிறைவேற்றி வந்தார். அவருக்குப்பின் மகனான சபாபதிக்குருக்களும் 1934 ஆம் ஆண்டு தொடக்கம் வழித் தோன்றல்களான தி.ச.தியாகராஜ ஐயர், தி.சங்கரராஜக் குருக்கள், ச.கண நாதசர்மா ஆகியோர் பழனியாண்டவர் ஆலய பூசைவழிபாடுகளைக் கவனித்து வருகின்றனர்.

குமாரசாமிச் செட்டியாரைத் தொடர்ந்து அவரது பெறாமகனாகிய நல்லூர் கதிரித்தம்பி சுவாமிநாதன், சரவணமுத்து செல்வராசா ஆகியோர் பரிபாலித்து வந் தனர். தற்போதும் இவர்களது பரம்பரையைச் சேர்ந்தோர் பழனியாண்டவர் ஆல யத்தை நிர்வகித்து வருகின்றனர். அக்காலத்தில் குமாரசாமிச் செட்டியாருக்கு நண் பராயிருந்தவரும் சங்க நூல்கள், ஓலைச் சுவடிகளை அச்சுவாகனம் ஏற்றிய வஞ்மான மகா மகோபாத்தியாய டாக்டர். உ.வே. சாமிநாதஐயரைக் கொண்டு தெண்டபாணி தோத்திரம், ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி ஊஞ்சல், கீர்த்தனங்கள் என்பவற்றைப் பாவித்துப் பழனியாண்டவர் பேரில் பாடப்பட்ட பாமாலையை 1891 ஆம் ஆண்டு சிறுபுத்தமாக வெளியிட்டார்.

*பூவும் புனலுஞ் சுடருநறும்*
*புகையு மேந்தி நினையன்பிற்*
*பூசித் தறியே னனுதினமும்*
*போற்றி நினையே நினைந்துருகி*
*மேவும் பெரியர்ப் பணிந்தொழுகும்*
*விதமு மறியேன் கொடும் பிணியை*
*வீட்டி யெனைவு மொருபொருளா*
*மேவி யாண்ட விதமென்னே*
*வாவு மினமான் மகளிருகன்*
*மணியே யவண்முன் வருகணியே*
*வஞ்ச வவுணர்ப் பொரும்பகையே*
*வானோர்க் கருளும் பெருந்தகையே*
*தாவுந் தகரூர்ந் தருள்பழுத்த*
*தணிக் கற்பகமே தயைசான்றோர்*
*தழைக்கும் வளமா நிலந்தை நகர்த்*
*தண்ட பாணிப் பெருமானே*

என்றவாறு அருகிவரும் அந்த நூலில் பலபாடல்கள் காணப்படுகின்றன. பழனியாண்டவர் திருவிழா ஆடித்திருவோணத்தில் நடைபெறும்.

இலந்தைக்குளம் பிள்ளையார் கோயிலின் பரிபாலனத்தைக் கடந்த காலங்களில் திருஞானசம்பந்தர், சரவணமுத்துக் கிளாக்கர், க.செந்தில்குமரன் ஆகியோர் மேற்கொண்டு வந்தனர்.

தொகுப்பு: எஸ்.யேசுதாஸ்

(வளரும்)

# மக்களின் ஒன்றிணைப்புக்காக...

(சென்றவாரத்தொடர்ச்சி.....)

தற்காலச் சூழலில் உற்பத்தி முயற்சிகள் பெரும்பயன் அளிக்கக்கூடியவை. இதற்காக சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கிராமிய விவசாயி களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் கடன்கள் வழங்கப்படுகின்றன.

சாதாரண கடனுக்கு 10 சதவீதமும் பொதுக்கடனுக்கு 14 சதவீதமும் வியாபாரக் கடனுக்கு 14 சதவீதமும் வட்டி வீதம் கணிக்கப்படுகின்றது. சமாசத்தில் உள்ள காகிதாதி விற்பனை நிலையத்தின் மூலம் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் பாவனைக்கு வேண்டிய படிவங்கள், பற்றுச் சீட்டுக்கள், புத்தகங்கள், காசுப்புத்தகம், தனியார் பேரேடு, கையேடுகள், அங்கத்துவர் பதிவேடு, பொதுப்பேரேடு போன்றன விற்பனை செய்யப்படுகின்றன.

சமாசத்தின் மூலம் கலாசாரத்தைப் பேணும்பொருட்டு ஊக்குவிப்புத்திட்டங்கள் வழங்கப்படுகின்றன. சர்வதேச மகளிர் தினம், கூட்டுறவு தினம் போன்ற விழாக்களை முன்னின்று நடத்தி போட்டிகளையும் ஒழுங்கு செய்து ஊக்கமும் ஆக்கமும் வழங்குகின்றது. 1990ஆம் ஆண்டு ச.முருகனேசன் தலைவராக இருந்த காலப்பகுதியில் 8000 விவசாயிகளுக்கு 'கெயார்' உதவித்திட்டத்தின் கீழ் விவசாய உள்ளீட்டுப் பொருள்க்ள் உதவியாக வழங் கப்பட்டன. இந்தக் காலப் பகுதியில் தான் அபிவிருத்திக் கடன், விழாக்கடன், குறுங் காலக் கடன், இளைஞர் கடன் போன்ற கடன் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.




1999 ஆம் ஆண்டு கே.கே.எஸ் வீதியிலுள்ள தற்போதைய கட்டடம் அமைக்கப்பட்டுச் சமாசப்பணிமனை இயங்கி வருகின்றது. 'கெயார்' நிறுவனத்தால் கணினி இயந்திரங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. 200[illegible] ஆம் ஆண்டு சமாசத்தின் தலை வராக சு.சிவசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டார். இந்தக் காலப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சமாசத்தின் மூலம் சங்கங்களின் ஊடாகப் பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகப்பைகள் வழங் கப்பட்டன. அத்துடன் தேசிய அபிவிருத்தி நிதிய சுனாமிக் கடன் 5 கட்டமாக வழங்கப்பட்டது.

83 ஆவது கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு பாட சாலை மட்டத்தில் கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி போன்றன நடத்தப் பட்டுச் சமாசத்தால் பரிசில்களும் வழங் கப்பட்டன.

2006 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களையும் சமாசம் கௌரவித்தது.

2010ஆம் ஆண்டு செ.இலகுநாதன் தலைவராகப் பொறுப்பேற்றார். இவ்வாறு பலதரப்பட்ட கடனுதவிகளைச் சங்கங்களுடாக வழங்கும் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பணி தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

சமாசத்தின் எதிர்கால இலக்காக மேலைத்தேய நாடுகளில் உள்ளதைப் போல இங்குள்ள சங்கங்களையும் முழுமைத்துவமான பொருளாதார, சமூக, கலாசார சுதந்திர நிறுவனங் களைக் கட்டியெழுப்புதல், சிறந்த கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தி மக்களுக்குத் திறம்பட சேவைகளை வழங்குதல் ஆகும். இதனால் சகல திணைக்களங்களும், நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் எதிர்பார்ப்புகள் ஆகும்.

நிசா, வாணி

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/அக்கராயன் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்- 2011

காலம்: 16.01.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி

இடம்: பாடசாலை பிரதான மண்டபம்

குறிப்பு:

முக்கிய பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாலும் புதிய நிர்வாகசபை தெரிவு இடம்பெறவுள்ளதாலும் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்/ செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்.

(சி/574485)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்
காசிநாதர் சுப்பையா பொன்னம்பலம்
(ஓய்வுபெற்ற அதிபர்)

தோற்றம்:13.09.1926
மறைவு : 11.12.2010

கடந்த 11.12.2010 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் இன்று (10.01.2011) திங்கட்கிழமை மு.ப.10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

குடும்பத்தினர்.

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜன.10

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2341ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "U" என்ற ஆங்கில எழுத்தும் 6/8/5/0/4/9 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசும், முதலாம் பரிசும் வெல்லப்படவில்லை.

8/5/0/4/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/0/4/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 137 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/4/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,387 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

4/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,820 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

9 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,37,054 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 6/8/5/0/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/8/5/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 141 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

6/8/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,392 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

6/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,687 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"U" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 54,817 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (10-16)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1258 சிகப்பு

கன்னி

01 21 30 37

07-01-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 247,290 | 20/- | 4,945,800/- |
| 2 இலக்கங்கள் | 22,662 | 40/- | 906,480/- |
| 1 இல. + லக்கினம் | 22,510 | 60/- | 1,350,600/- |
| 2 இல. + லக்கினம் | 2,068 | 200/- | 413,600/- |
| 3 இலக்கங்கள் | 619 | 1000/- | 619,000/- |
| 3 இல. + லக்கினம் | 58 | 10,000/- | 580,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,215,480/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 666 | | 1,131,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 295,875 | | 10,346,980/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,103,800/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மீனம்

05 28 42 49

ஜக்பொட் பரிசு ரூபா. 600,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 663 | 500/- | 331,500/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 600,000/- | 600,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 666 | | 1,131,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-



# FREE SCHOLARSHIPS
## FOR STUDENTS & SCHOOL LEAVERS

USAID | SRI LANKA

ASAP
Accelerated Skills Acquisition Program
Empowering Youth Through Career Skills

## துரித திறன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழித் திறன்கள், கணனித்திறன்கள் மற்றும் வியாபார தொழில் முயற்சியாண்மைத் திறன்கள் அடங்கலான கற்கைநெறி முற்றிலும் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.




சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் மற்றும் பாடத்திட்டம், கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள எமது பயிற்சி நிலையங்களில் விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். க.பொ.த (சா.த), (உ.த) மாணவர்கள் மற்றும் பாடசாலையை விட்டு விலகியவர்கள் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் நேரில் வரவும்

மேலதிக விவரங்களுக்கு :

Skills for Life
IT ISLAND
GATEWAY CENTRE

347, Kasthuriyar Road, Jaffna. 021 222 7967 / 021 567 5555

கிளைகள் :

New Market Building,
Chavakacheri
021 227 0323

Luxmi Theatre Lane,
Nelliady,
021 226 2395

** விண்ணப்பங்கள் 25.01.2011 வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் **

ENGLISH & IT @ GATEWAY FOR A PROMISING FUTURE


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
15.04.1953

மனங்களில்
11.12.2010



## திருமதி சின்னத்துரை பரமேஸ்வரி

உறவுகள் ஆயிரம்
உலகில் வந்தாலும்- அம்மா
பாலூட்டித் தாலாட்டிய
உன்னைப் போல் வருமா?
சோகங்களே சுமைகளாகி
சோர்வுடன் இன்று இருக்கின்றோம்.
நீ மீண்டும் இம் மண்ணில்
பிறந்திட ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்

நால்நிலைய வீதி,
கைதடி தெற்கு,
கைதடி.

கணவர், பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், தாய், சகோதரர்கள்
மற்றும் உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் கட்டடத்தில் படையினர் தங்கியிருக்க மக்கள் எதிர்ப்பு

சப்ரகமுவ, ஜன.10

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடக் கட்டடத்தை இராணுவ முகாமாக பிரயோகிப்பதற்கு பிரதேச மக்கள் ஆட்சேபணை தெரிவித்துள்ளனர்.

மேற்படி விவகாரம் குறித்து தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அடுத்தமாதம் மொனராகலை, புத்தல பகுதியில் தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இதன் பொருட்டு, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடக் கட்டடத்தை இராணுவத்தினர்கள் தங்குவதற்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக பிரதேச மக்களும், பௌத்த தலைவர்களும், சில உள்ளூர் அமைப்புகளைச் சேர்ந்தோரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பில் பௌத்த துறவிகள் சிலர் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ள போதும், இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாத்தளை களுதாவளையில் தங்கியிருந்த இந்திய வியாபாரிகள் பத்துப் பேர் கைது

மாத்தளை, ஜன.10

மாத்தளை களுதாவளைப் பகுதியில் தங்கியிருந்த இந்திய வியாபாரிகள் பத்துப்பேர் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இந்தியர்கள் குடிவரவுச் சட்டங்களை மீறியுள்ளனர் என்றும், இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்தனர் என்றும் அதிகாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்டபோது அவர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான சேலைகளை வைத்திருந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (204,5)




# அம்பகமுவ பதனசேன கிராமத்திற்குப் பாதை அமைத்துத் தருமாறு கோரிக்கை

## ஒற்றையடிப் பாதையூடாகவே பயணம்

நுவரெலியா, ஜன.10

அம்பகமுக பிரதேசசபைக் குட்பட்ட பதனசேனக் கிராமத்துக்குச் செல்வதற்கு பாதை வசதி இல்லை எனக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

லக்சபான கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட இக்கிராம மக்கள் ஒற்றையடிப் பாதை ஒன்றையே தமது போக்குவரத்துத் தேவைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மழைகாலங்களில் மேற்படி ஒற்றையடிப்பாதை வெள்ளத்தால் மூடப்பட்டு விடுவதால் கிராம மக்களின் போக்குவரத்துகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிடும் பரிதாப நிலை காணப்படுகின்றது.

கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் நோயாளர்களை வைத்திய சாலைகளுக்குக் கொண்டு செல்வதிலும் பாரிய சிரமம் எதிர்நோக்கப்படுகின்றது என கிராம மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

அம்பகமுவ பிரதேசசபையினர் ஜனாதிபதியின் மகநெகும வேலைத் திட்டத்தின்கீழ் இக்கிராமத்துக்கான வீதியை அமைத்துத் தரவேண்டும் - என கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(204-5)

## ஆரம்பம்...



மங்களம்: கண்டி - பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள கேட்போர் கூடத்தில் கால்நடைகள் தொடர்பான அபிவிருத்திக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இ.தொ.கா.பொதுச் செயலாளரும் கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் மங்கள விளக்கேற்றுகின்றார். (ளி)

# மாணிக்கக்கல், மணல் அகழ்வில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன

இரத்தினபுரி, ஜன.10

மாணிக்கக்கல் மற்றும் மணல் அகழ்வு தொடர்பில் அரசால் விதிக்கப்பட்டிருந்த இறுக்கமான நடைமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன. அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரும், இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ.டி.ஜே. செனவிரத்னவின் ஆலோசனைக் கமையவே மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இது குறித்து தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதலான மணலை ஏற்றிச் செல்பவர்களுக்கு இதுவரை காலமும் அபராதமாக விதிக்கப்பட்டு வந்த தொகை குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அனுமதிக்கப்பட்ட நூறு கியூப் மணல் இருநூறு கியூப்பாக உயர்த்தப்பட்டுள்ளது. மாணிக்கக் கற்கள் அகழ்வுக்கான அனுமதிக் கட்டணம் மூவாயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதேசமயம் ஒரே காணியில் வெவ்வேறு இடங்களில் ஒரே அனுமதிப் பத்திரத்தின் கீழ் பல அகழ்வுகளை மேற்கொள்ளவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. (ளி)

# வடக்கு, கிழக்கு பகுதிகளில் தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்படவேண்டும்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.10

எமது நாட்டின் தேசிய கீதம் வடகிழக்கு பகுதிகளில் தமிழ் மொழியில் பாடப்பட வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாகாண கல்வி திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும் போதே முதலமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பகுதிகளில் நிருவாக மொழியாக தமிழ் மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்றாகவும் தமிழ் மொழி உள்ளமை யாவரும் அறிந்த விடையம். ஒரு நாட்டின் தேசிய கீதமானது தேசியக் கொடியைப் போல் நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் சொந்தமானதாகும். இதனை மொழியின் பெயரால் பிழவுபடுத்துவது பல்மொழி நடைமுறை உள்ள நாட்டில் சாத்தியம் குறைவான விடையமாகும். எனவே தேசிய கீதம் எந்த மொழியில் பாடப்படுவது என்ற சர்ச்சைகளுக்கு அப்பால் வடகிழக்கு பகுதியில் தேசிய கீதமானது தமிழ் மொழியிலேயே இசைக்கப்படுதல் வேண்டும்.

யுத்தம் நிறைவடைந்து மக்கள் ஓரளவான சமாதான சூழலையும் இயல்பு வாழ்கையில் அனுபவிக்கின்ற தருணத்தில் எமது நாட்டின் உறுதியான சகோதரத்துவத்தையும் சமாதானத்தையும் கட்டி எழுப்புவதற்கு பதிலாக மீண்டும் மொழியின் பெயரில் இனத்தின் பெயரினால் பிழவுகளை ஏற்படுத்த விளைவது முட்டாள் தனமான விடையமாகவே நான் காண்கின்றேன்.

எனவே ஒன்றுபட்ட நாட்டுக்குள் அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் வாழ்வதற்கு அனைவரும் பாடுபட வேண்டும் என இச்சிறப்பு மிக்க விழாவில் அழைப்பு விடுகின்றேன் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார். (204-21)

# ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளராக நௌஷாத்

அம்பாறை, ஜன.10

ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எம். நௌஷாத் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கடந்த புதன்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.




முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எம்.நௌஷாத் கடந்த வருடம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதியின் மாவட்ட இணைப்பாளராக நியமிக்கப்பட்ட நௌஷாத் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(ளி)

# திருகோணமலை மாவட்டத்தில் தொடர்மழையால் மக்கள் அவதி

திருகோணமலை, ஜன. 10

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்மழையால் தாழ்ந்த பகுதிகளில் வாழும் மக் களின் நிலைமை மோசமடைந்து வருகின்றது. தொற்றுநோய்கள் பரவலாம் என்ற அச்சம் தலைதூக்கியுள்ளது. 13 தினங்களுக்கு மேலாக மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

மூதூர் கிழக்கில் அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் சுமார் 400 குடும்பங்களின் தற்காலிக் கொட்டில்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கடற்கரைச்சேனை, வள்ளிகேணிப் பகுதியில் வெள்ளத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு பிரதேச செயலகம் தொண்டரமைப்புக்களுடனும் தொடர்பு கொண்டுள்ளது.

வயல் நிலங்கள், தோட்டங்கள் ஆகியவையும் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளன. அதனால் மீளக்குடியமர்ந்த பல குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ளி)

# பிரிகேடியர் சுமேத பெரேராவுக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம்

திருகோணமலை 22ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரியாகக் கடமையாற்றிய பிரிகேடியர் சுமேத பெரேரா கடந்த முதலாம் திகதி தொடக்கம் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டு வவுனியா இராணுவ தலைமையகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா திருகோணமலையில் இருந்த காலத்தில் பாடசாலை மட்டத்தில் வலைப்பந்து விளையாட்டை அபிவிருத்தி செய்யும் முகமாக பயிற்சி முகாம்களுக்கு ஏற்பாடு செய்திருந்தவராவார். (ளி)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

மட்டக்களப்பு, ஜன.10

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இதனால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) சுகாதார வைத்திய அலுவலகத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி), கோறளைப்பற்று மத்தி ஆகியவற்றுக்கான சுகாதார வைத்திய அதிகாரியான எம்.அச்சுதன் தலைமையில் இந்த நடவடிக்கை ஆரம்பமானது.

மீராவோடைக் கிராமத்தில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டன என சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இந்த நிலையில், மூன்று தினங்களுக்குள் நுளம்புகள் பெருகும் இடங்களைத் துப்புரவு செய்ய வேண்டும்.

இவ்வாறு துப்புரவு செய்யத் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் கூறினார்.

டெங்கு ஒழிப்பு நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரிகளுடன் கிராம சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொலிஸார், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(204-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணமயமான நிகழ்வு.....



சிறார்களின் எழுச்சி: புளிவேந்தன் சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்தக் கலைவிழா அண்மையில் தென்மராட்சி கலைமன்றக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது இடம்பெற்ற சிறுவர்களின் குழு நடனத்தினைக் காணலாம். (ற)

## வருட நிறைவு விழாக்களின் பெயர்கள்

| | |
|---|---|
| 1 ஆம் வருட நிறைவு - காகித விழா | 13ஆம் வருட நிறைவு - லெஸ் விழா |
| 2 ஆம் வருட நிறைவு - பருத்தி விழா | 14ஆம் வருட நிறைவு - தந்த விழா |
| 3 ஆம் வருட நிறைவு - தோல் விழா | 15ஆம் வருட நிறைவு - படிக விழா |
| 4 ஆம் வருட நிறைவு - பூ விழா | 25ஆம் வருட நிறைவு - வெள்ளி விழா |
| 5 ஆம் வருட நிறைவு - மர விழா | 30ஆம் வருட நிறைவு - முத்து விழா |
| 6 ஆம் வருட நிறைவு - கற்கண்டு விழா | 40ஆம் வருட நிறைவு - மாணிக்க விழா |
| 7 ஆம் வருட நிறைவு - செம்பு விழா | 50 ஆம் வருட நிறைவு - பொன் விழா |
| 8 ஆம் வருட நிறைவு - வெண்கல விழா | 60ஆம் வருட நிறைவு - மணி விழா / வைரவிழா |
| 9 ஆம் வருட நிறைவு - மணிக்கலச விழா | 75ஆம் வருட நிறைவு - பவள விழா |
| 10 ஆம் வருட நிறைவு - தகர விழா | 80ஆம் வருட நிறைவு- அமுதவிழா |
| 11 ஆம் வருட நிறைவு - எஃகு விழா | 100ஆம் வருட நிறைவு - நூற்றாண்டு விழா |
| 12 ஆம் வருட நிறைவு - லினன் விழா | 1000ஆம் வருட நிறைவு - மிதலேனியம் விழா |

ஊர்மிலா உதயகுமார், பேராதனைப் பல்கலைக்கழகம்

## இலங்கையில் உள்ள பிரதேசங்கள்

| | | | |
|---|---|---|---|
| மாகாணங்கள் | - 09 | பிரதேச செயலர் பிரிவுகள் | - 312 |
| மாகாண சபைகள் | - 08 | மாநகர சபைகள் | - 17 |
| நிர்வாக மாவட்டங்கள் | - 25 | நகர சபைகள் | - 38 |
| தேர்தல் மாவட்டங்கள் | - 22 | பிரதேச சபைகள் | - 258 |
| கல்வி மாவட்டங்கள் | - 31 | கிராம சேவகர் பிரிவுகள் | - 1500 (கிட்டத்தட்ட) |
| உள்ளூராட்சி சபைகள் | - 311 | | |

சோபியா, யாழ்ப்பாணம்.

## அன்புள்ள ஆவியே!




''ஙொய்ய்ய்...'' என்ற சத்தம் பரமார்த்தரின் காதைத் துளைத்தது. படுத்துக் கொண்டு இருந்தவர், எழுந்து மேலே பார்த்தார். அவர் தலையைச் சுற்றிலும் சில கொசுக்கள் பறந்து கொண்டு இருந்தன. உடனே தம் சீடர்களைக் கூப்பிட்டார்.

''குருதேவா! இதென்ன விசித்திரமாக இருக்கிறது? இது மாதிரிச் சின்னச் சின்னப் பறவைகளை இதற்கு முன்பு நாம் பார்த்ததே இல்லையே!'' என்றான் மட்டி.

அப்போது, குருவையும் சீடர்களையும் சில கொசுக்கள் கடித்தன.

வலி தாங்காத குரு கத்தினார், சீடர்களும் அவருடன் சேர்ந்து கூச்சல் போட்டனர்.

''குருநாதா! இந்தப் பறவைகள் ஏன் நம்மைக் கடிக்கின்றன?'' எனக் கேட்டான் மடையன்.

அவை கொசுக்கள் என்பது பரமார்த்தருக்குத் தெரியாது. உண்மையைச் சொன்னால் சீடர்கள் கேலி செய்வார்கள் என்று நினைத்தார். அதனால், ''ஒரு சமயம் நான் வேட்டையாட காட்டுக்குப் போயிருந்தேன். அப்போது ஒரு மரத்தில் நூறு பறவைகள் இருந்தன. எல்லாவற்றையும் அம்பு எய்து கொன்று விட்டேன். அதன் ஆவிகள்தான் இப்போது வந்து தொல்லை கொடுக்கின்றன'' என்று புளுகினார்.

உடனே சீடர்கள், ''அன்புள்ள ஆவியே, எங்கள் குருவின் குற்றத்தை மன்னித்து, எங்களுக்குத் தொல்லை தராமல் இருங்கள்'' என்று ஒவ்வொரு கொசுவிடமும் வேண்டினார்கள்.

''உஸ்ஸ்... சத்தம் போடாதே... ஆவிகளுக்கு நாம் பேசுவது கேட்கும். அதனால் எல்லாப் பறவைளையும் தந்திரமாகத்தான் பிடிக்க வேண்டும்'' என்று மெல்லக் கூறினான், முட்டாள்.

''குருவே! ஒவ்வொரு பறவையாகப் பிடித்துத் தூக்கில் தொங்கவிட வேண்டும்!'' என்று குதித்தான், மூடன்.

''அதைவிட, அதற்குக் ''கிச்சு கிச்சு'' மூட்டி, அது சிரித்துக் கொண்டு இருக்கும்போதே, ஊசியால் குத்திக் கொலை செய்து விடலாம்!'' என்றான் மண்டு.

''சரி...சரி... முதலில் ஒவ்வொரு பறவையாகப் பிடியுங்கள்'' என்று கட்டளை இட்டார் குரு.

மண்டுவின் மொட்டைத் தலையில் உட்கார்ந்திருந்த ஒரு கொசுவை அடிக்க நினைத்தான் முட்டாள். தன் தலையில் இருந்த கொள்ளிக் கட்டையால் அவன் தலையில் ஓங்கி ஒரு அடி அடித்தான்.

மண்டையில நெருப்புப் பட்டதும், ''ஐயோ...'' என்று கதறினான் மண்டு.

மெல்ல ஒரு கொசுவைப் பிடித்தான், மட்டி. அதற்குக் கிச்சு கிச்சு காட்டினான், மடையன். பரமார்த்தரோ, தம் கைத்தடியால் அந்தக் கொசுவை நசுக்கப் பார்த்தார். அதற்குள் அது பறந்து போய் விட்டது.

சற்று நேரத்தில் எல்லாக் கொசுக்களும் வேறு எங்கோ பறந்து சென்று விட்டன.

''குருவே'' இந்தப் பறவைகளுக்கு மந்திரம் தெரியும் போலிருக்கிறது. நம் திட்டத்தைத் தெரிந்து கொண்டு மாயமாய் மறைந்து விட்டன'' என்றான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திமிங்கலம்



நான் ஒரு திமிங்கலம். நான் கடலில் வசிக்கிறேன். மீனைப் போல் நீந்துவேன். இருந்தாலும் மீன் இனத்தைச் சேர்ந்தவன் அல்லன். நான் ஒரு வெப்ப இரத்தப் பிராணி.

கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், என் மூதாதை இனங்கள் நிலத்தில் வசித்தன. பல மிருகங்களைப் போல் நான்கு கால்களைக் கொண்டிருந்தன. உடலில் உரோமம் நிறைந்திருந்தது. ஆனால் ஏனோ தெரியவில்லை. அவர்கள் கொஞ்சங் கொஞ்சமாக கடலில் வாழத் தொடங்கிவிட்டனர். நான் என் முன்னோர்களைப் போலில்லை என் மேல் உரோமம் இல்லை. கால்களும் எனக்கில்லை. என் உடல் வழு வழுப்பாக உள்ளது. அந்த வழுவழுப்பு நீரில் நீந்தப் பொருத்தமாக அமைந்துவிட்டது.

வெப்ப இரத்தப் பிராணியான நான் எப்படிக் குளிர் மிகுந்த கடல் நீரில் வசிக்க முடிகிறது என்று வியப்படைகின்றீர்களா? என் உடலின் தோலுக்கு அடியில் தடித்த கொழுப்பு நிறைந்துள்ளது. அது என் உடலை எப்போதும் வெப்பமாக வைத்திருக்கும். நான் மீன் இனத்தைச் சேர்ந்தவனன்று. ஆதலால் எப்போதும் நீருக்கடியிலேயே என்னால் இருந்து விட முடியாது. குறிப்பிட்ட நேரத்திற்கு ஒருமுறை நீரின் மேல் மட்டத்திற்கு வந்து சுவாசித்து விட்டுப் போவேன். நீரின் மேல்மட்டம் வந்ததும் காற்றை வெளிமூச்சாக விடுவேன். நான் வெளியிடும் அந்த வெப்பக் காற்று நீரின் மேல்பட்டதும் அங்கு மேகம் போல் நீராவி பரவும் கடலில் திமிங்கிலங்கள் ஒரே சமயத்தில் மேல் மட்டத்திற்கு வராது மூச்சுவிட்டால் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும் என்பார்கள். உங்களுக்கு ஆயிரம் கண்கள் உள்ளனவா?

நாங்கள் சமுத்திரங்களில் வாழத் தொடங்கியதும் மிகவும் பெரிதாக வளர்ந்து விட்டோம். திமிங்கிலம் தான் உலகின் மிகப் பெரிய உயிரியாகக் கருதப்படுகின்றது. நான் பிறந்து ஆறு மாதங்கள் வரை என் தாய் எனக்கு உணவு தேடித் தந்தார். இப்போதெல்லாம் உணவு தேடுவது எனக்குப் பிரச்சினை இல்லை. நான் என் அகன்ற வாயைத் திறந்துகொண்டே கடலின் அடியில் நீந்திச் செல்வேன். கடலில் வாழும் பல ஆயிரக்கணக்கான உயிரினங்கள் என் வாயினுள் சிக்கிக்கொண்டு வயிற்றுக்குள்போய் விடும். எனக்குப் பற்கள் கிடையாது. என் வாயில் பெரிய சீப்புப்போன்ற எலும்பு தொங்குகிறது. அதுவே என் உணவை கடல் நீரிலிருந்து வடிகட்டி வயிற்றுக்குள் அனுப்புகிறது. கடலில் வாழும் உயிரினங்களுக்கெல்லாம் ஒரு மிரட்டலாக இருந்து வருவது உயிர்க்கொல்லித் திமிங்கலங்களான எம்மில் ஒரு பிரிவுதான் அவை கூட்டங் கூட்டமாக கடலில் நீந்திச் செல்லும். பெரிய சுறா மீன்களும் கூட இவற்றைக் கண்டு அஞ்சும். அவை மிகவும் வேகமாக நீந்தும் பலமிக்க திமிங்கலங்கள். அவை கடலில் வாழும் நீர் நாய், நீர்ச்சிங்கம், பென்குயின் இன்னும் என்னைப்போன்ற மற்ற திமிங்கிலங்களையும் உண்ணும். எதிர்காலத்தில் திமிங்கிலங்களைக் கப்பல்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், இன்றைய உலகில் மனிதன் அவற் றைப் பிடித்து சாந்தப்படுத்தி தன் வளர்ப்புப் பிராணியாக மாற்றி வருகிறான். விஞ்ஞானிகள்அவற்றின் இயல்புகளை நுணுக்கமாக ஆராய்ந்து வருகின்றனர். நீங்கள் வீட்டில் வளர்க்கும் நாய், பூனை போல கடலில் வாழும் திமிங்கலங்களையும் மனிதர்களுக்குப் பயனுள்ள உயிரினமாகமாற்ற முடியும் என அவர்கள் நம்புகின்றனர்.

லோ.தானுஜன்.

## அகராதிச் சொற்கள்

| | |
|---|---|
| ஆகக்கூடி | : மொத்தமாகச் சேர்ந்து. |
| ஆக்கிரோஷம் | : வெறி, ஆவேசம். |
| ஆடிப்போதல் | : நிலை குலைதல். |
| ஆட்டம் கொடுத்தல் | : நிலை தளர்தல். |
| ஆதியோடந்தமாக | : ஆரம்பம் முதல் முடிவுவரை. |
| ஆத்திரம் | : வெறி,மனக்கொதிப்பு. |
| ஆத்மார்த்தம் | : மனம் பொருந்திய தன்மை. |
| ஆப்பு வைத்தல் | : கோள் சொல்லுதல். |
| ஆயாசம் | : களைப்பு. |
| ஆரவாரம் | : பலரும் சேர்ந்து ஒலி எழுப்புதல். |

அ.கஜனா




## சந்திரன்



நீலவானக் கடலுக்குள்ளே
நிலவே நீந்தி வா நீ.
நீந்தி வரும் போது வைரம்
நிறைய அள்ளி வா.

வைர மாலை மின்னட்டும் நாலில்
கட்டித் தருகிறேன் - எங்கள்
வீட்டுக்கு மின்சாரமாகி
விரைந்து ஓடி வா.

நிலாச்சோறு உனக்கு நானும்
பொங்கித் தருகிறேன் - அதை
நீயும் நானும் சேர்ந்து உண்போம்
நிலத்தில் ஓடி வா

வெள்ளை உள்ளம் உனக்கு
தந்தது யாரு - அதை
எல்லாருமாய் பங்கு கொள்ளும்
வழியினைக் கூறு.

செல்வராஜா - நிலக்ஷன், ஸ்ரீ இந்து
யாழ். ஆரம்பப் பாடசாலை

### குறிப்பு

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 20ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட படத்திற்கான குறிப்பு,

''வடமாகாணக் கல்வித்திணைக்களம் மாகாண மட்டத்தில் நடத்திய ஆங்கில தினப் போட்டியில் 1ஆம் இடத்தைப்பெற்ற உடுவில் மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் நடனம்'' என்றிருக்க வேண்டும். தவறுதலாக வேறு படவிளக்கம் இடம்பெற்றுவிட்டது.

# ஜீவன் எமது உறுப்பினர் அல்ல என்கிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், ஜன.10

சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களை விற்பனை செய்து கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ். நகரில் கைதுசெய்யப்பட்டிருக்கும் அன்ரன் அல்லது ஜீவன் என்பவர் எமது கட்சி உறுப்பினர் அல்லர்.

சில காலங்களுக்கு முன்னர் எமது கட்சி வேலைகளில் ஈடுபட்டிருந்து பின்னர் கட்சியில் இருந்து விலக்கப்பட்டிருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் உதயனில் வெளியாகிய செய்தி குறித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அனுப்பிவைத்துள்ள மறுப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஐந்து வருடங்களாக எம்மோடு எந்த வித உறவுகளோ, தொடர்புகளோ இல்லாத குறித்த நபரின் சட்ட நடவடிக்கைகளை எமது கட்சியோடு எவரும் சம்பந்தப்படுத்துவது கண்டனத்துக்குரிய விடயமாகும்.

அண்மைக்காலமாக, குறிப்பாக யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் வன்முறை சம்பவங்கள் குறித்து எமது செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்ததை சகலரும் அறிவர்.

இதேவேளை, இந்த விடயங்கள் குறித்து நாடாளுமன்றத்திலும் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் உரையாற்றும் போது யாழ்ப்பாணத்தில் நடக்கும் சட்ட விரோதச் செயல்கள் தொடர்பாக எமது கண்டனத்தைத் தெரிவிப்பதோடு, அவை தடுக்கப்படவேண்டும் என்றும் குற்றவாளிகள் சட்டத்துக்கு முன்னால் கொண்டு வரப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் ஒரு தனிநபரின் சட்ட விரோத நடவடிக்கையை எமது கட்சியோடு சம்பந்தப்படுத்தும் விதமாக செய்திகளை திரிபுபடுத்துவது வன்மையான கண்டனத்துக்குரிய விடயமாகும்.

கைது செய்யப்பட்டிருக்கும் அன்ரன் அல்லது ஜீவன் என்ற நபர் குறித்த விசாரணைகள் பொலிஸாரால் நடத்தப்பட்டுள்ள நிலையில், அவர் சட்ட விரோத மாகத் தயாரிக்கப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களை விற்பனை செய்திருந்தார் என்ற குற்றச்சாட்டே பதிவில் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், கைது செய்யப்பட்ட நபரைத் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தி சட்ட விரோத அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் பின்னணிகளையும் அறிந்து அவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல் அவலப்பட்டு துயரங்களை சுமக்கும் எமது மக்கள் மீது மேலும் துயரங்களைச் சுமத்தும் வகையிலான வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவது எமது கட்சி கொள்கையோ அன்றி நடைமுறையோ அல்ல. அவ்வாறு செயற்படுவோர்களுக்கு எமது கட்சியில் உறுப்புரிமையும் இல்லை.

ஆனாலும், அரசியல் காழ்ப்புணர்ச்சிகளின் காரணமாக கடந்த காலங்களிலும் எம்மீதான பழிகள் சுமத்தப்பட்டு வந்திருந்தமையும், அதை எமது மக்கள் புரிந்து கொண்டு எமக்கான அரசியல் அங்கீகாரத்தை தொடர்ந்து வழங்கி வந்திருக்கிறார்கள்.

ஆகவே, எமது மக்கள் முகம் கொடுக்கும் மனிதாபிமானப் பிரச்சினை குறித்து சகலரும் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள முன்வர வேண்டும் என நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். - என்றுள்ளது. (ம)

# ஜீவன் ஈ.பி.டி.பி. உறுப்பினரே என்கிறது படைத்தரப்பு

யாழ்ப்பாணம் , ஜன.10

சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களை விற்பனை செய்து கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ். நகரில் கைது செய்யப்பட்டுள்ள நபர் ஈ.பி.டி.பி. உறுப்பினரே என்று யாழ். 51 ஆவது படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 9 ஆம் திகதி மாலை 06.20 மணியளவில் போலி ரிக்கெட் விற்பனையில் ஈடுபடுவது போன்று நடித்து யாழ்ப்பாணம் கன்னியர்மடம் வீதி வீடொன்றில் கொள்ளையிட முற்பட்டதாகக் கூறப்படும் தமிழர் ஒருவர் தப்பிச் செல்ல முற்பட்ட போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் களவுகள் பரவலாக இடம்பெற்றுள்ளதுடன், மேற்படி களவுகளுக்கும் இவருக்கும் தொடர்புகள் உள்ளனவா என்பது பற்றி அறிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, மேற்படி நபர் ஈ.பி.டி.பி அமைப்பைச் சேர்ந்தவர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.- என்றுள்ளது. (ம)

## பாராட்டு விழா

தென்மராட்சி, ஜன.10

யாழ்.பல்கலைக்கழகத்தினால் கடந்த வருடம் 'கௌரவ கலாநிதி' பட்டம் வழங்கப்பட்ட நாதஸ்வர வித்துவான் மு.பஞ்சாபிகேசனுக்குப் பாராட்டு விழா விரைவில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாடு களைத் தென்மராட்சி கலை மன்றத்தினர் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (204-207)

## மறைக்கல்வி நிலையத்தால் கலண்டர் வெளியீடு

குருநகர், ஜன.10

யாழ். மறைக்கல்வி நிலையத்தினால் இந்த ஆண்டிற்கான திருவழிபாட்டு மாதக்கலண்டர் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கலண்டர் கத்தோலிக்க ஆலயப் பங்குகளில் வைத்து இக்கலண்டர் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. மேற்படி கலண்டரில் கத்தோலிக்க மக்களின் மாதாந்த ஆலயத் திருவிழா மற்றும் நாளாந்தம் வாசிக்கப்படவேண்டிய வேதாகம வசனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (201-51)

## சங்கீத கதாபிரசங்கம்

யாழ்ப்பாணம், ஜன.10

காரைநகர் பயிரிக்கூடல் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் கொடியேற்ற தினமான இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் சங்கீத கதாபிரசங்கம் நடைபெறும்.

"முருகன் பெருமை" என்னும் தொனிப் பொருளில் நடைபெறவுள்ள சங்கீத கதாபிரசங்கத்திற்கு சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஊகசபாபதி நாகேஸ்வரன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் இசையாசிரியர் கலாவித்தகர் சிற்றம்பலம் சிவஞானராஜா ஆகியோர் பிரசங்கம் நிகழ்த்துவர். (ற)

# 18 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

## செல்வி பொன்னம்மா செல்லையா

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்.மத்திய கல்லூரி)



அன்னை மடியில்
16.02.1939

ஆண்டவன் அடியில்
24.12.2010

எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டியாக இருந்த
உங்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மைத்துனி:
திருமதி இ.சறோ
(கனடா).

பெறாமக்கள்:
திருமதி செ.லைலாராணி (லண்டன்),
நா.சுரேஸ்குமார் (கனடா),
திருமதி உ.பத்மராணி (கனடா).

மருமக்கள்:
இ.பாஸ்கரன் (லண்டன்),
திருமதி பா.சுகந்தி (கனடா),
திருமதி ச.தமயந்தி (சுவிஸ்),
திருமதி தி.சாந்தி (அமெரிக்கா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பொதுச்சபை உறுப்பினர்
வ.பஞ்சலிங்கம் அவர்களின் பாசமிகு தாய்

**வல்லிபுரம் பெரியபிள்ளை**

இறைபதம் அடைந்த செய்திகேட்டு துயரடைவதுடன்
அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவைக்கந்தன் சிக்கன கடனுதவிக்
கூட்டுறவுச் சங்கம், மாவிட்டபுரம்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்
**சின்னத்தம்பி சின்னையா**



தோற்றம்
18.11.1930

மறைவு
11.12.2010

கடந்த 11.12.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் சின்னத்தம்பி சின்னையா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.01.2011) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அளவெட்டி கிழக்கு,
கும்பலை.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## ஞானப்பிரகாசம் வசந்தகுமாரன்



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் வசந்தகுமாரன் கடந்த (08.01.2011) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம்-வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ட செல்வப்புதல்வனும், காலஞ்சென்ற இராதாகிருஸ்ணன் மற்றும் பாலகிருஸ்ணன் (யாழ்ப்பாணம்), சந்திரகுமாரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலேஸ்வரி (மட்டக்களப்பு), தனலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கார்த்திகா (கனடா), கார்த்தீபன் (மட்டக்களப்பு), பிரதீபன் (லண்டன்), யசோதா (நெதர்லாந்து), கவிதா (பிரான்ஸ்), நந்தகுமாரன் (சுவிற்ஸர்லாந்து), ரஜனி (கொழும்பு) ஆகியோரின் பெரியதந்தையும், கணேஷ்குமார் (கனடா), சுதாகரன் (நெதர்லாந்து), பாலச்சந்திரன் (பிரான்ஸ்), சிவப்பிரியா ((சுவிற்ஸர்லாந்து)), மோகன்ராஜ் (கனடா) ஆகியோரின் சிறிய மாமனும் அக்ஸ்மன் (கனடா), கம்ஷா, கிஷோன், தக்க்ஷா (நெதர்லாந்து), பிரியங்கா, தனுஷியா, தனுஷியன் (பிரான்ஸ்), துஷாஞ்சலி (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3மணிக்கு கொட்டு பனை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரர்கள், பெறாமக்கள்,
பாலகிருஸ்ணன் (0777241802),
சந்திரகுமாரன் (பிரான்ஸ்- 0033609146560),
நந்தகுமாரன் (0041783035475).

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

## திருமதி கனகம்மா கனகரட்ணம்

(வசாவிளான் தெற்கு)



வசாவிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும், கொட்டாஞ்சேனை புளுமெண்டல்Aif4 தொடர்மாடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா கனகரட்ணம் 08.01.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை கனகரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தவனம்-தில்லைநாயகி தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற கனகசபை- சின்னத்தங்கம் மற்றும் கதிராசிபிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், பிரதீப்குமாரின் (சுவிஸ்) அன்புத் தாயாரும், அனுஷாவின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான லங்கநாயகம், சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும், மனோகரி, மாலினி ஆகியோரின் பாசமிகு மாமியும், பாலாம்பிகை அம்மா, மகேஸ்வரி, ஜெயச்சந்திரகுமார், காலஞ் சென்றவர்களான பாக்கியம், கந்தையாபிள்ளை ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற மதியாபரணம் மற்றும் செல்வராணி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், துரைரட்ணம், தவக்குமார், சைலஜா ஆகி யோரின் பெரியம் மாவும், ரஜீதனின் அன்புத் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் காலை 8மணியிலிருந்து அஞ்சலிக்காக புஞ்சி பொரளையிலுள்ள லங்கா மலர்ச்சாலையில் இன்று (10.01.2011) திங்கட்கிழமை வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்பு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கனகசபை ஜெயச்சந்திரகுமார்
(மைத்துனர்) T.P: 233 8769

கொழும்பு.

# அரசை எதிர்க்கக்.....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பிலுள்ள ஆயிரக்கணக்கான தமிழர்களை விடுவிப்பதற்கு உருப்படியான எந்த நடவடிக்கையினையும் எடுக்காத தமிழ்க் கட்சிகள் தற்போது அரசுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் இவர் தனது கடுமையான ஆதங்கத்தினை வெளிப்படுத்துகிறார்.

2006ஆம் ஆண்டு வேலை தேடி வன்னிக்குச் சென்றபோது போர் மீளவும் மூண்டுவிட, பாதைகள் மூடப்பட்ட நிலையில் தான் அங்கு அகப்பட்டுக் கொண்டார் என்று கூறுகிறார் அண்மையில் விடுவிக்கப்பட்டிருக்கும் இன்னொருவர். வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டாய ஆள்திரட்டலுக்கு இவர் உட்பட்டிருக்கிறார். ''அடிப்படைப் பயிற்சிகளின் பின்னர் நான் களமுனைக்கு அனுப்பப்பட்டேன். பலமாகக் காயமடைந்த நிலையில் எனது காலின் ஒரு பகுதி துண்டிக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் நான் மூன்று மாதங்களாகச் சிகிச்சை பெற்றேன்.

அந்த வேளையில் மருத்துவமனையினை இலக்குவைத்து அரச படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர்'' என அவர் தனது கதையினை விவரிக்கிறார்.

இறுதி யுத்தத்தின் போது இந்த நபர் படையினரிடம் சரணடைந்திருக்கிறார். ''ஜூன் 14ஆம் நாளன்று நான் இராமநாதன் முகாமிலிருந்து ஏனையோருடன் அழைத்துச் செல்லப்பட்டேன். நான் புலிகளால் கட்டாய ஆள்திரட்டலுக்கு உட்படுத்தப்பட்ட கதையினை படையினருக்குக் கூறுமிடத்து அவர்கள் என்னை உடனடியாகவே விடுவித்து விடுவார்கள் என நம்பினேன். ஆனால் வெலிக்கந்தைப் பகுதியிலுள்ள தடுப்பு முகாமிற்கு அனுப்பப்பட்ட நான் அண்மையில் விடுவிக்கப்படும் வரைக்கும் அங்கு ஒன்றரை ஆண்டுகளாகத் தடுத்துவைக்கப்பட்டேன்'' என்கிறார் அவர்.

''தமிழ் மக்களின் விடுதலைக்காகவே விடுதலைப் புலிகள் போராடுகிறார்கள் என்ற நிலையில் நாங்கள் அவர்களுக்கு ஆதரவளித்தோம். புலிகளமைப்பு ஒரு முதலாளித்துவ அமைப்பு என்பது தொடர்பாக அப்போது எங்களுக்கு எதுவும் தெரியவில்லை. அமெரிக்கா தமிழர்களுக்கு உதவும் என்ற பெரு நம்பிக்கை இறுதிக் காலத்தில் புலிகளிடத்தே காணப்பட்டது. ஆனால் இந்த நம்பிக்கை பொய்யாகி விட்டது. சிங்களவர்களுடன் இணைந்து வாழ வேண்டும் என்ற உங்களது நோக்கம் எனக்கு புதிதாகவே தெரிகிறது. முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக தமிழ் மற்றும் சிங்களவர்கள் ஒன்றிணைவது நல்லதொரு விடயம்தான். இரண்டு சமூகங்களின் மத்தியிலும் காணப்பட்ட இதுபோன்ற ஒற்றுமை போரினால் பெரிதும் சிதைந்து விட்டது. இதனை மீளவும் கட்டியெழுப்புவது அவசியமானது" என அவர் தனது கருத்தினை எங்களிடம் கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களை இலங்கை அரசு தொடர்ந்தும் தடுத்து வைத்திருக்கிறது. விசாரணைகள் எதுவுமின்றி ஒருவரைக் காலவரையறை இன்றித் தடுத்துவைக்க உதவும் அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றின் கீழ் இவர்களில் பலர் கைதுசெய்யப் பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வருவதற்கு முன்னர் 30 பெண்கள் உள்ளிட்ட 700 பேர் வரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள். போர் முடிவுக்கு வந்து ஒன்றரை ஆண்டுகள் கடந்து விட்ட பின்னரும் இவர்கள் விடுவிக்கப்படவில்லை. கட்டாயத்தின் பேரில் வேறு வழியின்றித் தான் வழங்கிய தொருவாக்குமூலத்தின் விளைவாக கடந்த 13 ஆண்டுகளாகத் தான் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாக அண்மையில் தமிழ் கைதி ஒருவர் பி.பி.ஸி. செய்திச் சேவையிடம் குறிப்பிட்டிருந்தார். இலங்கையின் [illegible] தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் திட்டமிட்ட ரீதியில் தொடர்ந்தும் மறுக்கப் படுவதானது நாட்டின் ஏனைய மக்களுக்கு தெளிவான எச்சரிக் கையினை வழங்குவதாக அமைகிறது. இலங்கையிலுள்ள இளைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் எந்த மதம் மற்றும் மொழியினைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும் கொழும்பு அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுமிடத்து மஹிந்த அரசு அவர்களை அடக்கும் வகையில் இதுபோன்ற கடுமையான உத்திகளைக் கையாளுவதற்கு ஒருபோதும் தயங்காது என்பதையே இது காட்டுகிறது. *(நன்றி: புதினப்பலகை)*

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம்
15 . 07 . 1973



மறைவு
11 . 12 . 2010

அமரர் குமாரசாமி பரமானந்தன் (ஆனந்தி)

நாள்கள் பல சென்றாலும் ஆனந்தி
உமது நினைவு என்றென்றும் எம்மை விட்டகலாது.

நினைவாகளுடன்
துரைச்சாமி புனிதவதி (மாமா, மாமி)
சிவறஞ்சினி (றூபா - மனைவி)
சிவசித்தன் (மைத்துனர் - சக்தி சவுண் சேவிஸ், கந்தரோடை)
திருமதி சி.விஜயலட்சுமி, சி.ராகவி (மகள்)
க.சிவயோகராணி .ஜே.பி (மாமி)
உறவினர்.

'தாயார் புனித நாகேஸ்வரி',
நாகபூஷணி அம்மன் ஆலயம்,
கந்தரோடை,
சுன்னாகம்.

(108865)



# கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 13.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.

| | |
|---|---|
| சுட்டி பாம் சென்ரர் | - வட்டுக்கோட்டை-0778996085 |
| சன்னதி பாம் சென்ரர் | - தொண்டைமனாறு -0776904590 |
| நெல்லியடி பல்பொருள் விற்பனை | - நெல்லியடி-0774656377 |
| முருகந்தன் | -பருத்தித்துறை - 0771392593 |

நல்லூர் பாம் சென்ரர்,
19,முருகேசர் லேன், நல்லூர். தொ.பே: 021222 6944


# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தம்பிராசா தம்பிநாயகம்**
(மாத்தையா)
(769 மினிபஸ் சாரதி)

தோற்றம்
21★08★1954

மறைவு
25★12★2006

நான்காண்டுகள் சென்றாலென்ன
நாற்பதாயிரம் ஆண்டுகள்சென்றாலும்
உங்கள் நினைவுகள் எமது
நெஞ்சைவிட்டகலாது

(108868)

A.G.Office Lane,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

மனைவி,
பிள்ளைகள்.


# உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 583
திகதி 2011/01/08

சுப்பர் இலக்கம்: 22
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 06 14 31 56

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின | ரூ. 35,840,982.40 வீதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீதம் | 02 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் வேறு [illegible] இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீதம் | 14 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீதம் | 369 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் வேறு [illegible] இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீதம் | 720 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீதம் | 17,720 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் வேறு [illegible] இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீதம் | 10,269 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 257,293 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 41,252 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 12,311,660.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ... கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 36,020,104.80

தேசிய லொத்தர் சபை www.nlb.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. - தே.மு.தி.க. கூட்டணி உருவாகாமலிருக்க விஷமிகள் சதி

## அம்பலப்படுத்தினார் விஜயகாந்த்

சென்னை, ஜன. 10

எதிர்க்கட்சிகள் மத்தியில் கூட்டணி உருவாகாமல் தடுக்க ஆளுங்கட்சி சதி செய்து இருக்கிறது - என்று தே.மு.தி.க. தலைவர் விஜய காந்த் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.கவின் சேலம் மாநாடு குறித்த விளம்பரங்கள் பத்திரிகை களில் வெளியாகி வருகின்றன.

இதில், கட்சி நிர்வாகிகள் பெயரில், அவர்களுக்கே தெரியாமல் சில விளம் பரங்கள் வெளிவந்துள்ளன என விஜய காந்த் நேற்றுமுன்தினம் திடீர் குற்றச் சாட்டு ஒன்றைக் கூறியுள்ளார்.

இதுகுறித்து விஜயகாந்த் வெளி யிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டி ருப்பவை வருமாறு -

சேலத்தில் தே.மு.தி.க. சார்பில் நடக்கும் மாநாட்டை ஒட்டி கட்சியினர், தொண்டர்கள், ஆதரவாளர்கள் பத்திரி கைகளில் விளம்பரம் அளித்து வரு கின்றனர். சற்றும் எதிர்பாராத வகையில் 7 ஆம் திகதி மாலை நாளிதழ் ஒன்றில் முக்கிய எதிர்க்கட்சியான அ.தி.மு.கவின் தலைமையை விமர்சித்து தே.மு. தி.க. நிர்வாகிகள் பெயரில் ஒரு விளம் பரம் வந்துள்ளது. தே.மு.தி.கவிற்கும், அந்த விளம்பரத்திற்கும் எந்தச் சம்பந்த மும் இல்லை.

இன்றைய கொடுங்கோல் ஆட்சிக்கு எதிரானவர்கள் ஒன்று சேர்ந்து விடக் கூடாது என்ற தீய நோக்கத்தோடு, ஏற் கனவே ஊழலில் திளைக்கும் ஆளும் வர்க்கத்தினர் வேண்டுமென்றே திட்ட மிட்டு நச்சு நினைப்போடு இந்த விளம் பரத்தை வெளியிட்டுள்ளனர். இந்த நய வஞ்சக நரிகளுக்கு சரியான பாடத்தை வரும் தேர்தலில் மக்கள் புகட்ட உள்ளனர்.

இந்த விஷமிகள் வேண்டும் என்றே வெளியிட்ட விளம்பரத்தை, அந்த பத் திரிகை ஏன் வெளியிட்டது என எங்க ளுக்குப் புரியவில்லை. இந்த அற்ப காரியத்தை செய்த சமூக விரோதிக ளைக் கண்டுபிடித்து, அவர்கள் மீதும், இதை வெளியிட்ட பத்திரிகை மீதும் அவதூறு வழக்குத் தொடரப்படும்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அ.தி.மு.கவும், தே.மு.தி.கவும் வர வுள்ள சட்டசபைத் தேர்தலில் கூட்டணி அமைக்க திட்டமிட்டுள்ளன எனச் செய் திகள் வரும் நிலையில், இந்த அணி அமை யாமல் இருக்க ஆளுங்கட்சி சதிசெய்துள் ளது என விஜயகாந்த் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## வைகோ - சீமான் சந்திப்பு



'நாம் தமிழர்' இயக்கத் தலைவர் சீமான், ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோவை இன்று சந் தித்துப் பேசவுள்ளார். இவர் களது சந்திப்பு இன்று முற்பகல் 10.30 மணிய ளவில் ம.தி.மு.க. அலுவ லகமான தாயகத்தில் நடைபெற உள்ளது.

சட்டமன்றத் தேர்தல் விரைவில் வரவி ருக்கும் நேரத்தில் இவர்களது சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

# இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுத்து வருகிறது இந்தியா

## தமிழகக் காங். தலைவர் தங்கபாலு

சென்னை, ஜன. 10

இந்திய அரசு இலங்கைப் பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது - என்று தமிழக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தெரிவித்துள்ளார்.

சட்டமன்றக் காங்கிரஸ் கட்சி அலுவ லகத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட் டம் தமிழகக் காங்கிரஸ் தலைவர் கே.வி. தங்கபாலு தலைமையில் நடந்தது. இதில் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் கலந்து கொண்டனர். கூட்டம் முடிந்ததும் செய் தியாளர்களிடம் பேசிய தங்கபாலு மேலும் கூறியவை வருமாறு -

இந்திய அரசு இலங்கைப் பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வுக்காக வும், நல்வாழ்வுக்காகவும் பல திட்டங் களை ரூபா 8 ஆயிரம் கோடி அளவுக்கு இந்திய அரசு செயற்படுத்தி வருகிறது. இலங்கைத் தமிழர்களுக்குச் சமமான வாழ்வாதாரம் கிடைக்கவும் இந்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

# இலங்கை மீனவர்கள் 10 பேர் இந்தியக் கடற்படையால் கைது

சென்னை, ஜன. 10

இந்திய கடல் எல்லைக்குள் மீன் பிடித்துக்கொண்டிருந்த இலங்கை மீன வர்கள் 10 பேர் இந்தியக் கடலோரக் காவல் படையால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இந்தியக் கடலோரக் காவல்படை ஹெலிகொப்டர் மூலம் கடந்த 3 ஆம் திகதி ரோந்துப் பணியில் ஈடுபட் டிருந்தபோது, இந்தியக் கடல் எல்லைக் குள் 2 இலங்கைப் படகுகள் மீன் பிடித்துக் கொண் டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்தத் தகவல் கடலோரக் காவல் படை அதிகாரிக ளுக்குத் தெரிவிக் கப்பட்டது. அதைத் தொடர்ந்து, சாராங் என்ற கடலோர காவல் படைக்கப் பலில் அதிகாரி கள் சென்று 2 இலங்கைப் படகு களையும் சுற்றி வளைத்து அவற் றில் இருந்த இலங்கை மீனவர் கள் 10 பேரைக் கைது செய்தனர். மேலும், படகில் இருந்த 1,000 கிலோ மீன்களும் பறிமுதல் செய் யப்பட்டது. அதைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்ட மீன வர்களையும் பறி முதல் செய்யப் பட்ட 2 படகுக ளையும் சென் னைக்குக் கொண் டுவர முயற்சி மேற் கொள்ளப்பட்டது. ஆனால், கடல் சீற்றம் அதிகமாக இருந்ததா லும், மோசமான வானிலை காரண மாகவும் 3 நாள் [illegible] மேட்டு மீன் பிடித் துறைமுகத்துக்கு மீனவர்கள் கொண்டு வரப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் காசிமேடு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டனர்.

இலங்கை மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 2 படகுக ளிலும் அதிநவீன தகவல் தொடர்புக் கருவிகள் இருந்தமை குறிப்பிடத்தக்கது.


## விநியோகஸ்தர்கள் தேவை

புதிய BRAND தேயிலையை யாழ், வவுனியா போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்வதற்கு மொத்த வியாபாரி அல்லது விநியோகஸ்தர்கள் தேவை. தொடர்புகளுக்கு:- 0773916626

## கோழிக் குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRA No-1 புறொயிலர் குஞ்சுகள் 12.01.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்

ராஜின், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

தொ.பே: 0776090926, 0212222867

## வாடகைக்கு

கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, ஆகிய வற்றில் வீடும், கடையும், வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0212223479, 0215670315 (108874)

## முக்கிய அறிவித்தல்

[illegible] 05.02.2011 [illegible]

நிர்வாகி,

18A, [illegible]

## தை 2011 பிரிவுகளுக்கான பதிவுகள் ஆரம்பம்



edexcel INTERNATIONAL BTEC

HND Business Management

முகாமைத்துவத் துறையில் உங்கள் தகுதியையும், தகைமையையும் உயர்த்திக் கொள்வதோடு குறுகிய காலத்தில் குறைந்த செலவுடன் பிரித்தானிய முன்னணிப் பல்கலைக்கழகம் ஒன்றின் முகாமைத்துவப் பட்டதாரியாகும் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க வார இறுதிநாள் பிரிவுகளும் ஆரம்பம்.

மேலதிக விபரங்களுக்கு 021 4900 900

"கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச்சாம்ராஜ்யம்"

IIS CITY CAMPUS

200, Sivan Pannai Road, Jaffna.

Tel : 021 222 8060

E-mail : info@iis.edu.lk Web : www.iis.edu.lk


## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி பஸ்தியாம்பிள்ளை ஞானம்மா

மலர்வு 16★07★1920

உதிர்வு 10★01★2010

உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிட்டு, அவரையே நம்பி அவரே உன் சார்பில் செயலாற்றுவார்.

முதலாம் வட்டாரம், சாட்டி, வேலணை கிழக்கு, வேலணை.

மக்கள், மருமக்கள், பேரமகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### நடராசா சிவபாக்கியம்



பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது செ. அன்ரனிஸ் வீதி, பண்டத் தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட நட ராசா சிவபாக்கியம் 06.01.2011 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரா சையா-மனோன்மணி தம்பதியரின் அன்பு மக ளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவி யும் பாக்கியம், நாகேஸ்வரி, நாகராசா (ஸ்ரீலங்கா ரெலிகொம் பாதுகாப்பு உத்தியோகத்தர்), தேவராசா ஆகியோரின் சகோத ரியும் சிறீதரன் (கனடா), இராசலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயா ரும் முருகையா (ஈசன் அந்தியகால சேவை, யாழ்ப்பாணம்), ராதிகா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஞ்சீவன், சிவகவி, ஆராதனன், தவிதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2011) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் பி.ப.ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே: 0217901335, 0779184431 தகவல்: ந.சிறீதரன் (மகன்-கனடா), செ.அன்ரனிஸ் வீதி, பண்டத்தரிப்பு. திருமதி முருகையா இராசலட்சுமி (மகள்).

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# அடிமேல் அடி வாங்கும் சனத்

ஐ.பி.எல் தொடரின் வீரர்களின் ஏலம் 2ஆவது நாளாக நேற்றும் இட்ம்பெற்றது. இலங்கை வீரர் சனத் ஜெயசூரியவை வாங்க எந்த அணியினரும் முன்வரவில்லை.

இலங்கை அணியின் உலகக்கிண்ண அணியிலும் இடம் கிடைக்காத நிலையில் ஐ.பி.எல். தொடரிலும் புறக் கணிக்கப்பட்டுள்ளார். மேலும் இலங்கை அணியின் சுழற் பந்து வீச்சாளரான அஜந்த மெண்டிஸையும் எந்தவொரு அணியும் வாங்க முன்வரவில்லை.அதேசமயம், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடிய முரளியை கொச்சிஅணி 11 லட்சம் டொலருக்கு வாங்கியுள்ளது.

நான்காவது ஐ.பி.எல் தொடருக்கான வீரர்கள் ஏலம் நேற்று முன்தினம் தொடங்கியது. அதிகபட்ச விலையுடன் கம்பீரை விலைக்கு வாங்கியது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்.

இந்திய அணி வீரர் உத்தப்பா 21 லட்சம் டொலருக்கு (புனே),இந்திய அணி வீரர் ரோகித் சர்மா 20 லட்சம் டொலருக்கும் (மும்பை இந்தியன்ஸ்),இந்திய அணி வீரர் இவ்ரான் பதான் 19 லட்சத்துக்கும் (டெல்லி டேவில்லியர்ஸ்),தென்னாபிரிக்க வீரர் ஜக் கலிஸ் 11 லட்சம் டொலருக்கு (கொல்கத்தா நைர் ரைடர்ஸ்),இலங்கை அணி வீரர் மத்தியூஸ் 9.5 லட்சம் டொலருக்கு( புனே),தென்னாபிரிக்க அணி வீரர் போத்தா 9.5 லட்சத்துக்கு (ராஜஸ்தான் ரோயல்ஸ்),இந்தியஅணி வீரர் அஸ்வின் 8.5 லட்சம் டொலருக்கு (சென்னை சுப்ப கிங்ஸ்),அவுஸ்திரேலிய அணி வீரர் சைமண்ஸ் 8.5 லட்சம் டொலருக்கு( மும்பை இந்தியன்ஸ்),இந்திய அணி வீரர் பத்திரிநாத் 8 லட்சம் டொலருக்கு( சென்னை சுப்ப கிங்ஸ்),இலங்கை அணி வீரர் சங்கக்காரா 7 லட்சம் டொலருக்கு டெக்கான் சார்ஜஸ்),இந்திய அணி வீரர் டிராவிட் 5 லட்சம் டொலருக்கு( ராஜஸ்தான் ரோயல்ஸ்), மேற்கிந்திய அணி வீரர் பிராவோ 2 லட்சம் டொலருக்கு (சென்னை சுப்ப கிங்ஸ்),இலங்கை அணி வீரர் நுவான் குலசேகர 1 லட்சம் டொலருக்கு (சென்னை சுப்ப கிங்ஸ்), இலங்கை அணி வீரர் ரண்டீவ் 80 ஆயிரம் டொலருக்கு (சென்னை சுப்ப கிங்ஸ்),இலங்கை அணி வீரர் திஸ்ஸர பெரேரா 80 ஆயிரம் டொலருக்கு (சென்னை சுப்ப கிங்ஸ்) - இவ்வாறு நேற்றைய ஏல முடிவுகள் அமைந்திருந்தன. (15)

# சிறந்த வீரர்கள் மட்டுமே அணியில்

**- அரவிந்த டீ சில்வா**



2011 ஆம் ஆண்டுக்கான கிரிக்கெட் உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான இலங்கை அணியின் இறுதி 15 பேர் தெரிவில் சனத் ஜயசூரிய மற்றும் சமிந்த வாஸ் ஆகிய இருவருக்கும் இடம் மறுக்கப்பட்டமை அண்மையில் எடுக்கப்பட்ட முடிவு என இலங்கை அணித் தெரிவுக் குழுத் தலைவர் அரவிந்த டீ சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், அவர்கள் இருவரும் தமது திறமையை வெளிப்படுத்தியிருந்த போதும் அவர்களை விட ஏனையவர்கள் சிறப்பாக செய்யப்பட்டதினால் ஏனைய 15 பேரினை தெரிவுசெய்திருக்கிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார். இந்த தடவை அணியினை பக்க சார்பின்றி சிறந்த 15 வீரர்களை இலங்கை அணிக்குத் தெரிவு செய்துள்ளதாகவும், நிச்சயம் உலகக் கிண்ண கோப்பையை இலங்கை அணி சுவீகரிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (15)






# சம்பள மீதி வழங்கப்படவில்லை - சங்ககார முறைப்பாடு


ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணியில் இலங்கை வீரர் சங்ககார, அவுஸ்திரேலிய வீரர் ஷான் மார்ஸ் ஆகியோர் இடம் பெற்று இருந்தனர்.

அவர்களுக்கும் மற்ற வீரர்களுக்கும் ஒப்பந்தப்படி உரிய சம்பளத்தை முழுமையாக பஞ்சாப் அணி உரிமையாளர்கள் வழங்கவில்லை. அவர்கள் பல முறை பணத்தை கேட்டும் பஞ்சாப் அணி வழங்காமல் இழுத்தடித்து கொண்டிருந்தது.

இதனையடுத்து சங்ககார ஷான்மார்ஸ் இருவரும் இந்திய கிரிக்கெட் சங்கத்துக்கு புகார் கடிதம் அனுப்ப உள்ளனர். இதில் கிரிக்கெட் சங்கம் தலையிட்டு சம்பளத்தை பெற்றுத் தர வேண்டும் என்று கேட்டுள்ளனர். இது தொடர்பாக கிரிக்கெட் சங்க அதிகாரி ஒருவர் கூறும் போது இந்தப் பிரச்சினை எங்கள் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு உள்ளது:

இது தொடர்பாக ஆட்சி மன்றக் குழுவில் விவாதித்து இருக்கிறோம் என்றார். ஆனால் இதுபற்றி பஞ்சாப் அணி செய்தி தொடர்பாளர் ஒருவரிடம் கேட்டதற்கு வீரர்களுக்கு அனைத்து சம்பள மீதியையும் வழங்கி விட்டோம் என்றார். இதே போல ராஜஸ்தான் அணியில் உள்ள வீரர்கள் பலருக்கும் முழுமையான சம்பளத்தை இன்னும் வழங்கவில்லை என்றும் புகார்கள் வந்துள்ளன. (15)

# சென்னை ரெனிஸ் இறுதிப் போட்டியில் பயஸ் - பூபதி ஜோடி



சென்னை ஓபன் ரெ்னிஸ் தொடரின், இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி முன்னேறியது. சென்னையில் ஓபன் ரெனிஸ் தொடர் இடம்பெற்று வருகின்றது. இரட்டையர் பிரிவு அரையிறுதியில் பயஸ்-பூபதி, குரோஷியாவின் மரின் சிலிச், இவான் டோடிக் ஜோடியை எதிர்கொண்டனர். முதல் செட்டை பயஸ்-பூபதி 6-1 என எளிதாக வென்றனர். இரண்டாவது செட்டை- சிலிச்-இவான் ஜோடி 7-6 என வென்றது. இதையடுத்து வெற்றியாளரை நிர்ணயிக்கும் சூப்பர் செட்டுக்கு போட்டி சென்றது. இதில் அபாரமாக ஆடிய பயஸ், பூபதி 10-5 என வென்றனர்.

இறுதியில் பயஸ் பூபதி ஜோடி 6-1, 6-7, 10-5 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, இறுதிப் போடடிக்கு முன்னேறினர்.

போட்டி முடிவடைந்ததும், தங்களுக்கு ஊக்கம் தந்த சென்னை ரசிகர்களுக்கு பயஸ், பூபதி ஜோடி நன்றி தெரிவித்தனர். பின்னர் இருவரும் மைதானத்தில் சிறிது நேரம் கிரிக்கெட் விளையாடினர். இவர்களது கிரிக்கெட் துடுப்பில் பட்ட ரெனிஸ் பந்துகள் சிக்சர்களாக பறந்தன. இந்தப் பந்துகளை பார்வையாளர்கள் ஆர்வமாய் பெற்றனர்.

முன்னதாக நடந்த ஆண்கள் ஒற்றையர் அரையிறுதியில் சுவிற்சர்லாந்தின் வாவ்ரின்கா, செக்குடியரசின் தாமஸ் பெர்டிக்கை சந்தித்தார். இதன் முதல் செட்டில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய வாவ்ரின்கா, 6-4 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

தொடர்ந்து இரண்டாவது செட்டில் பெர்டிக் எழுச்சி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதிலும் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்த, வாவ்ரின்கா 6-1 என எளிதாக வென்றார். இறுதியில் வாவ்ரின்கா 6-4, 6-1 என்ற நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த மற்றொரு போட்டியில் பெல்ஜியத்தின் சேவியர் மாலிஸ், சேர்பியாவின் டிப்சர்விச்சை எதிர்கொண்டார். இதன் முதல் செட்டை டிப்சர்விச் 6-3 என வென்றார்.

பின்னர் எழுச்சி கண்ட மாலிஸ், அடுத்த செட்டை 6-3 என்று கைப்பற்றி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது மற்றும் கடைசி செட்டிலும் அசத்தலான ஆட்டத்தை தொடர்ந்த மாலிஸ் 6-2 என்று எளிதாக தனதாக்கினார். முடிவில் 3-6, 6-3, 6-2 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்ற மாலிஸ், இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இதையடுத்து இறுதிப் போட்டியில் சுவிற்சர்லாந்தின் வாவ்ரின்கா, பெல்ஜியத்தின் சேவியர் மாலிசை சந்திக்கிறார். (15)

# பருத்தித்துறை லீக் வெற்றி

இலங்கை உதைபந் தாட்ட சம்மேளனத்தினால் நாடளாவியரீதியில் நடத்தப்பட்ட 42 ஆவது லீக் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வெற்றிபெற்றுள்ளது.

கொழும்பு சிற்றி லீக் விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இல்ங்கை பாதுகாப்பு சிவில் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற இந்த இறுதிப் போட்டியில் பருத்தித்துறை லீக் அணி மிகச் சிறப்பாக ஆடி 3 - 1 என்ற கோல் கணக்கில் பாதுகாப்பு சிவில் அணியை வெற்றி கொண்டு கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

மிக நீண்ட காலத்தின் பின்னர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அணியொன்று தேசிய உதைபந்தாட்டப் போட்டியில் கிண்ணத்தைக் கைப்பற்றி இருப்பது குறிப்பிடத்தக்கது. (15-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்துக்கு மரண அடி சொந்த மண்ணில் படுதோல்வி

ஹமில்டன், ஜன. 10

ஹமில்டனில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூஸிலாந்துக்குக் கொடுத்ததை அதிர்ச்சி வைத்தியம் என்று மட்டும்தான் சொல்ல முடியும். வேறு வார்த்தைகள் கிடையா. பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் நடத்திய ஊடறுப்புத் தாக்குதலில் நியூஸிலாந்து அணியின் துடுப்பாட்ட வரிசை மொத்தமும் சிதைந்து சின்னாபின்னமாகிப் போனது.

இறுதியில் ஹமில்டன்டெஸ்ட் ஆட்டத்தை மூன்றே நாள்களில் முடித்த பாகிஸ்தான் அணி, 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றியை நியூஸிலாந்திடம் இருந்து பிடுங்கி எடுத்தது.

உமர் ஹுல், வஹாப் றியாஸ், அப்துல் ரஹ்மான் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைச் சரிக்க, நியூஸிலாந்து 110 ஓட்டங்களுக்குள் வாலைச் சுருட்டியது. நிர்ணயிக்கப்பட்ட வெறும் 19 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்கு பாகிஸ்தானுக்கு ஈ ஓட்டுவது போன்ற காரியம்.

ஆடுகளத்துக்கு வந்த தௌபீக் உமரும் மொகமட் ஹபீஸும் பந்துகளை உருட்டி எடுக்க, 22 பந்துகளிலேயே வெற்றி சுளையாய் பாகிஸ்தான் கைகளில் உருண்டு விழுந்தது.


முன்னதாகப் பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸை, ஆசாத் ஷாபிக் பெற்ற 83 உடன் 367 ஓட்டங்களுக்கு முடித்தது.

ஊழல், முறைகேடுகள், ஆட்ட நிர்ணயச் சதி என்பவற்றால் அல்லாடி உருக்குலைந்து போயிருந்த பாகிஸ்தான் அணிக்கு இந்த வெற்றி 'ஓடியல் கூழ்' குடித்த உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது. கட்டார் நாட்டின் தலைநகர் டோகாவில் தென்னாபிரிக்காவுடன் நடந்த போட்டியில் கிளம்பிய ஆட்டநிர்ணயச் சதி என்கிற பெரும் பூதம் பாகிஸ்தான் அணியை அத்திபாரத்துடன் ஆட்டம்காண வைத்தது. இதனால் அணியின் முன்னணி வீரர் கள் பலரை இழந்தது.

புதிய தலைவர், அனுபவமில்லாத வீரர்கள் என்று நியூஸிலாந்து மண்ணில் கால் வைத்த பாகிஸ்தானுக்கு இந்த அதிரடி அசத்தல் வெற்றி புது உற்சாகத்தைத் தந்திருக்கிறது. மிஸ்பா-உல்-ஹக்கின் அணியினருக்குக் கிடைத்த இந்த வெற்றி குறைத்து மதிப்பிடத்தக்கதல்ல என்றாலும், நியூஸிலாந்து அணியோ இன்று நொந்து நூலாகிக் கிடக்கிறது.

இந்தியாவில் அடிமேல் அடி வாங்கிய நியூஸிலாந்து அணி இன்னும் மீள முடியாமல் தவிக்கிறது. அதனால் சொந்த மண்ணிலேயே முதல் டெஸ்டை பாகிஸ்தானிடம் இழந்துள்ளது.

முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து வீரர்கள் சற்றே போராடினாலும் இரண்டாவதில் சத்தற்று பாகிஸ்தானிடம் சரணாகதியானார்கள். முதலில் 275 ஓட்டங்களைப் பெற்ற அந்த அணியால் பின்னர் வெறும் 110 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 367 ஓட்டங்களைப் பெற்றதுடன் தேவையான 21 ஓட்டங்களைப் பெற்று இலகு வெற்றியை ருசித்தது. அப்துல் ரஹ்மான் ஆட்டநாயகன் ஆனார். (உ)



## ஆஸ்திரேலிய அணிக்கு முழுநேரப் பயிற்சியாளராக ஸ்டீவ் வோக்கு விருப்பமில்லை

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு முழு நேரப் பயிற்சியாளராக விருப்பமில்லை என்று அந்த அணியின் முன்னாள் கேப்டன் ஸ்டீவ் வோ தெரிவித்தார்.

''ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட்ட தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாதுதான். ஆனால் தோல்வியிலிருந்து ஆஸ்திரேலிய அணி மீளும். அணிக்குப் பயிற்சியாளராகும் திட்டம் எதுவும் என்னிடம் இப்போது இல்லை.

ஏற்கெனவே இப்போதுள்ள பயிற்சியாளரை மாற்றப் போவதாக செய்திகள் வந்துள்ளன. எனவே அடுத்த பயிற்சியாளர் யார் என்ற பட்டியலில் என்னுடைய பெயரும் கண்டிப்பாக இடம்பெற்றிருக்கும் என்று நம்புகிறேன்.

ஆனால் முழு நேர பயிற்சியாளராக மாறும் திட்டம் என்னிடம் இல்லை. இப்போது நான் சமூக சேவை நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்தி வருகிறேன். மேலும் என்னுடைய தொழிலையும் கவனிக்க வேண்டியுள்ளது'' - என்றார்.

இருப்பினும் ஆஸ்திரேலிய அணி மீண்டு வரத் தான் உதவி செய்வார் என்றும் அதற்காக சில தொழில்நுட்பப் பயிற்சிகளை அளிக்கத் தயாராக இருக்கிறார் என்றும் ஸ்டீவ் வோ தெரிவித்தார்.

அணியில் இடம்பெற்றுள்ள சில வீரர்களைத் தொடர்பு கொண்டு தான் ஆலோசனைகளை வழங்கி வருகிறார் என்றும் அவர் கூறினார். (உ)

# மவுசு இழந்தனர் லாரா, கங்குலி

ஐ.பி.எல். கிரிக்கெட் ஏலத்தில் மேற்கிந்திய அணியின் முன்னாள் தலைவரும் தலைசிறந்த துடுப்பாட்ட வீரருமான பிரையன் லாராவும் இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலியும் முதல் நாள் ஏலத்தில் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்டுள்ளனர்.

பிரையன் லாரா கிரிக்கெட் உலகில் டான் பிரட்மனுக்கு நிகரான புகழ் உடையவர். உலக கிரிக்கெட்டில் பல சாதனைகளைப் புரிந்த வீரர். ரன் மெஷின் என்று வர்ணிக்கப்பட்டவர். ஆனால், ஐபிஎல் ஏலத்தின் முதல் நாளில் இவரை எந்த அணியும் ஏலம் கேட்கவில்லை.

சாதாரண வீரர்களைக் கூட கோடிக்கணக்கில் பணம் கொடுத்து ஏலம் எடுத்துள்ள ஐபிஎல் அணிகள், சாதனை வீரரான லாராவை கண்டுகொள்ளவில்லை. மேற்கிந்தியத் தீவுகளின் இன்னொரு சாதனை வீரரான கிறிஸ் கெயிலையும் யாரும் ஏலம் கேட்கவில்லை. தென்னாப்பிரிக்காவின் ஹர்ஷ்லே கிப்ஸையும் யாரும் ஏலம் கேட்கவில்லை. கடந்த ஐபிஎல் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் கேப்டனாக இருந்த சவுரவ் கங்குலியையும் யாரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை.

ஆரம்பத்தில் இவரது விலை 2 லட்சம் டொலராக இருந்தது. ஆனால் கங்குலி திடீரெனத் தனது விலையை 4 லட்சம் டொலராக்கி விட்டதால், அவரை எடுக்க திட்டமிட்டிருந்த புனே அணி திட்டத் தைக் கைவிட் டது. இவர் முன்பு விளையாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் இவர் வேண்டாம் என வெளிப்படையாகவே கூறி விட்டது.



# வோன் விக் அதிரடி வீண் இந்தியா இலகு வெற்றி

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 20/20 கிரிக்கெட் ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது. தென்னாபிரிக்க வீரர் மோர்னே வான் விக் தனியொருவராக நின்று அதிரடியாக 39 பந்துகளில் 67 ஓட்டங்களை விளாசிய போதும் அணியால் வெற்றியை எட்டிப் பிடிக்க முடியவில்லை. 11ஆவது ஓவரில் அவர் ஆட்டமிழக்க தென்னாபிரிக்காவின் பின்வரிசை மளமளவெனச் சரிந்தது. இதனால் 168 என்ற இந்தியாவின் பலமான இலக்கை எதிர்க்க முடியாமல் இறுதியில் மண்டியிட்டது.

ரோகித் சர்மா (53), ரெய்னா (41) ஆகியோரின் அசத்தலான ஆட்டத்தால் இந்திய அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 168 ஓட்டங்களைக் குவித்தது. சராசரியாக ஓவருக்கு 8.4 ஓட்டங்கள் என்ற இலக்குடன் துடுப்பாட்டத்தைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர் களில் 147 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. போத்தா மட்டும் 25 ஓட்டங்களைப் பெற்றார்.

தென்னாபிரிக்க வேகப்பந்துவீச்சாளரான மக்கயா நிற்றினி நேற்று சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வுபெற்றார். [illegible] மைதானத்தில் கூடியிருந்த பெரும் [illegible] அவருக்கு அன்புடன் பிரியாவிடை அளித்தது.



விடைபெற்றார் மக்காயா நிற்றினி

ரோகித் சர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி முகாமையாளர் இடமாற்றம்

தென்மராட்சி, ஜன. 10

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமையாளராக் கடமையாற்றிய சி.தனீஸ் வரன் திருநெல்வேலிக் கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு திருநெல்வேலிக் கிளையின் முகாமையாளராகக் கடமையாற்றிய சீ.என்.நியூட்டன் ஜெனநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-207)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகப் பணியாளர்கள்
இரா. தர்மரத்தினம், இரா. முத்துலிங்கம்
அவர்களின் அன்புத் தாய்
**இராமநாதர் பத்தினிப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
நெடுந்தீவு.

*உதவி அரசாங்க அதிபரும்,*
*உத்தியோகத்தர்களும்,*
*ஊழியர் நலன்புரிசங்கம்.*

## கோப்பாய் அறநெறிப்பாடசாலை 2011

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறிமன்றத்தால் நடாத்தப்படவுள்ள அறநெறிப் பாடசாலையில் தரம் 5 க்கு உட்பட்டோர் அனுமதிக் கப்படவுள்ளனர். பாடசாலையில் சேர்ந்து சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம் வகுப்புகளில் இலவசக் கல்வி பெற விரும்பும் கோப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட மாணவர்கள் பிரவேசக் கட்டணம் ரூபா 200/- செலுத்தி 'வலி.கிழக்கு சைவசமய அருள்நெறிமன்றம் வீரபத்திர கோயிலடி, கோப்பாய்' என்னும் விலாசத்தில் நேரிலோ அன்றித் தபால் மூலமோ தொடர்புகொண்டு விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

*வீரபத்திரர் கோயிலடி,*
*கோப்பாய்.*

*வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம்.*

## மரண அறிவித்தல்கள்



### பேதுறு சிங்கராஜா

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், குடாரப்பை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பு மோதரையில் வசித்தவருமான பேதுறு சிங்கராஜா 08.01.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுறு - மதலேனம் தம்பதியரின் அன்பு மகனும், சிசிலியம்மாவின் அன்புக் கணவரும் நல்லம்மா, செல்லம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், மேரி மெக்டலின், அமல தாஸ், ஜெயசீலன், செலின் ஞானறூபி, ஞானசீலன், மேரி கிறேஸ், அல்வின்றாஜ், மேரிமெலானி, ஸ்ரெலாறாணி ஆகி யோரின் அன்புத் தந்தையும் பேபிறாஜா, அரியமலர், சுதா கரன், றெக்சலகுமார், பிறின்சியா ஆகியோரின் அன்பு மாமனும் ஸ்ரெபான், டயன், அலன்ரா, அலெக்ஸ், டில்ஷான், றொசானி, யூலியான், ஜக்ஷன் ஆகியோரது பேரனுமாவார்.

அவரது பூதவுடல் இன்று (10.01.2011) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு நெல்லியடி கிழக்கு முடக்காட்டில் உள்ள அவரது மகனின் வீட்டில் இருந்து எடுத்துச் செல் லப்பட்டு, பூதவுடல் நெல்லியடி புனித அந்தோனியார் கோயி லில் இறுதி வழிபாட்டுடன் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

நெல்லியடி கிழக்கு,
முடக்காடு,
கரவெட்டி.

*தகவல்:*
*சிங்கராஜா அமலதாஸ் (மகன்)*
*சிங்கராஜா ஜெயசீலன் (மகன்)*
*தொ.பே. 0778080939.*



### சின்னப்பு பிரணவநாதன்

யாழ்ப்பாணம், அரியாலை, நீர்நொச்சித் தாழ்வைப் பிறப்பிடமாகவும், சிட்னியை வதிவிடமாகவும்கொண்ட சின்னப்பு பிரணவநாதன் கடந்த 06.01.2011 வியாழக்கிழமை சிட்னியில் சிவபதமடைந்தார்.

அன்னார் கமலநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், மயூரன், லோஜனா, அமலன், மோகனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாசலதேவா, குமுதினி, கிரிஜா, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனும் கோகுலன், திரிவேணி, ஜனனி, ஹரிஹரன், சௌமியா, மகனியா, அனிதா ஆகியோரின் அன்புப் பேரனும், புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, பாலசிங்கம், சண்முகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ருக்மணி செல்லப்பா, தவஞானம், சரஸ்வதி, மற்றும் டாக்டர் பாக்கியலட்சுமி, சின்னையா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2011) திங்கட்கிழமை 4 Brooklyn St., Strathfield South NSW 2136இல் நடைபெற்று, பூதவுடல் Rookwood மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகள் :
61296427837,
61418442674.

*தகவல்:*
*பி. மயூரன்,*
*கு. கருணாசலதேவா.*

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்.வண்ணை, மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

## எஸ்.எம்.எஸ். மூலம் அடையாள அட்டை விவரம் பெறலாம்

கொழும்பு, ஜன.10

தேசிய அடையாள அட்டைகள் பற்றிய விவரங்களை கையடக்கத் தொலைபேசிகளில் குறுஞ் செய்திகள் (எஸ்.எம்.எஸ்.) மூலம் தெரிந்து கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஆள்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

17ஆம் திகதி முதல் இது நடைமுறைப் படுத்தப்படும்.

தங்கள் விண்ணப்பத்திர இலக்கத்தை கையடக்கத் தொலைபேசி மூலம் 1919 என்ற இலக்கத்துக்கு குறுஞ் செய்தி மூலம் அனுப்புவதன் மூலம் அந்த விண்ணப்பம் பற்றிய தகவல் உடனடியாக பரிமாற்றம் செய்யப்படும்.

விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் அவற்றின் நிலைமைகளைத் தெரிந்துகொள்ள ஆள்பதிவுத் திணைக்களக் காரியாலயத்துக்கு வரும் சிரமங்களைக் குறைப்பதற்காகவே இந்த குறுஞ் செய்தி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)

## தனியார் பஸ்கள் வேலை நிறுத்தம்

மேல் மாகாணத்தில் இன்று நள்ளிரவு முதல் தனியார் பஸ்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட உள்ளன.

மேல் மாகாணத்தில் 20 சதவீதமான அனுமதிப்பத்திரங்கள் வழங்கல், நேர அட்டவணை பிரச்சினை உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்தே இப் பணிப் பகிஷ்கரிப்பு இடம்பெறுகின்றது.

இது தொடர்பாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஆறாம் திகதி நாம் மேல் மாகாண வீதி போக்குவரத்து அதிகாரசபை அதிகாரிகளுடன் இதுதொடர்பில் பேச்சு நடத்தினோம்.

அவர்கள் ஒரு கோரிக்கையை மட்டுமே நிறைவேற்ற ஒத்துக்கொண்டனர். இதனாலேயே பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட தீர்மானிக்கப்பட்டது - என்றார். (ஓ-சி)


## விற்பனைக்குண்டு

ரோயாற்றா கமரி கர் ஓட்டோ கியர் 64 XXXX (டீசல்) விற்பனைக்குண்டு.

தொடர்பு - 0778114579.

## தேவை

கட்டடப் படவரைஞர் AUTO CAD மூலம் கட்டடப் படங்கள் கீறக் கூடியவர்கள் தேவை. யாழ். நகரத்துக்கு அண்மையில் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 4107,
C/O, உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## தவறிவிட்டது

நுணாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியுடைய நடேசு பிரபாஸ்கரன் என்பவரது தே.அ.அ. (633600066V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், தொழில் அடையாள அட்டை வங்கி ATM அட்டை அடங்கிய பிறவுன் நிற பேர்ஸ் ஒன்று கடந்த 03.01.2011 அன்று சாவகச்சேரி நகர்ப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஸ்ரீ முத்துமாரி அம்மன் மரத்தளபாட தொழிலகம், கண்டி வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


## Short Period Success

'குறுகிய காலத்தில் முகாமையாளராக வேண்டுமா' இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். சாவகச்சேரியில் அமைந்துள்ள Innovage (Multi-National) கம்பனிக்கும் அதன் கிளைகளுக்கும் முகாமைத்துவத்துக்கான வெற்றிடங்கள் உள்ளன. தாங்களும் O/L, A/L சித்தி பெற்றவராயின் தொடர்புகொள்ளலாம். சர்வதேச ரீதியான பயிற்சியுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- Udaya:- 0717494735, Srikanth:- 0770771377.


"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## "அருள் - அமுதம்"

### ஆண்டு மலர்

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறிமன்ற முதலாவது ஆண்டு 'அருள் அமுதம்' சஞ்சிகை வெளிவந்துள்ளது. ஆன்மிக, ஆய் வுரைக்கட்டுரைகள் அடங்கியது. விலை ரூபா 150/-. சமய நிறுவனங்கள், நூலகங்களுக்கு விலைக் கழிவுண்டு. தேவை யானோர், *"வலி.கிழக்கு சைவசமய அருள்நெறிமன்றம், வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய்"* என்னும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள லாம்.

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம்,
கோப்பாய்.

(108807)

## இதய அஞ்சலிகள்

எமது நண்பி *பூமகள் வடிவேலு* அவர்களின் அன்புத் தாயார்

*திருமதி வடிவேலு செல்லமுத்து (செல்லம்)*

அவர்களின் மரணச் செய்தி கேட்டு பிரிவால் துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.

தகவல்:
நண்பர்கள் : ப.உமையவேள்,
இ.சிவப்பிரியா, இ.தமயந்தி, செ.சர்மிளா.

(சி/574493)

## மரண அறிவித்தல்கள்



### வல்லிபுரம் செல்லத்துரை

RTD. HEADGUARD *(இராமலிங்கம்)*

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லத்துரை 06.01.2011 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற அம்மாப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னக்குட்டி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சுப்பிரமணியம், மாணிக்கம், துரைராஜா ஆகியோரின் சகோதரரும் லோகேஸ்வரி, செல்வேந்திரராஜா (கனடா), ரவீந்திரராஜா (பிரான்ஸ்), அனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஸ்ணகுமார் (ஓய்வு பெற்ற அதிபர், யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்), லலிதாராணி (கனடா), ஆன்மரின் (பிரான்ஸ்), சேந்தன் (ஆசிரியர், யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமனும் மைதிலி சுகந்தன், பிரசன்னா (லண்டன்), காவேரி (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), சிந்துஜா, நிருஜா, வினுஜா (கனடா), ஸ்ரீபன் (பிரான்ஸ்), கௌரீசன் (மாணவன், யா/ ஹாட்லிக் கல்லூரி), பைரவி, கேசிகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2011) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணிக்கு தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு.

*தகவல்:*
*குடும்பத்தினர்.*



### மாரிமுத்து கனகசபை

*(சின்னண்ணன் - சின்னத்தம்பி மெக்கானிக் - உரிமையாளர் - கணேசன் மோட்டர்ஸ்)*

குமாரசாமி வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் ஆத்திசூடி வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து கனகசபை கடந்த (08.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*154/21, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

*தகவல் :*
*குடும்பத்தினர்.*

### தம்பிராசா தங்கம்மா



காரைநகர், களபூமி, கரப்பிட்டியந்தனையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா தங்கம்மா நேற்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாவகச்சேரி சண்முகம்-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கந்தையா-அமுதம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும் நேசரத்தினம், தனலட்சுமி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருஸ்ணகுமார் (இத்தாலி), சிவகுமார்(இத்தாலி), சாந்தகுமார்(லண்டன்), பத்மா(ஜேர்மனி) புனிதலோகேஸ்வரி (காரைநகர்), காலஞ்சென்ற சண்முகலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் உருக்குமணிதேவி, நாகேஸ்வரி, நவரத்தினம், பாலகிருஸ்ணன், காலஞ்சென்ற லோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மயூரன், கண்ணன், பிரதீபன் (இத்தாலி), சுதாகரன், செந்தூரன்(லண்டன்), ஜீவரத்தினம், கிருசாந்தினி, காலஞ்சென்ற சசிதரன் மற்றும் கிருசாந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரப்பிட்டியந்தனை,*
*களபூமி,*
*காரைநகர்.*

(108899)

*தகவல்:*
*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் An ISO 9001:2000 Certified Company
Spoken English பயிற்சிகளைக்.
veta®
Experts in English Training
Come, let's speak fluent English
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான...
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி |
| --- | --- |
| 10/1/2011 - 9.00 a.m.&3.30 p.m. | 10/1/2011 - 9.00 a.m&3.30 p.m |
| 14/1/2011 - 9.00 a.m.&3.30 p.m. | 14/1/20119 - 9.00 a.m.&3.30p.m |
| 16/1/2011 -10.00 a.m.&3.00 p.m. | 16/1/2011 - 9.00 a.m &2.30 p.m |

நவீன நுட்பங்களுடன் ஆங்கிலம் பேச பயிலலாம்.
DMI COMPUTER EDUCATION
NO. 1B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel.: 021-226 2470

# இரண்டாம் ஆண்டு நினைவு தினம்



## மாணிக்கவாசகர் நித்தியானந்தம்

ஏழாலை தெற்கு.

களபாவோடை, ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்.

## வலி.வடக்கு மீளாய்வுக் கூட்டம்

குருநகர், ஜன.10

வலி.வடக்குப் பிரதேச மட்ட முன்னேற்ற மீளாய்வுக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.வடக்குபிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வலி.வடக்குப் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

(201-51)

A New Way for Starting Your Child's Education
LITTLE CHUTTYS' MONTESSORI
A home away from home
அனுமதிகள் இன்று முதல்
புதிய தவணை ஆரம்பம்- 17.01.2011
வயது - 3முதல்
Medium of instruction- English and Tamil
completely managed under the montessori concept with sensorial materials designed by Dr.Maria Montessori, along with Exercises for practical life, Educational Videos, Annual Concerts, etc., etc.
Totally a different place for your chutty's placement.
No.05, Brodie Front Lane,
Kandy Road, Jaffna. Telephone: 0718262603, 0715357592

## தவறிவிட்டது

வல்லைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் சிறிய Bag ஒன்று கணக்குக் கோப்பி உடனும் உறுதி போட்டோ பிரதிகளுடனும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். 0776126089.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமேஸ்வரி அஞ்சலோ



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை, சுன்னாகத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி அஞ்சலோ விமலகுலேந்திரன் நேற்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - இலங்கநாயகி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான றிச்சாட் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் அஞ்சலோ விமலகுலேந்திரனின் (லங்கா சிமெந்து நிறுவனம்) அன்பு மனைவியும் தங்கக்கிளி, கௌரி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவதாஸின் (பிரான்ஸ்) அன்பு மைத்துனியும் பிரியா, சிந்து, சினேகா (பிரான்ஸ்) ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2011) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்த ரோடை, சங்கம்புலவு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஸ்கந்தவரோதய கல்லூரி முன்பாக,*
*Dr. சுப்பிரமணியம் வீதி,*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.*

(108963)

தகவல் : **கணவர்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



*பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் சிரேஷ்ட முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்ற*

லயன்

## எம்.பரமானந்தம்

*அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம். மேலும் பல பதவி உயர்வுகள் கிட்டவும், பணிகள் சிறக்கவும், பல்லாண்டு நலமாக வாழவும் இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.*

வாழ்த்துவதில் பூரிப்படையும்
வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினர்கள்

*(சி/574492)*

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சங்கரப்பிள்ளை மகேஸ்வரி (சிறிமா)



கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை மகேஸ்வரி நேற்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2011) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீலங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கருங்காலி,*
*காரைநகர்.*

*(108961)*

தகவல் : **நித்தி (மகன்)**

## திருமதி அற்புதராசா சறோஜாதேவி



சூசையப்பர் கோயிலடி, கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அற்புதராசா சறோஜாதேவி நேற்றுமுன்தினம் (08.01.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் அற்புதராசாவின் அன்பு மனைவியும் கொன்சபின் (30-8242 வாகன உரிமையாளர்), கொன்சலின் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2011) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சூசையப்பர் சேமக்காலையில் இறுதி அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சூசையப்பர் கோயிலடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

*(சி/574498)*

தகவல் : **குடும்பத்தினர்.**

## அந்தோனிமுத்து விமலதாசன்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் குளமங்கால், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து விமலதாசன் (பாப்பா) என்பவர் நேற்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஆன்பெலிசியாவின் (ஆசிரியை மகாஜனாக் கல்லூரி) அன்புக் கணவரும் பெனிற்றா (ஏஞ்சல் சர்வ தேச பாடசாலை தரம் 2, மானிப்பாய்), புறுனோ ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*குளமங்கால்,*
*மல்லாகம்.*
*தொ.பே. 0213218698*

தகவல்: *ஆன்பெலிசியா (மனைவி)*

# பாராட்டி வாழ்த்து



*உண்மையும் நேர்மையும் மிக்க சமூக சேவையாளராகவும், பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றிய அதிபர்*

உயர்திரு

## புண்ணியமூர்த்தி ஸ்ரீவிக்கினேஸ்வரன்

*அவர்கள் பதவிநிலை உயர்வுபெற்று காரைநகர் கோட்டக் கல்வி அதிகாரியாக நியமனம் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*காடுகள் பலவும் வெட்டிக் கழனிகள் ஆக்கல் போல*
*பாடுகள் பலவும் பட்டுப் பள்ளிகள் பல உயர்த்தி*
*நாடுகள் போற்றுகின்ற நற்கல்வி பெற்றிருந்தும்*
*தேடுவார் அற்றோர் தம்மைத் தேடிப் பல பணிகள் செய்து*
*வீடுண்டு மனையுண்டு மக்களுண்டு என்றிருந்தும்*
*நாடுண்டு மக்களுண்டு என்றெண்ணி நடந்துவந்த*
*ஈடுஇணை இல்லா எங்கள் ஸ்ரீவிக்கினேஸ்வரப் பெருந்தகையோன்*
*காரைநகர் கோட்டக் கல்வி அதிகாரியானார் வாழ்த்துகின்றோம்.*

கோட்டக்கல்வி அதிகாரி அவர்களை
மனம் மகிழ்ந்து வாழ்த்தும்
மூளாய், தொல்புரம் வாழ் மக்கள்

மூளாய், தொல்புரம்,
சுழிபுரம்

*(சி/574490)*

# "வாழ்க - வளர்க"



கலாநிதி - பேராசிரியர்

## திரு. மா. வேதநாதன்

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி திரு.மா.வேதநாதன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைப் பேராசிரியராக உயர்வு பெற்றதையிட்டு அவரது தலைமைத்துவத்தையும், உள்ளத்தின் உயர்வையும், சேவையின் தரத்தையும், ஆத்மீக சிந்தனைகளையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர்கள் சேவை மேலும் பார்வதி பரமேஸ்வரன் திருவருளால் வளர்க - வாழ்க என பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

**சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்,**
தலைவர்,
வலி.கிழக்கு சைவசமய அருள் நெறி மன்றம்,
கோப்பாய்.

பிரதம குரு,
ஸ்ரீபார்வதி பரமேஸ்வரன் ஆலயம்,
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

*(சி/574489)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்துறைப் படிப்பகம் ... சபை, யாழ்ப்பாணம்

## புலிகளின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிடம் தொலைபேசி ஊடாகப் பரிமாறிக் கொண்டுள்ளது என அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இந்த விடயம் குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, நோர்வே அரசிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

## கொழும்பு - தூத்துக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல்களும் சேவையில் ஈடுபடுத்தப்படும். இலங்கைத் தரப்பில் கப்பல் கூட்டுத்தாபனம் கப்பல்களை இயக்கவுள்ளது.

ஒவ்வொரு கப்பலிலும் 300 - 400 வரையிலான பயணிகளை ஏற்றிச் செல்லும் வசதிகள் இருக்கும். அத்துடன் பயணிகள் ஒவ்வொருவரும் 100 கிலோ எடையுள்ள பொருள்களை கொண்டு செல்வதற்கும் அனுமதிக்கப்படுவர்.

விமானப் பயணச்சீட்டுக்கான கட்டணத்தை விடவும் 30 வீதம் குறைவான கட்டணம் இந்தச் சேவைக்கு அறவிடப்படும். சுமார் ஏழு மணி நேரம் பயணத் தூரம் கொண்ட இந்தச் சேவையின் போது கப்பலிலேயே உணவும் வழங்கப்படவுள்ளது. இரண்டாவது கட்டமாக இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவையும் இந்த ஆண்டு இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பேராதனையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் பிரதீப் கொலிப்பிலே கூறியவை வருமாறு:-

அத்தகவல்களில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

மண்சரிவு இடிபாட்டுக்குள் இரு சுவர்களுக்கு இடையில் ஒரு குழந்தை சிக்கிக்கொண்டது. அக் குழந்தைக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டு எதுவித காயங்களும் இன்றி காப்பாற்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவகின்றன.

இதேவேளை, அம்பிட்டிய மொனரகங்க மரியவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவில் பாதிக்கப்பட்ட இருவரில் 9 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும், மற்றையவர் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## மாநகர சபைகளின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி முடிவடைந்ததும் மேலும் ஒரு வருடத்துக்கு மாநகர சபைகள் செயற்படுவதற்கான அதிகாரத்தை ஜனாதிபதி மாநகர சபைகளுக்கு வழங்குவார். அவற்றுக்கு மார்ச்சில் தேர்தல் நடத்தப்படமாட்டாது.

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபைகள் இன்னும் இரண்டு வருடங்கள் தொடர்ந்து செயற்படும்.

மாநகர சபைகளுக்கு இப்போது தேர்தலை நடத்தினால், அவை மேற்கொண்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்படும் என்பதால் இன்னும் ஒரு வருடத்துக்கு மாநகர சபைகளுக்கான காலத்தை நீடிக்குமாறு மேயர்கள் ஒன்றியம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தது. அதற்கமையவே மேற்படித் தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்தார் - என்றார்.

இருப்பினும், அரசின் இத்தீர்மானத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. தேர்தல் நடைபெறும் பட்சத்தில் அதிகமான மாநகர சபைகளில் அரசு தோல்வி அடையும் நிலையில் இருப்பதே இதற்குக் காரணம் என்று ஐ.தே.கட்சி மேலும் கூறியது.

## 40 போராளிகளுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரணடைந்தவர்கள் பற்றிய தகவல் இல்லாதவர்கள் என பெருந்தொகையான பெண்கள் இங்கு கண்ணீர் மல்கக் கூடியிருந்தனர். இங்கு பல பெண்கள் தேம்பி அழுதவாறு சாட்சியமளித்தமை காண்போரை நிலை குலையச் செய்தது.

மன்னார் மாவட்டப் புலிகளின் சிறப்புத் தளபதியாக 1993ஆம் ஆண்டு காலப் பகுதியில் கடமையாற்றிய 'யாண்' என்ற இயக்கப் பெயரைக்கொண்ட அந்தோனிப்பிள்ளை ராயப்புவின் மனைவியான ஆர்.வெரோனியா சாட்சியமளிக்கும்போது தொடர்ந்து கூறியவை வருமாறு:-

எனது கணவர் 1993ஆம் ஆண்டுகாலப் பகுதியில் மன்னார் மாவட்டத்தில் புலிகளின் சிறப்புத் தளபதியாகப் பணிபுரிந்தார். 2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி நாங்கள் குடும்பத்துடன் முல்லைத்தீவுக்கு இடம்பெயர்ந்தோம்.

இராணுவத்தினர் அப்போது முல்லைத்தீவுப் பகுதியில் புலிகள் இயக்க உறுப்பினர்களைச் சரணடையும்படியும், சரணடைபவர்கள் முறையாக கவனிக்கப்படுவார்கள், புனர்வாழ்வளிக்கப்படுவார்கள் என்றும் ஒலிபெருக்கி மூலம் தொடர்ந்து அறிவித்துக் கொண்டி ருந்தனர்.

2009 மே மாதம் 18ஆம் திகதி எனது கணவர் அந்தோனிப்பிள்ளை ராயப்பு உட்பட புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் 40 பேர் முல்லைத்தீவு பங்குத் தந்தை வண. பிதா பிரான்சிஸ் ஜோசப்புடன் சென்று இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். புலிகளின் முக்கிய உறுப்பினர்களான இளம்பருதி' குமரன், ஈழ வன், ரூபன், பாபு, வேலவன் ஆகியோரும் சரணடைந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

அவர்கள் எமது கண்ணெதிரே பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர். பின்னர் நாங்களும் பிறிதொரு பஸ்ஸில் ஏற்றிச்செல்லப்பட்டோம். ஓமந்தைக்குக் கொண்டுச்செல்லப்பட்ட நாங்கள் அங்கு இறக்கப்பட்டோம். ஆனால், எனது கணவர் உட்பட ஏனைய போராளிகள் அங்கு அழைத்து வரப்படவில்லை. அன்று முதல் இன்று வரை எனது கணவர் எங்கு இருக்கின்றார், எந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார், அவர் உயிருடன் இருக்கின்றாரா, இல்லையா என்பது குறித்து எதுவும் தெரியவில்லை.

இந்த ஆணைக்குழு அவர் எங்கு இருக்கின்றார் என்பதை அறியத்தர வேண்டும். எனக்கு இரு பெண்களும், ஒரு ஆணுமாக மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். மூவரும் பாடசாலை செல்லும் வயதினர்.

- இவ்வாறு அந்த இளம் தாய் அழுது புலம்பியவாறு நல்லிணக்க ஆணைக்குழு முன் வேண்டுகோள் விடுத்தார்.

(உ-சி)

## கசூரினா சென்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அந்தோனிமுத்து விமலதாசன் (வயது 43) என்பவரே உயிரிழந்தார்.

(ஒ-10)

## நாட்டின் பல பகுதிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் மண்சரிவு அபாயப் பிரதேசங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இப் பிரதேசங்களில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும், இவர்களுக்குத் தேவையான வசதிகள் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மாவட்ட காரியாலயத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

**முப்படையினரின் உதவி**

கிழக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் மீண்டும் ஆரம்பமான கடும் மழையினால் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் வெள்ளாவெலி பிரதேசத்தில் சில இடங்களில் மக்கள் வீடுகளின் கூரைகளின் மீது ஏறி நிற்கின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்குத் தேவையான உதவிகள் மற்றும் மீட்புப் பணிகளில் முப்படையினரை ஈடுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது. தேவை ஏற்படின், ஹெலிக்கொப்டர்களைப் பயன்படுத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளனர்.

**பாடசாலைகளுக்கு விடுமுறை**

சீரற்ற காலநிலை தொடர்வதால் மத்திய மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குமாறு மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

அதேபோன்று கிழக்கு மாகாணங்களிலும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒரு வார கால விடுமுறை வழங்குமாறு நேற்று இடம்பெற்ற கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது. பாடசாலைகளிலேயே பாதிக்கப்பட்ட ஏராளமான மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடை மழை காரணமாக நீர்த் தேக்கங்கள், குளங்கள் என்பவற்றின் நீர் மட்டம் அதிகரித்து வருவதனால் வான் கதவுகள் திறந்து விடப்படும் அபாயம் உள்ளது. இதனால் கரையோரம் மற்றும் தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட இவர்களுக்கு இதுவரை எந்தவித நிவாரணப் பொருட்களும் வழங்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஒ-சி)


Receptionist Vacancy



Wanted a receptionist Fluent in English and Tamil.

Experience in a similar capacity preferred.

Knowledge of Spoken Sinhala will be added qualification.

Call over with Certificates

Walk in Interview : 12.01.2011 (2.00 pm - 5.00 pm)

Hotline : 021 492 2743

IIS CITY CAMPUS

200,Sivan Pannai Road, Jaffna

Tel:-021 222 8060 Fax:-021 222 6933

Web:- iis.edu.lk Mail :info@iis.edu.lk


## மரண அறிவித்தல்

### திருமதி வல்லிபுரம் சிவகாமி



கொல்லங்கலட்டி, இன்னாவத்தையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கில் வசித்தவருமான வல்லிபுரம் சிவகாமி நேற்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் , காலஞ்சென்றவர்களான கந்தையா- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான முருகர்(கண்ணர்)- லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தவமணி மற்றும் பாலசிங்கம் ஆகியோரின் அன்புத் தயாரும், ரவிந்தனின்(நோர்வே) அன்புப் பேர்த்தியும் கனகரத்தினம், சத்தியதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லக்குட்டி மற்றும் சின்னத்துரை, அப்புத்துரை, இராசாத்தி (கனடா), அப்பையா, சுப்பிரமணியம், செல்வபாக்கியம், காலஞ் சென்ற தியாகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2011) திங்கட்கிழமை பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில், கட்டை ஆலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடிப் பிள்ளையார் கோயிலடி,*
*கோண்டாவில்கிழக்கு,*
*கோண்டாவில்,*

*தகவல்:*
*பாலசிங்கம் (மகன்).*
0771600642

(9574475)


உயிரியல் 2013

ஆரம்பம் 12.01.2011

உயர் கலைக் கல்லூரி

மீசாலை

K.Suthakaran B.sc with Ed. T.P.0774012800

வீடு வாடகைக்கு

யாழ்.நகரில் சகல வசதிகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்கு வழங்கப்படும். நிறுவனங்களுக்கு மட்டும் கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: 0779932630

சனோ வெளியீடு

தரம் 4, 5 புலமைப்பரிசில் வினாத்தாள்கள் மிகவிரைவில் வெளிவரவுள்ளன. வினாத்தாள்களைப் பெறவிரும்பும் பாடசாலைகள் உடனடியாக தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

✱ மாணவர்கள் தபால் மூலமும் வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

முகவரி :
ப.சந்திரமோகன்,
வீரசிங்கம் வீதி,
சாவகச்சேரி.

தொலைபேசி:
0212270313
0779232555

(108893)

கட்டட வேலைகள் செய்துகொடுக்கப்படும்

வீடு கட்டுதல், திருத்துதல், குளியலறை கட்டுதல், மாபிள் பதித்தல், சுற்றுமதில் கட்டுதல், வர்ணம் பூசுதல், Electric வேலைகள், Plumbing வேலைகள் அனைத்தும் தரமாகவும் நியாயவிலையிலும் செய்துகொடுக்கப்படும்.

AXSHAYA CONSTRTUCTION, JAFFNA.

தொ.பே : 0776679564, 0213207202, 0213218088

SPOT ADMISSION

இறுதிச்சந்தர்ப்பம்!

IELTS தேவையில்லை

Study in the United Kingdom

March/April Intake is in Progress

2011ல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறைகளுக்கு முன்னர் உங்கள் Student Visa ஐ உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

பல கல்லூரிகளின் பல பிரதிநிதிகள் வருகைதந்து IELTS இல்லாமல் ஒரே நாளில் அனுமதிகள் தரவுள்ளனர்.

உங்கள் கல்விசார் ஆவணங்கள், சுயவிபரக்கோவையுடன் சமூகமளித்து இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்

இடம்: BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane (Off Stanley Road) Jaffna. (above Cosy Hotel & Near Ariyakulam Junction)

காலம்: 12th & 13th - January, 2011
From : 10.00 am to 4.00pm

Eisc EXPRESS

INTERNATIONAL STUDIES & CONSULTANTS

30-1/14, W.A. De Silva Mawatha (Above Hotel Saravana Bavan)
Colombo 6. Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com
Robin: 0777 222 422 Selva: 0714 299 935
Web: www.expresslanka.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org